# கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் அறையப்பட்டாரா?

ஃபாரிஸ் அல்-குவேராவானி





**CHRISTHU MAIYAGAVE SILUVAYIL ARAIYAPPATTARA?**
(TAMIL)

By
**Faris Al-quaravani**

All rights strictly reserved. No part of this publication may be translated or transmitted on an form or by an means electronic of mechanical, including photocopy, recording or any information storage and retrieval system without permission in writing from the publisher.

## பொருளடக்கம்

**முன்னுரை**

**அத்தியாயம் ஒன்று** 10

**கிறிஸ்து சிலுவையிலறையப்படக் காரணங்கள்**

சிலுவை மரணத்துக்கான நியாய வாதங்கள்

நீங்களே தீர்ப்பளியுங்கள்

ஒரு பொய்க்காக மரிப்பதா?

நேர்முகச் சாட்சிகள்

தர்க்க ரீதியிலான சான்று

தெளிவில்லாதவை ஆறு -

(அல்-ராசியின் பிரதியுத்திரங்கள்)

அல்-ராசிக்கு எங்கள் பதில்

கடவுளின் துரோகம் அல்லது வஞ்சகம்

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

கிறிஸ்தவ சபையின் சக்தி

**சிலுவை மரணத்துக்கு வேதாகமக் காரணங்கள்** 46

பிராயச்சித்தம் செய்தல். ஒப்புரவாக்குதல் அல்லது

ஈடுசெய்தல்

தீர்க்கத்தரிசனங்கள்

**அத்தியாயம் இரண்டு - வரலாற்று ஏடுகள்** 57

அந்நிய ஜாதியாரின் பதிப்பேடுகள்

பொந்தியு பிலாத்துவின் நடபடிகள்

யூதர்களின் பதிப்பேடுகள்

தால்முத்

“நாஸ்டிக்குகளின்” எழுத்துக்கள்

கிறிஸ்தவ ஆவணங்கள்

கூடுதலான சான்றுகள்

**அத்தியாயம் மூன்று** 82

**இஸ்லாமில் கிறிஸ்துவின் சிலுவை**

இஸ்லாமிய அறிஞர்களின் கருத்து

முடிவுரை

**சரியான வியாக்கியானம்**

**வினா - விடை**





## முன்னுரை

கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையில் ஆக்ரோஷத்தையும். வெறுப்புணர்ச்சிகளையும், கோபதாபங்களையும், கிளறி விடுவது இந்த ஆராய்ச்சியின் நோக்கமன்று. பகைகள், பிரிவினைகள், தப்பெண்ணங்கள், இனவெறிகள், தீவிர வாதங்கள், வன்செயல்கள் ஆகியவற்றால் ஏற்கனவே களங்கப்படுத்தப் பட்டுள்ள, இவ்வுலகில் மேலும் இவற்றிற்குத் தூபம் போடும் நச்செண்ணம் நமக்கில்லை. முரண்பாடான கருத்துக்களும், சிக்கல்களும் நிறைந்த கிறிஸ்துவின் சிலுவை மரணம் என்ற முக்கியமான பிரச்சனைக்கு தீர்வு காண்பதே எமது தலையாய நோக்கம். இவ்விரு சமயங்களுக்கும் இடையிலுள்ள மையக் கருத்து வேற்றுமை இந்த சம்பவமேயாகும். சரித்திர பூர்வமான, சமயச்சார்புடைய, மற்றும் நியாய வாத அடிப்படையிலான ஆதாரங்களின் வாயிலாக பரிசுத்த வேதாகம நற்செய்தி நூல்களின் மூலமாக வெளிப்படும் தெய்வீக உண்மையை பாரபட்சமற்ற. நடுநிலைக் கண்ணோட்டத்துடன் நிலைநிறுத்த முயற்சிக்கின்றோம். அத்துடன் நமது இஸ்லாமிய நண்பர்களின் உள்ளங்களை மூடியிருக்கும் சந்தேகம், புறக்கணிப்பு எனும் மேகமந்தாரத்தை, மூடுதிரையை அகற்றவும் உதவுகிறோம். பிரதானமாக, நாம் பகுத்தறிவை திருப்தி செய்ய ஆசித்தாலும், கிறிஸ்தவ விசுவாசிகளின் நம்பிக்கை,விசுவாசம், சத்திய ஒளி ஆகியவற்றை ஆழப்படுத்தவும், அகலப்படுத்தவும் தேவையான உறுதியான கருவிகளையே வழங்குகிறோம்.

சிலுவை தான் கிறிஸ்தவ சமயத்தின் மையப் போதனை என்பதில் ஐயமில்லை. மனிதனின் நித்திய நல்வாழ்வு, இறைவனோடு இணைக்கும், பாவநிவர்த்தி செய்யும் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை மட்டுமே சார்ந்திருக்கிறது என்று பைபிள் தெளிவாக சுட்டிக் காட்டுகிறது. இதனையே கிறிஸ்தவம் போதிக்கிறது. இதனையே கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர்.

இஸ்லாமோ சிலுவையின் முழு உபதேசத்தையும் புறக் கணிக்கிறது. இந்த சிலுவை இல்லாமல், சர்வ சக்தியுள்ள கடவுள் மனிதனுடைய பாவங்களை மன்னிக்க மாட்டார் என்ற கூற்று பகுத் தறிவுக்கு விரோதமானது என்று முஸ்லிம்கள் வாதாடுகின்றனர். இப்படிக் கூறுவது இறைவனுடைய வல்லமையை வரையறுப்பதாகும். தனது கதியற்ற நிலைமையை உணர்ந்து மனங்கசந்து இறைவனிடம் மன்னிப்புக்கோருபவனுக்கு இறைவனின் எல்லையற்ற இரக்கமானது மன்னிப்பளித்து குர்-ஆனில் வர்ணிக்கப்பட்டுள்ள பரதீசின் பாக்கியங்களுக்கும் இன்பங்களுக்கும் ஆளாக்குகிறது என்கின்றனர்.

இவ்விரு கண்ணோட்டங்களும் அல்லது கருத்து வேற்றுமைகளும் கிழக்குக்கும் மேற்குக்கும் உள்ள தூரம் போல அல்லது தென்-வட துருவங்களைப் போல முரண்படுகின்றன. இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்றும், அவருடைய மரணத்தில் தனக்கு மன்னிப்பும் மீட்பும் உண்டு என்றும் விசுவாசிக்கின்ற கிறிஸ்தவன் சிலுவையில் நித்திய ஜீவனுக்குரிய உத்தரவாதத்தைக் காண்கிறான். தேவன் தம்முடைய அன்பு. கிருபை, இரக்கம், நீதி முதலானவற்றை





கிறிஸ்துவின் சிலுவையில் உருவகப்படுத்தியுள்ளார். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டென்று மெய்யாகவே! மெய்யாகவே! உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவான் 6:47) என்ற கிறிஸ்துவின் வாக்குறுதி இதற்கு மூலாதாரமாக இருக்கின்றது.

இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களை முன்னிட்டு ஒரு கிறிஸ்தவன் தனக்கு நிச்சயமாகவே நித்திய ஜீவன் உண்டு என்ற பரமதிருப்தியுடன் வாழலாம். இந்த உறுதிப் பாட்டில். "தேவனுக்குச் சித்தமானால் " அல்லது "இறைவன் இரக்கம் புரிவானென்றால் " போன்ற சொற்றொடர்கள் இடம் பெறுவதில்லை. இவையெல்லாம் சந்தேகத்திற்கிடமான வாசகங்களாகையால் ஒரு விசுவாசியின் நம்பிக்கையைத் தகர்ப்பதாக உள்ளன. இவை கனியுள்ள நிலைமாறாத விசுவாசத்துக்கு வழிவகுப்பதில்லை.எனவே, தனக்கு முன் கூட்டியே பாவமன்னிப்பை கிறிஸ்து சம்பாதித்து விட்டார் என்ற இறுமாப்பில் மனம் போல வாழ்வதற்கும். அக்கிரமங்களில் உழல்வதற்கும் அத்துமீறிய உரிமம் வழங்கப்பட்டிருப்பதாக எவரும் அர்த்தப்படுத்தக் கூடாது. கிறிஸ்தவ விசுவாசம் கோருகிற உயர்ந்த நீதிநெறியும், கிறிஸ்துவைப்போன்றதொரு பரிசுத்த வாழ்க்கையையும் கொண்டிருப்போரே நித்திய ஜீவனை நாடுகிறவர்களாவர். கிறிஸ்துவுக்குள்ளிருக்கிறவன் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழாதவன் இன்னும் தேவ கோபாக்கினைக்குப் பாத்திரனாகவே இருக்கிறான் என்றாகும்.

இஸ்லாமில் இரட்சிப்பு என்பது இறையருளை அல்லது கடவுளின் தயவைப் பெறுதலையும் ஒருவரின் இடைவிடாத

முயற்சியையும் சார்ந்திருப்பதாகவும், "அல்லாஹ் விரும்பினால் அவருக்கு பரதீசின் ஆசீர்வாதங்கள், மகிழ்ச்சிகள், இன்பங்கள் கொடுக்கப்படும் என்றும் போதிக்கிறது. "எனவே கடவுளைப் பிரியப்படுத்த நம்பிக்கையுடன் அயராது விடா முயற்சியுடன் உழைக்க வேண்டும், புண்ணியங்களைச் செய்ய வேண்டும். கடவுளைப் பிரியப்படுத்தி விட்டேன், அவர் உவப்புடன் எனக்கு எல்லாம் ஈவார் என்று எந்த ஒரு முஸ்லீமுக்கும் ஒருபோதும் நிச்சயமில்லை.

கடவுளிடமிருந்து நற்பலனைப் பெறுவதற்கு நற்கிரியைகள் இன்றியமையாத மார்க்கம் என்று இஸ்லாமும். நற் கிரியைகள் அன்பு – விசுவாசத்தின் கனிகள், விளைவுகள் என்று கிறிஸ்தவமும் கூறுகின்றன. உடனடியாகவோ அல்லது எதிர் காலத்திலோ நற்கிரியைகளைச் செய்வதினால் கடவுளிடம் பலன் அல்லது வெகுமதி பெறலாம் என்று கிறிஸ்தவர்கள் நம்புவதில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இரட்சகரும், மீட்பரும், கர்த்தரும் (ஆண்டவருமாக) விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுகிற எவருக்கும் ஏற்கனவே நித்திய ஜீவன் கிறிஸ்துவின் சிலுவை மரணமாகிய பிராயச்சித்தப் பலியினாலே உத்தரவாத மளிக்கப்பட்டுள்ளது. இதுவே நித்திய ஜீவனை அடைய தவிர்க்க முடியாத நிபந்தனையாகும். விசுவாசத்தின் இந்த நிபந்தனை நிறவேற்றப்பட்ட மாத்திரத்தில் ஒரு கிறிஸ்தவன் இயல்பாகவே நற்செய்திகளாகிய கனியைக் கொடுக்கிறான். நீங்கள் நல்லவராகிறதற்குப் பிரயாசப்பட வேண்டியதில்லை; மாறாக, ஏற்கனவே நீங்கள் நல்லவராக, புதுச் சிருஷ்டியாக மாறிவிட்டீர்கள். ஆகிலும் விசுவாசத்தில்




அதிகமதிகமாக வளரவும், கிறிஸ்துவுக்கு நல்ல சாட்சியாக விளங்கவும், ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற்றம் அடையவும் அவசியமாயிருக்கிறது.

ஒரு ரோஜாப்பூ எவ்வித வற்புறுத்தலுமின்றி, இயல்பாகவே தன்னைச் சுற்றி நறுமணம் வீசுகிறது. அப்படிச் செய்தவற்கு அது முயற்சிப்பதில்லை. அதனுடைய சுபாவம் அல்லது தன்மையே நறுமணம் வீசுவது தான். ஆனால் ரோஜாச்செடி முழுமையாக வளர்ந்த பின்னர் தான், அநேக அழகான ரோஜா மலர்கள் மலருகின்றன. அங்ஙனமே, ஒரு மெய்க்கிறிஸ்தவன் பெற்றிருக்கும் புதிய ஜீவனின் இயல்பான தன்மையின் வெளிப்பாடு நற்கனிகளைத் தருவதேயாகும். பிரதிபலனை எதிர்பார்த்தோ அல்லதுநித்திய ஜீவனைப் பெறுவதற்காகவோ, தக்க வைத்துக் கொள்வதற்காகவோ அவன் இவ்வாறு முயற்சிக்கிறதில்லை; ஏனெனில் நித்திய ஜீவன் ஏற்கனவே இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் சம்பாதிக்கப் பட்டு விட்டது. ஆனால் அவன் இயல்பாகவே அல்லது சுபாவமாகவே நற்கனிகளைத் தருகிறான்.

இந்த ஆய்வில், கிடைக்கக்கூடிய எல்லா வரலாற்று அத்தாட்சிகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட குறிப்புகள் ஆகியவற்றின் ஆதாரத்தில் சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பாக சம்பவித்த சிலுவை மரணம் மறைக்கவோ, மறுக்கவோ முடியாத மெய்யான சரித்திர நிகழ்ச்சி என்பதனை நிரூபிப்பதுடன், சிலுவையிலறையப்பட்ட நபர் வேறு எவருமில்லை; அவர் இயேசு கிறிஸ்துவே என்றும் தெளிவுபடுத்துகிறோம். மேலும் மற்றெல்லா அபிப்பிராயங்களும் யூகங்களும் பயனற்றவை,

செல்லாதவை, சரித்திரத்துக்கு முரணானவை என்றும் நம்புகிறோம்.

“சிலுவை ”வரலாறு மற்றும் ஆவிக்குரிய சம்பவம் என்பதை உறுதி (அ) தெரியப்படுத்துவதன் உள்ளார்ந்த நோக்கம், நமது முஸ்லீம் நண்பர்கள் இந்நூலை விருப்பு வெறுப்பின்றி, திறந்த மனதுடன், உள்ளத்துடன், ஆவியுடன் வாசித்து மெய்ப்பொருளைக் காண வேண்டுமே என்ற ஆவல்தான். நம்முடன் உடனடியாக இசைந்து, இணைந்து இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தாமல், இந்த அடிப்படைக் கிறிஸ்தவ விசுவாசம் சரியா, தவறா, மெய்யா-பொய்யா என்று கண்டுபிடிக்கும் ஆவலைத் தூண்டுவதுதான். இஸ்லாமின் ஸ்தாபகர் கண்மூடித்தனமாகத் தனது மூதாதையரின் போதனைகளையும், நம்பிக்கைகளையும் ஏற்றுக் கொண்டிருப்பாரென்றால், குர்-ஆனின் அல்லாஹ்வை வழிபடாமல், மெக்காவிலுள்ள விக்கிரகங்களையே வணங்கி வந்திருப்பார். இல்லையா? ஆதலால், சிறிது நேரம் எடுத்து, இந்த சிறிய ஆய்வினைச் சோதித்துப் பார்த்த பின்னர் சிலுவையின் யதார்த்தத்தை அங்கீகரிக்கவோ, நிராகரிக்கவோ அன்புடன் அழைக்கிறோம்.





## அத்தியாயம் ஒன்று

# சிலுவையிலறையப்படக் காரணங்கள்

மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக கிறிஸ்து சிலுவையிலே நிறைவேற்றின மீட்பின் பணிதான் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தின் அச்சாணியாகும். இது மனிதர்களாகக் கூடித்திட்டமிட்டு செயல்படுத்தின ஒரு காரியமல்ல, இது மனுஷ யோசனையின் படி தோன்றினதல்ல, தேவனே இதை உருவாக்கினவரும், நிறைவேற்றினவருமாக இருக்கிறார். மனிதனுக்கு இதில் எந்தப் பங்கும், பெருமையும் , உரிமையும் கிடையாது.

கி.பி. ஏழாவது நூற்றாண்டில் இஸ்லாம் தோன்றின காலத்திலிருந்தே கிறிஸ்துவின் சிலுவை மரணமும், அவரின் உயிர்த்தெழுதலும் கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையில் சர்ச்சைக்குரிய பிரச்சினையாக இருந்து வருகின்றன. முஸ்லீம்கள் பொதுவாக இயேசு சிலுவையிலறையப்பட்டார் என்றோ அல்லது இயற்கையாய் மரணம் அடைந்தார் என்பதையோ மறுதலிக்கிறார்கள். (ஒரு சில இஸ்லாமிய அறிஞர்கள் மட்டும் இயேசு இயற்கையாக மரித்தார். ஆனால் கடவுள் அவரை உயிரோடு எழுப்பி, பரலோகத்தில் சேர்த்துக் கொண்டார் என்ற யூகத்துக்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள்) ஆனால் உலகத்தின் இரட்சிப்புக்காக கிறிஸ்து பிராயச்சித்த பலியாக சிலுவையிலே மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிரோடெழுந்தார் என்ற சத்தியத்தையே கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள். இங்ஙனம் இரு சாராரும் தங்களது வேதங்களையே மேற்கோள் காட்டி தாமே சரியென்றும், அடுத்தவரின் வேதம் பொய் புரட்டு என்றும்பரஸ்பர அவநம்பிக்கை கொண்டிருக்கின்றனர்.

கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதை முஸ்லீம்கள்





மறுப்பின் மூலமாக நிராகரிப்பதினால். மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேண்டும் என்பதும் அல்லது ஒரு இரட்சகர் தேவை என்ற அவசியமும் முழுமையாக ஓரங்கட்டப்படுகிறது. இரத்தஞ் சிந்துதலில்லாமலே மீட்பு கிடைக்கும் என்று அவர்கள் நம்புகிறார்கள். மனித மீட்பின் பணி இறுதியாக, நிரந்தரமாக, நித்தியமாக கிறிஸ்துவிலும் அவரது சிலுவை மரணத்திலும்நிறைவு பெற்றது என்பதை அவர்கள் அறவே ஏற்றுக் கொள்வதில்லை.

"..... இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது." (எபிரேயர் 9:22) என்று பைபிள் கூறும்பொழுது. மனித இரட்சிப்பின் அடித்தளத்தையே தகர்த்தெறியப் பார்க்கிறார்கள்.

இந்த கிறிஸ்தவ சத்தியத்தையே முஸ்லீம்கள் அனைவரும் வன்மையாக இகழ்ந்து, பழித்துப்பேசி, கண்டிக்கின்றனர். பாவமன்னிப்பு என்பது அல்லாஹ்வின் சித்தம், விருப்பம், இரக்கம் ஆகியவற்றைச் சார்ந்துள்ளது என்றும், பாவ உணர்வும் மனஸ்தாபமும், புண்ணியக் கிரியைகளுமே அவர்களுடைய மீறுதல்களினின்று மக்களை இரட்சிப்பதற்குப் போதுமானது என்றும் முஸ்லீம்கள் நம்புகின்றனர். (ஆதாரம்: அபு அமீனா, பிலால் பிலிப்ஸ்: மனந்திரும்புதலினால் இரட்சிப்பு ரியாத் தவ்ஹீத் வெளியீடு 1990) மேலும், கடவுளுக்கும் மனிதருக்கும் நடுவில் ஒரு மத்தியஸ்தர் தேவை என்பதையும் முஸ்லீம்கள் நிராகரிக்கின்றனர். அவர்களின் கூற்றுப்படி மனிதன் பிறக்கும்பொழுது பாவமறியாதவனாகப் (அ) பாவமற்றவனாகப் பிறக்கிறான் என்றும், பின்னர் அவனுடைய பலவீனம் அல்லது

குறைபாடுகளினிமித்தம் சரியான (அ) நேர் பாதையிலிருந்து வழி தவறிச் செல்கின்றானேயன்றி, பாவ சுபாவத்தோடு பிறந்திருப்பதினால் அல்ல. “இஸ்லாமிலும் கிறிஸ்தவத்திலும் மனிதனின் விழுந்து போன தன்மை ” என்ற ஷாஹித் சாமுவேல் அவர்களின் நூலில் தகுந்த ஆதாரங்களுடன் இந்த வாதம் சூன்யமாக்கப்படுகிறது.

இந்த ஆய்வின் அமைப்புக்குள்ளாகவே, இச்சந்தர்ப்பத்தில் இயேசு கிறிஸ்து சிலுவையிலே இரத்தம் சிந்தி மரித்ததும், பின்னர் மூன்றாம் நாளிலே உயிரோடெழுப்பப்பட்டார் என்றும் கிறிஸ்தவர்கள் அசைவில்லாமல் நம்புவதற்கான காரணங்களை இங்கு எடுத்தியம்புகிறோம்.

## சிலுவையில் அறையப்பட்டார் என்பதற்கு தர்க்கரீதியான காரணங்கள் (நியாய வாதங்கள்)

இயேசு கிறிஸ்துவின் மரணத்தை முடிவாகவும், முழுமையாகவும் முஸ்லீம்கள் நிராகரிப்பதற்கான ஒரே ஒரு குர்-ஆனின் வசனம் சூரத்-அல்-நிஸா 4:156-157 இல் காணப்படுகிறது:

وَقَوْلِهِمْ إِنَّا قَتَلْنَا الْمَسِيحَ عِيسَى ابْنَ مَرْيَمَ رَسُولَ اللَّهِ وَمَا قَتَلُوهُ وَمَا صَلَبُوهُ وَلَٰكِنْ شُبِّهَ لَهُمْ
وَإِنَّ الَّذِينَ اخْتَلَفُوا فِيهِ لَفِي شَكٍّ مِنْهُ مَا لَهُمْ بِهِ مِنْ عِلْمٍ إِلَّا اتِّبَاعَ
الظَّنِّ وَمَا قَتَلُوهُ يَقِينًا

இன்னும் “நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் தூதராகிய மர்யமின் குமாரராகிய – ஈஸா மஸீஹை கொன்று





விட்டோம் ” என்று அவர்கள் கூறுவதாலும் அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை. அவரை அவர்கள் சிலுவையில் அறையவுமில்லை. ஆனால் அவர்களுக்கு ஒருவன் ஒப்பாக்கப்பட்டான்; மேலும் (இவ்விஷயத்தில்) அபிப்பிராய பேதம் கொண்டவர்கள்.அதில் சந்தேகத்திலேயே இருக்கின்றார்கள். எவனும் யூகத்தைப் பின்பற்றுவதேயன்றி அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது; நிச்சயமாக அவர்கள், அவரைக் கொல்லவே இல்லை ”

இந்த ஏகாந்தமான ஒரே ஒரு வசனத்தைப் பிடித்துக் கொண்டு கிறிஸ்துவின் மரணத்தைப் புறக்கணிப்பது நியாயமற்றது ஏனெனில், இந்த வசனத்துக்கு முரண்பாடான அநேக வியாக்கியானங்கள் கூறப்படுகின்றன. இவ்வாறு முஸ்லீம்கள் கிறிஸ்துவின் மரணமும் உயிர்தெழுதலும் நிகழவேயில்லை என்றும், இது ஆரம்பகால கிறிஸ்தவர்களின் கண்டுபிடிப்பு என்றும் கூறுவது ஆச்சரியமாயிருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுக்கு.

## நீங்களே தீர்ப்பளியுங்கள்

என்று கூற ஏவப்படுகிறோம். முதலாவதாக, நீங்கள் ஒரு நீதிபதி என்றும், உங்களிடம் கிறிஸ்துவின் மரணத்தின் மெய்ப்பொருளைக் கண்டறியவும் என்று ஒரு வழக்கு கொண்டு வரப்படுவதாகவும்வைத்துக் கொள்வோம். இவ்விதமான ஒரு

வழக்கில் கிறிஸ்துவின் மரணத்தை நிரூபிக்க ஏராளமான உண்மையான சரித்திரச் சான்றுகளும், நூல்களும், பதிப்பேடுகளும். ஆவணங்களும் வைக்கப்படுகின்றன என்றும் கொள்வோம். இவற்றுள், கிறிஸ்துவுக்கும், ரோம கவர்னர் பிலாத்துவுக்கும் நடைபெற்ற சம்பாஷணையும், ஜனஹரீம் சங்க யூத மதத்லைவர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே நடைபெற்ற வாக்குவாதங்களும் நேர்முக சாட்சிகளின் வாக்குமூலங்களும்; அவரை விசுவாசிக்கும்போது அங்கே கூடியிருந்தவர்களின் பெயர் ஜாபிதாவும்; பின்னர் நடைபெற்ற காரியங்கள், கிறிஸ்து சிலுவையிலறையப்படுவதற்கு முன்னும், அறையப்பட்ட வேளையிலும், அதைத் தொடர்ந்தும் சம்பவித்த நிகழ்ச்சிகள் அனைத்தும் வீடியோ காட்சி போல்உங்கள் முன்னர் கொண்டு வரப்பட்டால், நீங்கள் என்ன தீர்ப்புக் கூறுவீர்கள்? இவ்வளவு அசைக்கமுடியாத, மறுக்க முடியாத ஆதாரங்களிருக்கையில், இதற்கு அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் வந்த ஒருவர் ஒரே ஒரு வரியில் இவையனைத்தும் ஆதிக்கிறிஸ்தவர்களின் மனோராஜ்யமே ஒழிய வேறல்ல என்று கூறி நிராகரிக்கத் துணிவாரென்றால் உங்களது மறுமொழி என்னவாக இருக்கும்? எவ்வாறு நடந்து கொள்வீர்கள்? நீங்கள் நீதியுள்ள நியாயாதிபதியாக இருப்பீர்கள் என்றால், இவ்வளவு யதார்த்தமான சான்றுச் சிகரத்தின் மேல் வீற்றிருந்தும் அவையெல்லாம் பொய் என்று தள்ளிவிடுவீர்களா? அல்லது பொய்யைத்தான் மெய்யென்று கூறத்துணிவீர்களா? கிறிஸ்துவின் மரணத்தைப் பொய்யாக்க முற்படும் அந்த ஒரே ஒரு வசனம் அல்லாவின் வெளிப்பாட்டால் முகம்மது நபி கூறியுள்ளார் என்றும், அல்லாஹ் பொய்யுரையாதவர் என்றும் கூறுவீர்களானால்,





அது உண்மையிலேயே இறைவாக்குதானா என்று தீர்க்கமாக ஆராய்ந்து ருசுப்படுத்த வேண்டியது அவ்வாறு வாதிடுவோரின், மற்றும் நியாயந்தீர்ப்போரின் கடமையல்லவா?

இங்கு நமது முன்னிலையிலிருக்கும் இரண்டு முக்கியமான சமய நூல்களாகிய குர்–ஆனையும், பைபிளையும் சந்திக்கிறோம். அவற்றை நம்புகிற இரு சாராரும், தொண்டர்களும் தெய்வீகத் தன்மை வாய்ந்த கடவுளுடைய வெளிப்பாடு என்றே நம்புகின்றனர். ஆனால் ஆழ்ந்து நோக்குங்கால் இது உண்மையாக இருக்க முடியாது என்பது முரண்பாடு. ஏனெனில், சில முக்கியமான அடிப்படை உபதேசங்களிலேயே இவையிரண்டும் ஒன்றுக்கொன்று ஒவ்வாத முரண்பாடான கருத்துக்களைக் கூறுகின்றன. இவ்வாறிருப்பதால், இவையிரண்டில் ஒன்று கடவுளிடமிருந்து தோன்றவில்லை; வேறு எங்கிருந்தோ உதயமாகியுள்ளது. மேலும் அந்த நூலையுடையோர் என்று குர்–ஆனால் இனங்காண்பிக்கப்படும் கிறிஸ்தவர்களும், யூதர்களும் விவிலியத்தைக் கெடுத்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு பாரபட்சமற்ற முறையில் வெளிச்சான்றுகளுடன் – யூகம் அல்லது கற்பனைகளின் மூலமாக அல்ல – சோதிக்கப்பட்டு, இப்பொழுது நம் வசமிருக்கிற பைபிள் வாசகங்கள் முழுவதும் ஆதியிலிருந்தது போலவே இருக்கின்றன என்று ஐயந்திரிபற நிரூபிக்கப்பட்டிருப்பதால் வேதாகமம் திருத்தப்பட்டது என்று குற்றஞ் சாட்டிக் கொண்டேயிருப்பது பூச்சாண்டி காண்பிப்பதாகும்.

இரண்டாவதாக, சுவிசேஷ நூல்களில் வர்ணிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் பாடுகள் - மரணம் ஆகியவற்றிற்கு. வேதாகமத்திற்கு வெளியேயுள்ள சரித்திரச் சான்றுகளும் ஆதாரமாயிருக்க, கிறிஸ்து சிலுவையிலறையப்படவில்லை என்ற குர்-ஆனின் கூற்றுக்கு வரலாற்று சான்றுகள் ஏது மில்லாததால், குர்-ஆனின் முடிவு அல்ல, வேதாகமத்தின் தீர்ப்பே வலுப்பெறுகிறது.

இதை தவிர, பரிசுத்த வேதாகமம் கடவுளின் உள்ளுணர்வுடன் எழுதப்பட்டது என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள். எனவே, ஒவ்வொரு வசனமும் தெய்வீக வெளிப்பாடே ஆகும். கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்து எண்ணிறந்த தீர்க்கதரிசனங்கள் அல்லது முன்னறிவுப்புகள் பல நூற்றாண்டுகளாக கூறி அறிவிக்கப்பட்டு வந்ததோடல்லாமல், கிறிஸ்துவும் அவை தமக்கே பொருந்தும், தம்மில் மட்டுமே நிறைவேறும் என்று கூறி வந்ததும் எழுத்தளவில் அவரில் நிறைவேறி விட்டதால் இந்த சத்தியம் எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்கிறது. இந்த வேதாகம சத்தியங்கள், வரலாற்றாலும், புதைபொருள் ஆராய்ச்சியாலும் நிரூபிக்கப்பட்டிருப்பதால், இவற்றை உண்மையுள்ளதாக்க வேண்டிய பெரிய பொறுப்பும், பாரமும், முஸ்லீம்கள் மேல் உள்ளன எனவே கிறிஸ்தவ சத்தியத்தைப் பொய்யென ருசுப்படுத்த, எவ்வளவு எவ்வளவோ மேலும் வலிமையும், அர்த்தமுள்ள ஆதாரங்களை நமது முஸ்லீம் நண்பர்கள் தேட வேண்டிய நிர்ப்பந்தத்திலிருக்கின்றனர்.

### ஒரு பொய்க்காக மரிப்பதா?

இரண்டாவதாக, கிறிஸ்துவின் மரணம் ஒரு





பழங்கதை என்றால், அதனை நிலைப்படுத்த கிறிஸ்துவின் சீடர்களெல்லாம் மரணத்தைத் தழுவுவார்களா? இயற்கை மரணம் எய்தின யோவானைத் தவிர மற்ற எல்லாச் சீடர்களும் தங்கள் உயிர்களைப் பணயம்வைத்து விட்டார்களே? இந்தச் சீடர்களின் உயர்ந்த பண்புகள், பயபக்தி, விசுவாசம் ஆகியவற்றை குர்-ஆனே புகழ்ந்துரைத்து, சாட்சி கூறி, அன்னாரின் முன் மாதிரியைப் பின்பற்றத் தூண்டுகிறதே! இப்பேர்ப்பட்டவர்கள் தங்கள் ஆண்டவரைப் பற்றி பொய்யாகக் கட்டுக்கதைகளை நெய்வார்களா? ஒரு உன்னதமான காரியத்துக்காக ஒருவர் தனது ஜீவனைத் தியாகம் செய்யலாம்; அல்லது ஒரு உயர்ந்த கொள்கைக்காக உயிரைக் கொடுக்கலாம்; ஆனால் பொய், கட்டுக்கதை என்று எல்லாரும்அறிந்த ஒரு காரியத்துக்காக யார் தன் ஜீவனைப் பணயம் வைப்பார்கள்? எல்லாவற்றிற்கும் மேலாக, தேவ பயமுள்ள இயேசுவின் சீடரா பொய்யையும், வஞ்சத்தையும் பாதுகாக்கவும், வளர்க்கவும் முற்படுவார்கள்? அல்லது அதற்காகச் சாகவும் துணிவார்கள்? சற்று எண்ணிப் பார்க்க வேண்டும்!

### நேர்முகச் சாட்சிகள்

மூன்றாவதாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் - பரமேறுதல் ஆகியவற்றிற்கு பின்னர், கிறிஸ்துவின் சீடர்கள் தங்களது கடைசி மூச்சு ஒடுங்கும் வரையும், இரட்சிப்பின் சுவிசேஷத்தையே பிரசங்கித்து வந்தனர் பெரும்பாலும். அவர்களது முதல்கட்ட பிரசங்கத்தில் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலைப் பற்றியும், நேரில் கண்ட அறிந்திருந்த யூதர்களின் வட்டாரங்களிலேயே இருந்தது. இப்படியிருந்தும்,

ஒரு யூதனாவது அல்லது யூதமதத் தலைவனாவது, கிறிஸ்துவைக் கொலை செய்யக் காரணமாயிருந்தும், அவர்களுடைய பிரசங்கம் பொய் என்று குற்றஞ் சாட்டவில்லை. கிறிஸ்து பரமேறிச் சென்ற பதினோராவது நாளிலேயே பெருங் கூட்டமான யூதர்கள் முன்னிலையில் அச்சம் ஒளிவு மறைவு எதுவுமின்றி:

> தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும், அவருடைய முன்னறிவிப்பின்படியேயும் ஒப்புக் கொடுக்கப்பட்ட அந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலை செய்தீர்கள்.
>
> தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து. அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது (அப்போஸ்தலர் 2:23,24)

என்று பேதுரு முழக்கமிட்டார். ஒருவரும் எதிர்த்து நிற்கவில்லை: மாறாக மூவாயிரம் பேர் மனந்திரும்பி ஞான ஸ்நானம் பெற்றார்கள்.

இவ்விதமான இன்னொரு சந்தர்ப்பத்திலே, மேலும் அதே பேதுரு கர்ஜித்ததாவது:

> "பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை நீங்கள் மறுதலித்து, கொலை பாதகனை





> உங்களுக்காக விடுதலை பண்ண வேண்டுமென்று கேட்டு. ஜீவாதிபதியைக் கொலை செய்தீர்கள்: அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப் பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக் கிறோம்" (அப்போஸ்தலர் 3:14,15)

இவ்வாறு இயேசுவின் சீஷர்கள் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்த கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்குக் காரணமாயிருந்தவர்களும், நேரடி சாட்சிகளுமாயிருந்தவர்களும் இந்தப் போதனைக்கு மறுப்பு எதுவும் தெரிவிக்காமல், தெரிவிக்க முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். சீஷர்களின் சவாலை சந்திக்க முடியவில்லை. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மாத்திரம் பொய்யாக இருந்திருக்குமானால். அதை மறுதலித்து அவர்கள் முகங்களில் கரியைப் பூசியிருக்க மாட்டார்களா? சீஷர்கள் எங்காவது தலைமறைவாகியிருப்பார்களேயல்லாமல், உயிரைக் கொடுத்திருக்கமாட்டார்கள். (ஜதீத் இஸ்கந்தரின் நூலாகிய சிலுவையும் சுவிசேஷமும் குர்-ஆனும் பக்கங்கள் 26-31 ஐப் பார்க்கவும்)

## தர்க்கரீதியிலான சான்று

நான்காவதாக, தவிர்க்க முடியாத தர்க்க ரீதியிலான நியாய வாதங்களும் அநேகமுண்டு. சரித்திர பூர்வமான சனஹரீம் என்ற யூத சங்கத்தின் நடவடிக்கைகளும், நாடகங்களும், பிலாத்துவின் பிரிடோரியா நீதிமன்ற விசாரணைகளும், ஏரோதுவின் அரண்மனைக்கு இயேசு இழுத்துச் செல்லப்பட்டதும், பரியாசம் பண்ணப்பட்டதும்

வாரினால் அழுந்தக் கட்டப்பட்டதும், சவுக்கால் பயங்கரமாக முப்பத்தொன்பது தடவைகள் அடிக்கப்பட்டதும், முகத்திலே கயவர்களால் காரித் துப்பப்பட்டதும், முட்கிரீடம் தரிக்கப்பட்டதும், முடிவிலே வரலாற்றிலே கொல்கொதா என்று அழைக்கப்படும் "கொல்கொதா" மலையிலே கல்வாரி நாயகன் குருசிலே இரண்டு பாதகர் நடுவிலே பாதகன் போல் அடிக்கப்பட்டதும். எருசலேம் மக்களும் அவர்கள் அதிகாரிகளும். ரோமப் போர்ச் சேவகர்களும் அங்கே குழுமி. இகழ்வாரும். அழுவோருமாக, அற்புதமூர்த்தி இயேசு கிறிஸ்துவுக்குச் சம்பவித்த சிலுவையின் நிந்தை நிறைந்த மரணத்துக்குச் சாட்சிகளாயிருந்தனர். என்பது முற்றிலும் உண்மையே. "கல்லைப் புரட்டினது யார்?" என்ற தமது நூலில் ஃப்ராங்க் மாரிசன் என்ற ஆங்கில ஆசிரியர் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைக் குறித்து எல்லாக் கோணங்களிலிருந்தும் வெகு நுட்பமாக ஆய்வு செய்துள்ளார். அவருடைய தத்துவ சாஸ்திர தர்க்க மூலமானது எழுப்பியுள்ள எண்ணிலாக் கேள்விகளுக்கும் அவர் கண்ட முடிவும் அல்லது வேறு எவரும் காணக் கூடிய முடிவும் எப்பேர்ப்பட்ட நாஸ்திகர்களையும் திணற அடிப்பதாக உள்ளது.

நமக்குக் கிடைக்கக் கூடிய சான்றுகளின் மூலமாக இயேசுவின் நியாய விசாரணை ஒரு இரவு முழுவதும், விடிந்த பின்னரும் முற்பகல் மட்டுமாக நடைபெற்றதாக அறிகிறோம். அது ஒரு இரகசியமான விசாரணையாக இல்லாமல், எல்லாத் தலைவர்களும் அநேக மக்களும் கூடியிருக்க, பகிரங்கமான நியாய விசாரணையாகவே இருந்தது. இப்பேருண்மையானது முஸ்லீம்களுக்குத் தர்ம சங்கடமாயுள்ளது. எல்லாருடைய





கவனத்தின் மையப் பொருளும் இயேசுவாக இருக்கின்ற வேளையில். இவ்வாறு சிலுவையில் அறையப்பட்டவர் இயேசு அல்ல, யுதாஸ் காரியோத்து அல்லது வேறு ஒரு நபர் தான் என்று நிரூபிக்க முஸ்லீம்கள் வீண் முயற்சி செய்கின்றனர். சரித்திர சான்று இல்லாத மனப்பிரமை என்பது இதுதான் அன்று நடைபெற்ற சம்பவங்களுக்குப் பொருந்தாத ஒரு யூகமாகும். இயேசுவின் ஸ்தானத்தில் வேறு ஒருவர் நியாயம் விசாரிக்கப்பட்டாலோ அல்லது சிலுவையிலறையப்பட்டாலோ, அவர் "நான் இயேசு அல்ல, நான் இயேசு அல்ல: இது ஆள்மாறாட்டம்" என்று எல்லாருடைய காதுகளும் கேட்க அபயமிட்டிருக்க மாட்டாரா? தன்னைத் தப்புவித்துக் கொள்ள எவ்வளவு பிரயாசப்பட்டிருப்பார், ஆனால், இயேசுவோ அவ்வித முயற்சி எதுவுமே எடுக்கவில்லையே, என்ன ஆச்சரியம்! முகாந்தரங்கள் தேடிக் கொண்டிருந்த திரள் கூட்ட எதிரிகளுக்கும், தாமே தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கை செய்த மாத்திரத்தில், அது பயங்கரமான தேவதூஷணம் என்று கூறி அவர்கள் உடனே அவருக்கு மரண தண்டனை கூறவில்லையா? அன்று நிலவிய சந்தர்ப்ப-சூழ்நிலைகளில் "இயேசுவின் பதிலாள்" இவ்வாறு எல்லாம் கூறியிருக்க முடியுமா அல்லது நடிக்கத்தான் முடியுமா? நம்மிடமுள்ள ஏராளமான சான்றுகளில் ஓரிடத்திலாவது. இயேசு கிறிஸ்துவைப் போலக் காட்சியளித்த ஷபிஹ் எவ்விதமான எதிர்ப்பும், ஆட்சேபணையும் மறுப்புக் கூறினதாகக் குறிப்பு எதுவும் இல்லையே. பதிலால் தான் சிலுவையிலறையப்பட்டார் எனில் அந்தக் கொடுமையான. அநீதியான மரணத்திலிருந்து தற்சமயம் தப்புவித்துக் கொள்ளக் கிடைத்தப் பொன்னான சந்தர்ப்பம் அதுதானே அது

யூதாஸாக இருக்குமானால். அவன் எவ்வளவாகத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளவும், விடுவித்துக் கொள்ளவும் பிரயாசப்படிப்பருப்பான்?

இவை எல்லாவற்றிற்கும் மாறாக, அந்தப் பயங்கரமான, கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத இக்கட்டான தருணத்திலே, இயேசுவைத் தவிர வேறு எவரும் இவ்வளவு கண்ணியமாக நடந்திருக்க மாட்டார்கள். அவரிடத்திலிருந்து வெளிப்பட்டதெல்லாம் தெய்வீக சாந்தமும் பண்புமாகும். சிலுவையிலறையப்படும் போதும், அதன் பின்னரும். தம்மைக் கொடூரமாய். அநியாயமாய் கொலை செய்தவர்களுக்காக மிகவும் பரிவுடன் “பிதாவே இவர்களுக்கு மன்னியும்” என்று கருணாமூர்த்தி மன்னிப்பளித்துக் கொண்டே இருந்தாரே! தனது ஆண்டவரைக் காட்டிக் கொடுத்தவனும் பண ஆசையால் நிறைந்து, முப்பது வெள்ளிக்காசுக்கு தனது ஆண்டவரை அவருடைய சத்துருக்களிடம் விற்றுப் போட்டவனுமான யூதாஸ் காரியோத்து எப்படி சிலுவைக்குச் செல்ல சம்மதிப்பான்? அல்லது எப்படி இயேசுவைப் போல அன்புடனும். பண்புடனும். சாந்தத்துடனும் அவனால் நடந்து கொள்ள முடியும்? தன்னைக் காப்பாற்றிக் கொள்ளத் துடியாய் துடித்திருக்க மாட்டானா?

இவை எல்லாம் தவிர, இயேசுவின் தாயாகிய மரியாள் மற்றும் இயேசுவுக்குப் பணிவிடை செய்த சகோதரிகளின் பங்கு என்ன? அவருடைய அன்பான சீஷனாகிய யோவானுடன். இந்தத் தாய்மாாகள் எல்லாம் மார்பில்அடித்துப் புலம்பி அழுது கொண்டு இயேசுவின் சிலுவைப்பவனியில் கலந்து





கொண்டார்கள் அல்லவா? அவர்களுடைய கண்களுக்கு எதிரேதான் இயேசு சிலுவையிலறையப்பட்டார். இயேசு சிலுவையிலறையப்பட்டதற்கும். அவருடைய மரணத்துக்கும் இவர்கள் தெளிவாகச் சாட்சி சொன்னார்களே. சகிக்க முடியாத வேதனையின் நடுவிலும் இயேசு சிலுவையிலிருந்து கொண்டே.

“அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும் அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும் கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே. அதோ உன் மகன் என்றார்.”

பின்பு அந்தச் சீஷனை நோக்கி; “அதோ, என் தாய் என்றார்” யோவான் 19:26,27 என்று யோவான் கூறுகின்றான் அவ்வேளையில் அவ்விருவருக்குமே. இது இயேசு கிறிஸ்துவின் குரலா அல்லது வேறு ஒருவரின் போலியான குரலா என்று பாகுபடுத்தி அறிந்து கொள்ள முடியாமலிருக்க முடியுமா? ஒரு போலியான நடிகரிடமிருந்து. ஷபீஹிடமிருந்து இந்த உயர்ந்த பொறுப்பான எண்ணம் அல்லது பண்பு உதயமாகக் கூடுமா? இவை எல்லாம் நமது சிந்தனையைத் தூண்டுகின்ற கேள்விகள்.

அடுத்ததாக, மரணத்துக்குப்பின் இயேசுவின் சரீரத்துக்கு என்ன ஆயிற்று என்பது முஸ்லீம் ஆராய்ச்சியாளர்களுக்கும், வியாக்கியானிகளுக்கும் தீர்வு காணமுடியாத ஒரு சவாலாகும். அந்த ஷபீஹ் முகபாவனையில் மாத்திரம் இயேசுவைப் போல் தோன்றினதாகக் கூறுகிறார்கள். அவருடைய சரீரத்துக்கு எந்தவிதமான மாறுதலும் ஏற்படவில்லை என்கின்றனர். “அந்த முகம்

இயேசுவின் முகத்தைப் போன்று இருந்ததேயல்லாமல்.அந்த சரீரம் இயேசுவினுடையதல்ல " சூரா-அல்-நிஸா 4:157 க்கு விளக்கம் கூறும்பொழுது அல்-ஃபக்கர் அல்-ராஸியும் அல்-தஃசிர் அல்ஹைஹபீரும் இவ்வாறு அர்த்தப்படுத்துகின்றனர்.

> "இதில் அபிப்பிராயப் பேதம் கொண்டவர்கள்.அதில் சந்தேகத்திலேயே இருக்கின்றார்கள். வெறும் யூகத்தைப் பின்பற்றுவதேயன்றி அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது..... "

இது நிஜமென்றால். அது தனது மகனுடைய உடலா அல்லது ஷபீஹின் (வேறு ஒருவரின்) உடலா என்று மரியாளால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லையா?

நடுநிலை ஆராய்ச்சியாளர்கள் எவரும் நிராகரிக்க முடியாத வேறு பல ஆதாரங்களும் இருக்கின்றன. அதாவது அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு எனும் பிரமுகரும். ஜனகரீம் சங்க உறுப்பினரும், இயேசுவின் அந்தரங்க சீஷருமான நிக்கோதேமுவும் ரோம தேசாதிபதி பொந்தியுபிலாத்துவினிடம் அதிகாரபூர்வமான அனுமதி பெற்று இயேசு கிறிஸ்துவின் சரீரத்தை சிலுவையை விட்டு இறக்குவதற்கும். யோசேப்பின் கல்லறையில் நல்லடக்கம் செய்வதற்கும் முன் வந்தனர். அவர்களும் அது மெய்யாகவே இயேசுவின் சரீரம் தானா அல்லது போலி நபரின் (ஷபீஹ்) பிரேதமா என்று அடையாளம்கண்டு கொள்ள முடியாத அளவிற்கு மதிமயங்கிப் போயிருந்தனரா? உதாரணமாக. அறையப்பட்ட ஆள் யூதாசாக இருந்தால், வளர்த்தி எடை,





சிகை, நிறம், தோற்றம் ஆகியவற்றில் யூதாசின் சரீரம் இயேசுவின் சரீரத்தைப் போலவா இருந்தது? என்ன விபரீதமான விளக்கம்! யோசேப்பின் செயல் ஏசாயா 53:9 இல் கூறப்பட்டுள்ள தீர்க்கத்தரிசனத்தின் அப்பட்டமான நிறைவேறுதலாய் அமைந்துள்ளது.

> "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள். ஆனாலும்அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார். "

**ஆறு முரண்பாடுகளுள்ள, தெளிவில்லாதவை**

ஷபீஹ் என்ற அநுமானக் கோட்பாட்டினால் விளைந்துள்ள ஆறு சிக்கல்களை சூரா அல் இம்ரான் 3:55க்கு வியாக்கியானம் கொடுக்கும்பொழுது அல்ஃபக்கிர் அல் – ராஸி சுருங்கக் கூறுகிறார்.இந்த ஆறு குறிப்புகளும்சரியான தத்துவம் தர்க்க ரீதியானவைகளும், நிலைமையைச் சரியாகப் புரிந்து எழுப்பப்பட்ட சந்தேகங்களுமாகும். இவற்றை முறியடிக்கப் முயற்சித்தபொழுது. வாசகர்களுக்கு வேறுபல சந்தேகங்களும் புதிய குழப்பங்களும் தோன்றியுள்ளன.

இவற்றின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ள அவற்றை எழுத்துப்படியே திருப்பிக்கூறுவதே நலமாயிருக்கும் அப்பொழுதுதான் இந்த பிரதியாள் என்ற ஷபீஹ் கோட்பாட்டினால் அல்-ராஸிக்கு மனதில் தோன்றிய சிக்கல்களும் எதிர்வாதங்களும் நமக்குப் புரியும்.

**முதல் முரண்பாடு :** ஒருவரின் தோற்றத்தை வேறொருவரின் மீது பதித்தால், அது ஒரு மந்திரவித்தை

போலாகும். அது நம்பத்தக்கதல்ல. எடுத்துக்காட்டாக எனது மகனை முதல் ஒரு முறை பார்த்துவிட்டு மறுபடியும் பார்க்கும் பொழுது அது உண்மையில் எனது மகனல்ல: ஆனால் எனது மகனைப் போல் வேறொருவன் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் எனது கண்களையே நம்ப முடியாது என்றாகிறது. அஃதே போன்று, தங்களுக்குப் போதித்தும், எச்சரித்தும் வந்தமுகம்மது, அதே முகம்மது தானா இல்லையா: ஏனெனில் அவரைப்போல் இன்னொருவர் ஆள்மாறாட்டம் செய்கிறாரே என்று முகம்மதுவின் கூட்டாளிகளுக்கு மாயத்தோற்றம் அல்லது மனப்பிரமை ஏற்பட்டால் எப்படியிருந்திருக்கும்? அப்படியானால் குர்–ஆனின் சட்டதிட்டங்கள் எல்லாம் தவிடுபொடியாகிவிடும். குர்–ஆனின் பகுதிகள் எல்லாம் பல்லாண்டுகளாக வாய் மூலமாகத்தான் நபருக்கு நபர் மாற்றப்பட்டு வந்தது. இவ்வாறு வாய்ப்பாடாக அல்லது வாய் உபதேசமாக மாற்றப்பட்டு வருங்கால் போதிப்பவரின் ஆள் தன்மையிலேயே (சந்தேகம்) ஏற்பட்டால். சொல்லப்பட்ட வைகளின் கருத்துக்களை எப்படி நம்புவது, இவ்வித அநுமானத்திற்கு இடம் கொடுப்போமென்றால், தீர்க்கதரிசனங்களையே செல்லாததாகவும். நம்பிக்கைக்குத் தகுதியற்றதாகவும் மாற்றத் துவங்குகிறோம் என்று சாராம்சமாகக் கூறிவிடலாம்.

**இரண்டாவது முரண்பாடு:** உன்னதங்களிலுள்ள மகத்துவமான தேவன் ஜிப்ரிலியேலுக்கு (அவருக்குச் சமாதானம் உண்டாவதாக) கொடுத்த கட்டளை அவர் எப்பொழுதும் இயேசு கிறிஸ்துவுடனிருக்க வேண்டும். சூரா அல்மாயிதா 5:110 இன்படி "பரிசுத்த ஆன்மாவைக் கொண்டு





உமக்கு உதவியளித்து......" என்று அல்லாஹ் வாக்களிக்கிறார். இதுதான் அறிஞர்கள் கொடுத்த அர்த்தமாகும். ஜிப்ரியேலின் இறக்கைகளுள் ஒன்று மட்டுமே மனுக்குலம் முழுவதையும் காப்பாற்ற பண்ணும் ஆற்றல் பெற்றிருப்பதாகக் கூறும் பொழுது, அது எப்படி இயேசுகிறிஸ்துவை யூதர்களின் கைக்குத்தப்புவிக்க முடியாமற் போயிற்று? அஃதன்றி, நோயாளிகளைக் குணமாக்கி குருடர்களுக்குப் பார்வையளித்து. குஷ்டரோகிகளைச் சுத்தமாக்கி, மரித்துப் போனவர்களையும் உயிரோடெழுப்பி தமது அற்புத சக்தியை வெளிப்படுத்தி வந்த இயேசு. (அவருக்குச் சமாதானமுண்டாவதாக) தம்மைத் துன்பப்படுத்தவும், மரணத்துக்கு ஒப்புக் கொடுக்கவும் வந்த யூதர்களைச் சபிக்காமலும். குருட்டாட்டம் பிடிக்கவும். செயலிழக்கச் செய்யாமலும், தமது நாசியின் சுவாசத்தால் அழித்துத் தமக்கு எவ்வித தீங்கும் செய்யாமல் தற்காக்க முடியாமற் போயிற்று?!

**மூன்றாவது முரண்பாடு :** மகிமையின் கடவுள் அவரை (இயேசுவை) சத்துருக்களாகிய புல்லரின் கைகளில் அகப்பட்டுத் தவிக்கவிடாமல், நேரே பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கக் கூடாதா? பின்னர் ஏன் இயேசுவைப்போன்ற வேறொரு நபரை பலியாக்கிட வேண்டும்? ஒரு காரணமும் இல்லாமல் அப்பாவியான ஒருவரை ஏன் அந்தக் கொடிய மரணத்துக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்.

**நான்காவது முரண்பாடு :** இயேசுவின் சாயலை வேறொருவனுக்குக் கொடுத்து, அவனைப் பரத்துக்கு உயர்த்துவதினாலே என்ன நன்மை? இயேசு அல்ல. ஷபீஹ்

அல்லவா எடுத்துக் கொள்ளப்பட்டவன்! இந்த மாயா ஜாலத்தோற்றம் பக்தர்களையெல்லாம் திசை திருப்புமல்லவா? இது தேவனுடைய அனந்த ஞானத்துக்கும் நீதிக்கும் அடுக்குமா?

**ஐந்தாவது முரண்பாடு :** மேற்கத்திய நாடுகளிலும் கிழக்கத்திய நாடுகளிலும் இருந்த மகா திரளான கிறிஸ்தவர்களும் (அவருக்குச் சமாதானமுண்டாவதாக) கிறிஸ்துவின் மீது அவர்கள் கொண்டுள்ள எல்லையில்லா அன்பு, மதிப்பு மேன்மைப்படுத்தல் இருந்த போதிலும், இயேசு சிலுவையிலறைந்து கொல்லப்பட்டதை நாங்கள் எங்கள் கண்களினாலே கண்டோம் என்று வெட்கமில்லாமல் தைரியமாய் சாட்சி பகர்ந்து வந்தார்கள் நாம் இதனை ஏற்றுக் கொள்ளாமல், மறுப்போமென்றால், வாய்மூல அறிவிப்பையே பொய்யாக்குகிறவர்களாயிருப்போம். வாய்மூல அறிவிப்பையே சந்தேகித்தால், **இயேசு கிறிஸ்து, முகம்மது ஆகிய இருவருடைய நபித்துவ ஊழியத்தையே கேள்வி கேட்கிறவர்களாகவும் முடிவிலே, இருவருடைய வரலாற்று உண்மையையுமே சந்தேகிக்கிறவர்களாக அல்லது புறக்கணிக்கிறவர்களாக இருப்போம்.** இது எத்தனை அபத்தம்!

**ஆறாவது முரண்பாடு:** எல்லாவற்றிற்கும் மேலாக வாய்மொழி சரித்திர உண்மைகளை ஏற்றுக் கொண்டு ஆய்வைத் தொடரும்பொழுது, நாம் கேள்விப்படுகிறது என்னவென்றால், சிலுவையிலறைப்பட்டவர் உயிர்த்தெழுந்த பின்னர் அநேக நாட்கள் தமது தொண்டர்களுக்குத் தரிசனமானார் என்பதாகும். அந்த நபர் இயேசுவாக





இல்லாவிட்டால். மிகவும் பயந்து நடுங்கி: "நான்இயேசு அல்ல, நான் வேற்று மனிதன்: என்னை விட்டு விடுங்கள் " என்று கூறியிருப்பாரல்லவா? தனது உண்மை ரூபத்தை, நிலைப்படுத்த பிரகடனப்படுத்த அதிக முயற்சி செய்திருப்பாரல்லவா? அப்படி தனது உண்மை நிலையை அறிக்கை செய்திருப்பாரென்றால், அது பேச்சு வழக்கில் எல்லாருக்கும் தெரிந்திருக்க வேண்டாமா? இவற்றுள் ஒன்றும் சம்பவிக்காததால் சிலுவையிலறையப்பட்டவர் மெய்யாகவே ( சாக்ஷாத் ) இயேசு கிறிஸ்து தான் என்று அறிகிறோம். முஸ்லீம்களின் கூற்று பொய்யாகிறது.

**அல்ராசியின் பிரதியுத்தரங்கள்**

மேற்கண்ட முரண்பாடுகளை எடுத்துரைத்த பின்னர் அல்ராசியே அவற்றுக்கு விடையளிக்க முற்பட்டார் என்ற போதிலும் அவரது விடைகள் சுருக்கமாகவும், அர்த்தமற்ற வையாகவுமிருக்கின்றன. அவற்றை இங்கு பார்ப்போம்.

**முதலாவது பதில்:** எதனையும், எப்பொழுதும் சிருஷ்டிக்கும் ஆற்றலுள்ள சர்வ வல்லமையுள்ள கடவுள் மீது நம்பிக்கை கொண்டுள்ள எவரும் உதாரணமாக ஸயீதைப்போல வேறொரு வரை இறைவனால் உருவாக்க இயலாதா? இங்கு அவர் இப்படிச் செய்திருப்பதினால் முன்பு கூறினபடி நிச்சயமற்ற. தெளிவற்ற நிலைமை ஏற்பட வேண்டியதில்லை. முதலாவது முரண்பாட்டிற்கான எனது பதில் இதுவே.

**இரண்டாவது பதில் :** ஜிப்ரீல், (அவருக்குச் சமாதான முண்டாவதாக) இயேசுவுக்குப் பாதுகாப்புக்

கொடுத்திருந்தாலும் அல்லது கிறிஸ்துவே தமது வல்லமையால் தமது எதிரிகளைத் துரத்தியிருந்தாலும். அந்த அற்புதம் பலாத்காரத்தினால் உண்டான சாதனையாயிருக்கும் (ஹத்-அல் -இல்ஜா) இதை அனுமதிக்க முடியாது.

**மூன்றாவது பதில் :** வேறொருவரின் சாயலை இயேசுவுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக. அல்லாஹ் இயேசு கிறிஸ்துவை உயர்த்தியிருப்பாறென்றாலும், அந்த அற்புதமும் ஒரு பலாத்காரச் செயலாகவே கருதப்படும். (ஹத்-அல்-இல்ஜா)

**நான்காவது பதில்:** இயேசுவின் சீஷர்கள் கூடவே இருந்தாலும். அந்த சந்தர்ப்ப சூழ்நிலைகளை நன்கு அறிந்திருந்தாலும். முரண்பாடாக இருக்குமானால் அவர்களே அதனை நீக்கி விடுவார்கள்.

**ஐந்தாவது பதில் :** அந்த நேரத்தில் அங்கே இருந்தவர்களின் எண்ணிக்கை குறைவே. ஆதலால் அந்த கொஞ்சப்பேரும் மாயத்தோற்றத்துக்கு அல்லது வஞ்சிக்கப்படுவதற்குரிய சாத்தியக்கூறு இருந்தது. அதிலும் வாய்மொழிப்பிரச்சாரத்தை நம்ப வேண்டியதிருப்பதால், அந்த சாட்சி பயனற்றதாகி விடுகிறது.

**ஆறாவது பதில் :** அம்பலமாகாத பதிலாள் மரணத்துக்கான ஒரே ஒரு யூகம் என்னவென்றால். இயேசுவின் சாயலைப் பெற்றுக் கொண்ட ஆள் ஒரு முஸ்லீமாக (அவருக்கு சமாதானமுண்டாவதாக) அதாவது, அவரை விசுவாசிக்கிறவனாக இருந்திருக்க வேண்டும். அவர் முழு மனதாகத் தன்னை இந்த தியாகத்துக்கு. பணிக்கு



கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் அறையப்பட்டாரா?

அர்ப்பணித்திருக்க வேண்டும். இதன் உண்மையை அல்லது தாற்பரியத்தை சற்றேனும் பிரஸ்தாபிக்காமல், முழுவதுமாக மூடி வைக்கிறவராக இருக்கவேண்டும். சுருக்கமாகக் கூறினால், இந்த கேள்விகளுக்கு எத்தனை எத்தனையோ யூகங்கள். ஹேஷ்யங்கள். விதிவிலக்குகளை வைத்துக்கொண்டு தான் பதிலைத்தேட வேண்டியதிருக்கிறது. முகம்மது கூறின யாவும் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருப்பதாக. இந்த சூரா கூறுவதால். மறுக்க முடியாத இந்த வசனத்துக்கு எதிராகத் தொடுக்கப்படும் குதர்க்கங்கள் எல்லாம் இதனை மாற்றிவிட முடியாது. அல்லாஹ்வே வழிகாட்டுபவர். வேறு விதமாகக் கூற வேண்டுமானால், பகுத்தறிவுக்கு முரணாக இருந்தாலும் குர்-ஆன் கூறினது கூறினதே.

இவை தான் நாவலரும், புலவருமாகிய ரே பட்டணத்தைச் சேர்ந்த அல்-ராசியின் பதில்களாகும். இந்த ஆழமான. அர்த்தபுஷ்டியுள்ள இஸ்லாமுக்கும் கிறிஸ்தவத்துக்கும் இடையில் உள்ள ஜீவாதாரமான கேள்விகளுக்கு அல்-ராசி அளிக்கும் மேலெழுந்த வாரியான பதில்களாகும். மறுக்கவும், மறைக்கவும் முடியாத உண்மைக்குப் பதிலளிக்கவும். வெற்றி காணவும் வேண்டிய மிகவும் தர்மசங்கடமான நிலையிலிருப்பதை அல்-ராசி முன் கூட்டியே அறிந்திருந்தார். எனவே தான் ஆறாவதும் கடைசியுமான விடையில் குர்-ஆன் கூறினது கூறினதே எனவும் முகம்மதுவின் வாசகத்துக்கு மேல் அப்பீல் இல்லை எனவும்கூறி கேட்போரின் வாயையடைத்து. மெல்ல நழுவி விடுகிறார்.

ஆகிலும். இவ்வாறு உண்மையை மூடிமறைக்கப் பிரயாசப்படாமல். அதன் தாற்பரியத்தை ஆராய்வது நல்லது.

**அல்-ராசிக்கு எங்கள் பதில்**

அல்ராசியின் **முதல் பதிலுக்கு.** அதாவது ஒருவரைப்போலவே மற்றவர்கள் காட்சியளிக்கக் கூடிய எத்தனை பேரை வேண்டுமானாலும் சிருஷ்டிக்க கடவுளுக்குச் சக்தி உண்டு என்பதற்கு இசைவு தெரிவிக்கிறோம். ஆனால் கிறிஸ்துவைப் பொறுத்தவரையில். அப்படிச் செய்ய வேண்டிய தேவை கடவுளுக்கில்லை. சிலுவைக்குச் செல்லாமல், அதனைத் தவிர்ப்பதற்கு கிறிஸ்து எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. முதற்கண் அவர் உலகத்திற்கு வந்த நோக்கமே, தமது மரணத்தின் மூலம் மனுக்குலத்தை இரட்சிப்பதற்குத்தான். அவர் தமது சுயசித்தப்படியே. தன்னார்வத்துடன் இவ்வேலையை மேற்கொண்டார். இப்பொறுப்பை தமது சிரம் மீது ஏற்றுக் கொண்டுவிட்டு. பின்வாங்குவாரென்றால். சிலுவை மரணத்தைத் தவிர்க்க முயற்சிப்பாரென்றால். அது அக்கறையின்மையும், கோழைத்தனமும், பயந்தாங்கொள்ளித் தனமுமாகும். தமது கடமையை அல்லல் தட்டுவது போலாகும் பொறுப்பற்றவர் என்ற குற்றச்சாட்டுக்கு இலக்காவார் தேவனுடைய வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவுக்கு இது எவ்வளவேனும் பொருந்தாது. அப்படிச் செய்வது அவருடைய தன்மைக்கு நேர் எதிரிடையாகும். எனவே இந்த சந்தர்ப்பத்தில். இவருடைய விஷயத்தில் ஆள்மாறாட்ட நாடகமாகிய ஷபீஹ் என்பதற்குத் தேவையே இல்லை.

**இரண்டாவதாக,** கிறிஸ்து தம்முடைய சத்துருக்களின் கைகளிலிருந்து தம்மைத் தப்பித்துக் கொள்வதற்கு ஜிப்ரீல் தூதனுடைய உதவியும் ஒத்தாசையும்





சற்றேனும் தேவையில்லை. ஏனெனில் அவர் தம்முடைய மரணத்துக்கு முன்பாக செய்த அற்புதங்கள் மிக பெரியனவாகும். தம்மை காப்பாற்றிக் கொள்ள எடுக்க வேண்டிய முயற்சியைக் காட்டிலும் அதிக அற்புதமாகவும் இருந்தன. அவருடைய எல்லையில்லா சக்திக்கு எடுத்துக்காட்டாகவே சுவிசேஷத்தின் முன்மாதிரிகள் உள்ளன. கெத்சமனேத் தோட்டத்தில் அவருடைய சத்துருக்கள் அவரைக் கைது செய்ய வந்த வேளையில் அவருடைய வாத்தையின் வல்லமையினால் வந்தவர்களெல்லாரும் தரையில் விழுந்தார்கள். அந்த நேரத்திலேயே அவர்களை விட்டு அவர் கடந்து சென்றிருக்கலாம். பாதுகாப்பான இடத்துக்குள் இதற்கு முன்பும் சில சம்பவங்களில் யூதர்கள் அவரைக் கொலை செய்ய முயற்சித்த பொழுதெல்லாம் அவர் அவர்கள் நடுவிலிருந்து மறைந்து சென்று விட்டார். அப்பொழுதெல்லாம், அவர்களில் ஒருவரும் அவரைத் தொடவோ அவருக்குத் தீங்கு செய்யவோ முடியவில்லை. ஆனால் அவருடைய வேளை. குறித்த வேளை. வந்தபோதோ. அவர் தாம் வந்த நோக்கத்தை நிறைவேற்றும்படியாய் அவர்களிடம் தம்மை முழுமனதுடன் ஒப்புக் கொடுத்தார். அல்ராசியும் அவரைச் சேர்ந்தவர்களும் என்ன காரணத்திற்காக அவர் மானிடரூபம் எடுத்தார் என்பதனைப் படித்திருப்பார்கள். அறிந்திருப்பார்கள் என நினைக்கிறோம். அப்படி இயேசுவின் முதல் வருகையைப் பற்றிய அறிவு இருந்தால். அவர் கன்னியின் வயிற்றில் உதித்ததும். மானிடனாக அவதரித்ததும் உலகத்தாரின் பாவத்தை உத்தரித்துத் தீர்க்கதரிசன குருசில் மரணம் அடைவதற்காகவே என்பதை விளங்கிக் கொண்டிருப்பார்கள்.

**மூன்றாவதாக** யதார்த்தமாகவே தேவன் இயேசுவின் சாயலை வேறொருவன் மீது பதித்தாரா? துரோகியான யூதாஸ் காரியோத் தனது ஆண்டவரைக் காட்டிக் கொடுத்தமைக்குத் தண்டனையாக இச்செயலைத் தேவன் செய்தார் என்று ஒரு சிலர் விவாதிக்கின்றனர். ஆனால் யூதாஸோ மானக்கேடான முறையில் பகிரங்கமாகத் தற்கொலை செய்து கொண்டு செத்தான் என்று சுவிசேஷ நூல்கள் துலாம்பரமாக விளக்குகின்றன. மேலும் வேறு வழியில்லாமல் தான் கடவுள் இயேசுவின் சாயலாக வேறொருவனை, ஒரு நிரபராதியைச் சாகச் செய்தார் என்பதும் ஷீஹ் கொள்கையின் ஒரு விளக்கமாகும். இதைவிட, அனைவரும் காண. எல்லாருக்கும் முன்பாகவும் இயேசு கிறிஸ்துவை கடவுள் பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டிருப்பாரென்றால் எவ்விதமான சந்தேகமும் ஏற்பட்டிருக்காதே! யூதர்கள் எல்லாரும் அவர் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையாகிய கிறிஸ்து என்று சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கியிருப்பார்களே! வேறொரு அப்பாவி சிலுவையில் அறையப்பட வேண்டிய தேவையும், அவசியமும் இல்லையே. தாங்கள் செய்கிறது இன்னது என்று அறிந்து பாவ சங்கீர்த்தனம் செய்து தங்களின் பாதகச் செயலுக்கு மன்னிப்புக் கோரியிருப்பார்களே!!

**நான்காவதாக**, இயேசு காட்டிக் கொடுக்கப்பட்ட இராத்திரியிலும். அந்த கேலிக்கூத்தான நியாய விசாரணையிலும் இயேசுவின் சீஷர்களில் சிலரும், தொண்டர்களில் சிலரும் அங்கே இருந்தார்கள். நடந்தவற்றை கவனித்துக் கொண்டிருந்தார்கள். எனவே, பரிசுத்த





ஆவியானவரின் ஏவுதலினால் சிலுவை மரணத்தின் விவரங்களைத் துல்லியமாக நற்செய்தி நூல்களில் எழுதியுள்ளனர். இவ்வாறு எழுதப்பட்ட விவரங்களும் ஏனையச் சரித்திரச் சான்றுகளும் அரசாங்க ஆவணங்களும் இந்த உண்மையை உறுதிப்படுத்துவதால். குர்-ஆனில் குறிப்பும். இஸ்லாமிய அறிஞர்களின் வியாக்கியானங்களும் உண்மைக்குப் புறம்பாக இருக்கின்றன.

**ஐந்தாவதாக,** அல்ராசியின் தர்க்கத்தில் உள்ள ஒரு பெரிய முரண்பாடு என்னவென்றால். "இயேசுவின் சீடர்களில் சிலர் அங்கிருந்தனர், அவர்கள் முன்னிலையில் இவை எல்லாம் நடைபெற்ற படியால் அவர்களே இந்த சந்தேகத்தை நீக்கி விடுவார்கள்" என்று கூறிவிட்டு, அவர்கள் ஒரு சிலராக இருந்தபடியால் அவர்களுக்கு மனப்பிரமை அல்லது வஞ்சகம் ஏற்படுவதும்சாத்தியமே, சிறுபான்மையினரின் வாய்மொழிக் கூற்று நம்பிக்கைக்குப் பாத்திரமல்ல" என்றும் முன்னுக்குப் பின் முரணாகக் கூறுகிறார். எவ்வளவு எதிரும் புதிருமான விளக்கமாக இருக்கிறது. கிறிஸ்துவின் பாடுகள் சிலுவை மரணம் ஆகியவற்றிற்கு இந்த சந்தேகங்களைப் போக்கி விடுவார்கள் என்றும் கூறிய கனத்துக்குரிய அதே அல்ஃபக்ர்- அல்-ராசி தாம் கூறினதையே பொய்யாக்குகிறது போல. அதே சீஷர்கள் மதி மயங்கி இருந்ததால் மெய்ச்சம்பவத்தை அறியாதிருந்தார்கள்: ஆகையால் நமது நம்பிக்கைக்கும் பாத்திரவான்கள் அல்ல என்று கூறுகிறார். உண்மையாதெனில் இவ்வாறு அசைக்க முடியாத சங்கிலித் தொடர் போன்ற ஆதரவான பன்னிரண்டு சாட்சிகளை குர்-ஆனின்

சம்பவங்களிலோ, கொள்கை விளக்கங்களிலோ அல்லது இஸ்லாமியப் பாரம்பரியங்களிலோ காணக்கிடைக்காது! கிறிஸ்து சிலுவையிலறையப்படுவதைப் பார்த்தோரும், அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு அவர் காட்சியளித்தவர்களும், ஈடுபாடு கொண்டவர்களும், இறுதியாக அவர் பரமேறிச் சென்ற வேளையிலும் ஒலிவமலை மீது நின்று பார்த்துக் கொண்டிருந்தவர்களும் 500 பேருக்கும் அதிகமானவர்கள். ஆதலால் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பற்றிய சீஷர்களின் சாட்சியும் எழுத்தும் முற்றிலும் நம்பத்தகுந்தவையே.

**ஆறாவதாக,** ஓரிரு ஆதாரங்களைத் தவிர. பிறருடைய அபிப்பிராயங்கள் எல்லாம் கிறிஸ்துவுக்குப் பதிலாக அறையப்பட்டவர் ஷபீஹ்–கிறிஸ்துவை விசுவாசியாதவரே. மேலும் ஆராயுங்கால் ஷபீஹ் கிறிஸ்துவின் எதிரி என்றும் புலப்படுகிறது. அங்ஙனம் அவிசுவாசியாகவும், இயேசுவின் சத்துருவாகவுமிருந்தால். "நான் இயேசு அல்ல, நான் கிறிஸ்து அல்ல என்னைக் கொல்ல வேண்டாம் எனக்கு உயிர் பிச்சையளியுங்கள்" என்று கதறி. கூவி அழுதிருக்க மாட்டாரா? "நான் ஏன் சாக வேண்டும்? அதிலும் இயேசுவின் பிரதி நிதியாக! எனக்கும் அவருக்கும் சம்பந்தமில்லை! நான் என்ன குற்றம்! தவறு செய்தேன்?" என்று புலம்பி அழுதிருக்க வேண்டும் தவறாகத் தண்டிக்கப்படுகிறவர் தன்னைத் தப்புவித்துக் கொள்ள எவ்வளவோ முயற்சிகள் எடுத்திருக்க வேண்டும்! உயரிய இலட்சியத்துக்காக வேண்டுமானால் தமது ஜீவனைப் பணயம் வைக்கலாம். அவ்வாறு எதுவுமே இங்கே காணப்படவில்லை.





எல்லாவற்றிற்கும் மேலாக, குர்–ஆனில் முகம்மது நபி கூறியுள்ள வர்த்தமானங்கள் அனைத்தும் உண்மை என்று அல்ராசி சாதிப்பது போலவே எவ்வளவேனும் தவறு பொய் அணுகாத கிறிஸ்துவும் அவரது சீடர்களும் கூறியுள்ள வர்த்தமானங்கள் அனைத்தும் கலப்படம் எதுவுமில்லாத மெய்யே என்று நாமும் வலியுறுத்துகிறோம். ஆறு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஆதாரமில்லாமல் சொல்லப் பட்ட ஒரு வாக்கியம் சரித்திரத்தையும் அது சம்பந்தப்பட்ட ஆதாரங்களையும் பொய்யாக்கி, ரத்துச் செய்திட முடியாது.

முஸ்லீம் நிபுணர்களுக்குள்ளேயே ஷபீஹ் ஐப்பற்றி கருத்து வேற்றுமைகள் நிலவுகின்றன. முஸ்லீம் வரலாற்று ஆசிரியர்களும், வர்ணனையாளர்களும் தங்களது கற்பனையில் தோன்றினதை எல்லாம், விகற்பமாக போதுமான ஆராய்ச்சி இல்லாமல், தாங்கள் கூறுவதின் மெய்ப்பொருளை உறுதிப்படுத்தத் துணியாமல் மனம்போல எழுதி வைத்திருக்கின்றனர். என்னென்று சொல்வது! எனவே வரலாற்று ஆய்வுகளோ, புதைபொருள் ஆய்வுகளோ, வேறெந்த நம்பகமான ஆதாரங்களோ இல்லாமல் ஷபீஹ் போன்ற வதந்திகளையும். ஜோடனைகளையும் புராணங்களாக எழுதித் தீர்த்துவிட்டனர். எனவேதான் இத்தனை முரண்பாடுகள்! இஸ்கந்தர் ஜதீத் என்ற பெரியார் இந்தப் புராணப் புரட்டுகளையும். கதைகளையும் கூட்டித்திரட்டித் தொகுத்து அவை ஒவ்வொன்றும் எவ்வாறு, ஆள் பெயர், ஊர்ப்பெயர், காலக்கட்டம், மற்றும் நிகழ்ச்சி விவரங்களில் ஒன்றையொன்று மறுப்பதாகவும். பொய்யாக்குவதாகவும்

ஏகசிந்தை, இசைவு இல்லாததாகவும் இருக்கின்றன என்பதைத் தமது நூலாகிய (பைபிளிலும், குர்–ஆனிலும் சிலுவை என்பதில்விளக்கிக் கூறியிருக்கிறார். இதில் ஆச்சரியப்படுவதற்கும் ஏதுவுமில்லை. ஏனெனில், ஒவவொரு ஆசிரியரும், தமது மனோராஜ்யத்திலிருந்து தோன்றின கட்டுக்கதைகள் உண்மை வரலாறு போலத் திரித்து எழுதியிருக்கின்றனர். எல்லாருடைய இரட்சிப்புக்கும் ஆதாரமாகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைப் பொய்யாக்குவதற்காகவே, சுவிசேஷத்தில் நுட்பமான நாட்குறிப்புகளையும், புள்ளி விவரங்களையும், சந்தேகத்திற்கிடமான, இரட்டை அர்த்தங்கொள்ளும் ஒரே ஒரு குர்–ஆனின் வாக்கியத்தின் மூலமாக பொய்யாக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட வீண் முயற்சி.

குர்–ஆன் தோன்றுவதற்கு முன்பாகவே, வேறு சில ஆதார மற்ற பாரம்பரியங்களும் இவ்விதமாகக் கூறத் துணிந்ததால் குர்–ஆனின் கூற்று ஒரு புதுமை அல்ல என்று எண்ணுகிறோம். இஸ்லாம் உதயமாகிறதற்கு முன்பாகவே, முதல் ஆறு நூற்றாண்டுகளில் வேதப்புரட்டர்கள் சிலர் இவ்விதமான பொய் உபதேசத்தை வதந்தியை மெய் போலப் பரப்பி வந்துள்ளனர். "நாஸ்டிக்ஸ்" **(Gnostics)** என்ற தத்துவ சாஸ்திர வகுப்பார், சிரேனே ஊரானாகிய சீமோன். கிறிஸ்துவின் சிலுவையைச் சுமந்து களைத்துத் தவித்துப் போயிருந்த வேளையில் அவருக்குப் பதிலாக அறையப்பட சம்மதித்தான் என்றும், அவ்வேளையில் இயேசுவைப் போல சீமோன் மாறும்படி கடவுள் செய்துவிட்டார் என்றும், பொய்ப் பிரச்சாரம் செய்து வந்திருக்கின்றனர். இதன் தொடர்ச்சிதான் குர்–ஆனின் கூற்று.





கிறிஸ்து சிலுவையிலறையப்படவேயில்லை. ஒருவரும் சிலுவையிலறையப்படவில்லை. யூதர்களுடைய கண்களுக்கு இயேசு சிலுவையிலறையப்பட்டதாகத் தோன்றினது. அது வெறும் மாயத்தோற்றமே என்று 'டோசடிக்' **(Docetists)** நம்பி வந்தனர். 'டோசடிக்' என்றால் தோற்றமளித்தல். காணப்படல் என்று கிரேக்க மொழியில் அர்த்தமாகும். எனவே இந்த வகுப்பாரின் சிலுவைப் போதனை இவ்வாறிருந்தது.

ஷபீஹ் என்கிற புரளி சபையின் சரித்திர காலம் முழுவதுமே இருந்து வந்திருக்கிறது. சிலகாலம் மறைந்திருந்தாலும் அல்லது மங்கியிருந்தாலும். பலகாலமும் மீண்டும் மீண்டும் அது தலையெடுத்துக் கொண்டே இருக்கிறது. உதாரணமாக, கி.பி185இல் 'தீப்ஸ்' **(Thebes)** என்ற ஆசாரியப் பிரிவினரின் வழித்தோன்றல்கள் பின்பு கிறிஸ்துவத்தை தழுவினவர்கள்; "கிறிஸ்து சிலுவையிலறை யப்படுவதைக் கடவுள் வெறுக்கிறார். ஆகவே அவர் இலகுவாக பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்" என்று கருதவும் போதிக்கவும் துவங்கினர். கி.பி. 370 இலும் நாஸ்டிக் சந்நியாசிகளும் "கிறிஸ்து சிலுவையிலறையப்படவில்லை: அறைந்தவர்களும், பார்வையாளர்களுக்கும் அவ்விதம் தோன்றினது என்று பிரச்சாரம் செய்து வந்தனர். சுமார் கி.பி. 520 இல் ஓடிப்போன சிவியிரஸ் என்ற பேராயர் அலெக்ஸாண்ட்ரியாவில் சந்தித்த ஒரு தத்துவ சாஸ்திரக் குழுவினரும், கி.பி.560 இல் கிறிஸ்துவின் மனுஷீகத்தையும் சிலுவை மரணத்தையும் மறுதலிக்கிற தியோடர் என்கிற துறவியும், 610இல்சைரஸ் கவர்னரின் மகன் ஜான் என்ற பேராயரும் இந்த துர்ப்போதனையையே பிரசங்கித்து

வந்தனர். வேறு சில நம்பற்கரிய புரட்டுகளும் நிலவி வந்தன. அவற்றுள் ஒன்று நாயீனூர் விதவையின் மகன் தான் சிலுவையிலறையப்பட்டான் என்பதும் மற்றொன்று சாத்தான் இயேசுவை சிலுவையிலறையப் பிரயாசப்படும்போது. அவனே மாட்டிக் கொண்டு அறையப்பட்டான் என்பதுமாகும்.

இந்த சுருக்கமான சரித்திரத்தின் கருப்பொருளாவது இந்தக் கள்ளப்போதனைகளான "ஷபீஹ்" ஐயும், கிறிஸ்துவின் பிராயச்சித்த பலியாகிய சிலுவையின் மரணத்தை மறுதலிக்கிற கட்டுக்கதைகளையும் வேதப்புரட்டுகளையும் இஸ்லாம் தனதாக்கிக் கொண்டுள்ளது. முகம்மது வாழ்ந்த காலத்தில் அரேபிய தீபகற்பத்தில் இவை பரவலாகப் பேசப்பட்டு வந்தன எனவே கான்ஸ்டாண்டி நோபிள் ஆலோசனைச் சங்கத்தில் ஆணையின்படி. "குழப்பங்களும், கலவரங்களும், பிரிவினைகளும் எழும்பியுள்ள அரேபியா மற்றும் எருசலேமிலுள்ள சபைகளையும் சந்தித்து, நிலைமையைச் சீர்தூக்கிப்பார்த்து, சீராக்கி வர "நிஸ்ஸா" நகரத்துப் பேராயர் ஃகிரிகோரி அனுப்பப்பட்டார் என்று அதிகாரபூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன. வேதாகம மற்றும் வரலாற்று ஆதாரங்களை விட்டுவிட்டு கற்பனைக் கதைகளையும் அஞ்ஞானிகளின் அபிப்பிராயங்களையும், வதந்திகளையும் சார்ந்து, இயேசுவின் மாம்ச சரீரத்தின் தன்மையைப் பற்றியே அதிகம் கவனம் செலுத்தினர்.

## கடவுளின் வஞ்சகம்

தர்க்க ரீதியில் மாத்திரம் அல்லது குதர்க்கமாக நோக்குங்கால். (கர்த்தர் நம்மை மன்னிப்பாராக). ஷபீஹ் கதையின் அநுமானம் உண்மை என்று கொள்வோமானால்,





பொய், மாய்மாலம், வஞ்சகம், துரோகம், ஏமாற்றுதல் எனும் குணாதிசயங்களைக் கடவுளுக்குச் சாட்டுகிறவர்களாக இருப்போம். மேலெழுந்தவாரியாக நோக்கின், ஷபீஹ் (அல்லது மாய புருஷனின்) சிலுவை மரணத்தையும் உயிர்த்தெழு தலையுமே சீடர்கள் தீவிரமாகப் பிரசங்கித்தார்கள் என்றாகும். அத்துடன் ஆறுநூற்றாண்டுகள் வரைக்கும். அதாவது இஸ்லாமிய மதம் துவங்கும்வரைக்கும். ஏன் அதற்குப் பின்னரும். இந்த இருபது நூற்றாண்டுகளாக கிறிஸ்துவின் அடியவர்கள் இந்த மாயக்கண்ணியில் சிக்கி, பித்தாலட்டத்தை நம்பி. அதையே பிரச்சாரமும் செய்து வருகிறார்கள் என்று தானே அர்த்தம். இப்படியானால் யார் மீது குற்றஞ் சுமருகிறது? யார் இந்த மாய்மாலத்திற்குக் காரணர்? எல்லாம் வல்ல. நல்ல இறைவனல்லவா? நீதியுள்ள தேவன் தம் மக்கள் மீது இந்தக் கொடிய வஞ்சத்தைச் சுமத்துவாரா? இந்தக் காரியதைச் செய்தவர் நான்தான் என்று சர்வவல்லமையுள்ள தேவன் தம்மீது அன்பு கொண்டு. தம்மை நம்பியிருக்கிற தம் பிள்ளைகளுக்குத் தெளிவாகத் தெரியப்படுத்தாமல் மறைத்துக் கொண்டே இருப்பாரா? கிறிஸ்தவ சபை இவ்வளவு காலமாக இந்தப் பொய்யையும் பித்தலாட்டத்தையும் நம்பிக் கொண்டிருப்பதில் தேவனுக்கு மகிமையா, மகிழ்ச்சியா, ஷபீஹ் புருஷன் தான் சிலுவையிலறையப்பட்டவன். இயேசு கிறிஸ்து அல்ல என்றால், இத்(துர் உபதேசத்துக்கும்), வேதப்புரட்டுக்கும் அதாவது , இயேசுவே சிலுவையிலறையப்பட்டவர் என்ற தவறான. பிழையான போதனைக்குக் காரண கருவி கடவுளல்லவா? எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் கிரேக்கர்கள், இந்துக்கள் ஆகிய அஞ்ஞானிகளின் தேவர்களில் ஒருவர்

போலத்தான் இருக்கிறாரா? மற்றவர்களை விட இவர் எவ்விதத்தில் பரிசுத்தமுள்ள தேவன் ஆவார்? ஆனால் நாம் நன்கு அறிந்த உண்மையானது, நமது தேவன் இந்த வெறுக்கத் தகுந்த, அருவருப்பான குணாதிசயங்களுக்குச் சிறிதளவேனும் பாத்திரர் அல்லர். அவர் மகா பரிசுத்தமுள்ள, உண்மையுள்ள நீதிபரராகிய தேவன் ஒருபோதும் தம்மைத்தாம் மறுதலிக்கவும் மாட்டார். பொய் சொல்ல தேவன் ஒரு மனிதனல்ல; மனம்மாற அவர் மனுபுத்திரனுமல்ல: எந்தவிதமான "ஃப்ராடும்" அணு அளவேனும் இந்தப் பரிசுத்த தேவனிடத்தில் கிடையாது.சிலுவையிலறையப்பட்டவர் இயேசு கிறிஸ்துவே; மரணத்தை ஜெயித்து உயிரோடெழுந்த வெற்றி வீரரும் இயேசு கிறிஸ்துவே, மறுபடியும் மகிமையில் திரும்பி வரப்போகிறவரும் அதே இயேசு கிறிஸ்துதான். அவருக்குத் துதிகனம் மகிமையைச் செலுத்துவோமாக.

### கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் : சபையின் சக்தி

கடைசியாக கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே கிறிஸ்தவ விசுவாசத்தின் அச்சாணியாகும். சபையின் சரித்திரத்திலும் அதன் வளர்ச்சியிலும் மிகவும் முக்கியமான பங்கு வகிப்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலேயாகும். இது ஒரு சாதாரண நிகழ்ச்சியல்ல. சபையின் சக்திக்கும் வளர்ச்சிக்கும் மூலாதாரமாக இருப்பது உயிர்த்தெழுதலின் இரகசியமே. இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் மனித இரட்சிப்பின் அஸ்திபாரமென்றால். அவரது உயிர்த்தெழுதல் அவரது சபையின் வெற்றி வாகையாயுள்ளது. உயிர்த்தெழுதலில்லாத சிலுவை மரணம் அற்பமும், சிலுவை மரணமில்லாத உயிர்த்தெழுதல் அர்த்தமற்றதுமாக இருக்கிறது.





அதேவேளையில் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவரது மரணத்தை உறுதிப்படுத்துகிறது. மெய்ப்பிக்கிறது. இயேசு உயிருடனெழுந்த பிற்பாடு தம்முடைய அப்போஸ்தலர்களுக்கும், சீஷர்களில் நூற்றுக்கணக்கான பேருக்கும் தரிசனமானார். அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத்தம்மை உயிரோடிக்கிறவராகக் காண்பித்தார். சிலுவையிலறையப்பட்ட அதே சரீரம் தான் என்பதற்குரிய அச்சடையாளங்களை, கைகளில்-கால்களில்-விலாவிலுள்ள தழும்புகளைக் காண்பித்து, அவர்களது சந்தேகத்தை அறவே நீக்கினார். இவ்வாறு 40 நாட்களாக அவர்களுடன் சஞ்சரித்து, தமது மரணம் அடக்கம்-உயிர்த்தெழுதலின் ஆவிக்குரிய முக்கியத்துவத்தையும், அதனால் மனுக்குலத்துக்கு ஏற்படும் மாபெரும் விளைவுகளையும் விளக்கிக் கூறினார். தன்னுடைய விரல்களையே இட்டுத் தமது தழும்புகளைப் பார்க்குமாறும், சிலுவையிலறையப்பட்ட இயேசுவே தாம் என்பதனையும் சந்தேகப் பிராணியாக இருந்த தோமா அப்போஸ்தலனுக்கு நிரூபித்துக் காட்டினார். தனது சகாக்களின் வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ள மறுத்து, அதிக துக்கத்தினால் மனம் பேதலித்துத்தான் அப்படிப் பேசுகிறார்களோ என்று அதிசயித்த, ஐயமுற்ற தோமாவிற்கு இந்த அறை கூவலைத் தந்தார்.

> "............... அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டனா காயத்தை நான் கண்டு. அந்தக் காயத்திலே என் விரலையிட்டு. என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான்" (யோவான் 20:25)

அவனுடைய கேள்விக்கு விடை கிடைத்ததை இவ்வாறு வாசிக்கிறோம்.

> “மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும் அவர்களுடனே கூட இருந்தான் கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப் பொழுது இயேசு வந்து நடுவே நின்று! உங்களுக்குச் சமாதானம் என்றார்.
>
> பின்பு அவர் தோமாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார். உன் கையை நீட்டி என் விலாவிலே போடு. அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார் **(யோவான் 20:26:27)**

இப்பகுதி நமக்கு எதனை வெளிப்படுத்துகிறது என்றால் கிறிஸ்துவின் சிலுவை மரணமும்-அதனைத் தொடர்ந்து அவருடைய உயிர்த்தெழுதலும் அவருடைய சொந்த சீஷர்களாலேயே, மெய்யடியார்களாலேயே விஞ்ஞான ரீதியில் ஆராய்ந்தறியப்பட்டது என்பதனையே போதுமான நிரூபணம் இன்றி அவர்களில் எவரும் எதையும் நம்பத் தயாராயில்லை இங்ஙனமிருக்க, இயேசுவின் முடிவையும், உயிர்த்தெழுதலையும், எவ்வளவு சுலபமாக, ஆதாரம் எதுவுமில்லாமல் நிராகரிக்கவும் பழித்துப்பேசவும், அலட்சியப்படுத்தவும் கடவுள் பக்தியுள்ள மக்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கிறவர்களே முற்படுகிறார்கள்.





இது புதிதாகப் புனையப்பட்டதுமல்ல புதிய கண்டுபிடிப்புமல்ல. சுவிசேஷ நூல்களின் உண்மைத் தத்துவத்தையே உறுதிப்படுத்துகிறது.

## சிலுவை மரணத்துக்கு வேதாகமக் காரணங்கள்

நமது விசுவாசத்துக்குக் காரணம், நியாயம் என்ன என்பதை உறுதிப்படுத்துவதற்கும். நிரூபிப்பதற்கும் நாம் நமது பரிசுத்த வேதாகமத்தைக் கவனித்து, ஒத்துப் பார்க்க வேண்டிய கடமை. உத்தரவாதம் கிறிஸ்தவர்களாகிய நம்மீது சுமருகிறது. வரலாற்று ஏடுகள், புதைபொருள் ஆராய்ச்சி ஆகிய இவ்விரண்டுமே வேதபுத்தகத்தின் உரிமைகளை ஆதரிக்கின்றன. நமது வேதத்தில் எழுதப்பட்டிருப்பவைகளை மட்டும் உண்மையென்று ஏற்றுக்கொள்ள மறுக்கும் எந்த ஒரு நாத்திகனுக்கும், பகுத்தறிவு வாதிக்கும், முஸ்லீமுக்கும் இந்த ஆதாரபூர்வமான, மறுக்க முடியாத சரித்திர மற்றும் புதைபொருள் ஆய்வின் முடிவுகள் போதுமான சான்று களாகும். இப்பொழுது இன்னும் சில வேதாகம சத்தியங்களைப் பார்ப்போமாக.

### பிராயச்சித்தம்

பிராயச்சித்தம் என்ற கருத்து கிறிஸ்தவத்துக்குரிய புதுமையான எண்ணம் அல்ல. பழமையான சிந்தனையே அஞ்ஞானிகளின் மத்தியிலும் இது ஒரு மனிதாபிமானக் கொள்கையாகவும், பழக்கவழக்கமாகவும் இருந்து வந்திருக்கிறது. பழைய ஏற்பாட்டு முறைமையின்படி, ஆதாம் ஏவாளின் வீழ்ச்சிக்குப் பிறகு பாவநிவாரணமாகப் பலிசெலுத்தும் நியமனம் தேவனால் ஏற்படுத்தப்பட்டது. ஆதாமும்-ஏவாளும் தங்கள் பாவத்தை அறிக்கை செய்து,

தேவனுடைய கற்பனையைத்தாங்கள் மீறி விட்டோம் என்று உணர்த்தப்பட்ட பிற்பாடு. தேவனே ஒரு மிருகத்தின் இரத்தத்தைச் சிந்தவிட்டு, அதன் தோலினால் அவர்களிருவருடைய நிர்வாணத்தை மூடினார். (ஆதி 3:20) எழுத்து அர்த்தத்தின்படி பிராயச்சித்தம் **(Atonement)** என்றால் "மூடுதல்" அல்லது "மறைத்தல்" என்று பொருளாகும். தேவனுடைய நீதிநெறியின்படி நடக்கத்தவறின மனிதனுக்கு தேவன் செய்த பரிகாரம் அல்லது பிராயச்சித்தமாக இருக்கிறபடியால், இந்த நியமனம் முழுவதுமே தேவனிடமிருந்தே தோன்றினது. மற்ற மதங்களின் சடங்காச்சாரங்களிலும். ஆராதனைகளிலும் இந்த முறை வெளிப்படையாய்க் காணப்படுகிறது. ஆபேலும், காயீனும் கடவுளுக்குக் காணிக்கை செலுத்த வந்தார்கள். ஆபேலையும்அவன் காணிக்கையையும் தேவன் அங்கீகரித்தார். ஏனென்றால் தனது மந்தையின் தலையீற்றுகளில் சிலவற்றைக் கொண்டு வந்து, இரத்தம் சிந்தி பலி செலுத்தினான் ஆனால் காயீனோ தன் கையின் கிரியைகளால், இரத்தமின்றி காணிக்கை படைத்தான், தேவனோ அவனையும்அவன் காணிக்கையையும் நிராகரித்தார். அங்ஙனமே நோவா ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு எல்லாரும் தேவ நியமனத்தின்படியே மிருகபலி செலுத்தினார்கள்.பின்னர் மோசேயின் காலத்தில் இந்தப் பலிமுறைகளெல்லாம் நெறிப்படுத்தப்பட்டு நியாயப்பிரமாணப் புத்தகத்தில் கோர்வையாக எழுதப்பட்டன. இந்தப் பலிகள் எல்லாம் கடைசியாக வரப்போகின்ற நித்தியமான, உன்னதமான உண்மையான கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்கு அடையாளங்களாகவும், நிழலாட்டமாகவும்





இருக்கின்றன. அவை எல்லாம்நிழலேயன்றி நிஜமல்ல. சடங்காச்சாரமேயன்றி சத்துவமுள்ளவையல்ல என்பதனை வேதசாஸ்திரிகள் அனைவரும் ஏகமனதாக விளக்கிக் கூறியுள்ளார்கள். இந்தப் பழைய ஏற்பாட்டுப் பழக்கவழக்கங்களையும், பலி முறைகளையும் தொழுகை முறைகளையும் பிறமதத்தினர்கள் கையாண்டு, தங்கள் விக்கிரக தெய்வங்களுக்குப் படைத்துள்ளனர். அவர்கள் மெய்நோக்கத்தை அறியமாட்டாதவர்களாகையால். உயிரினப் பலிகளையே பாவமன்னிப்புக் கென்றும். தெய்வங்களைச் சாந்தி செய்வதற்காகவும் பலியிடத் துவங்கினர்.

நற்கிரியைகளும், புண்ணியங்களும் புனித யாத்திரையுமே பாவமன்னிப்பிற்கான பிராயச்சித்தம் ஆகும் என்று இஸ்லாம் போதிக்கிறது. தானதர்மங்களும் நற்கிரியைகளும், பாவங்களையும், துர்க்கிரியைகளையும் அழித்துவிடுகின்றன. அத்துடன் ஐந்து தூண்களான கர்மங்களை நிறைவேற்றுதலும். அல்லாஹ் நாமத்தில் போரிடுவதும், குர்–ஆனைப்பாராயணம் பண்ணுதலும் பாவ மன்னிப்பைச் சம்பாதிக்கின்றன என்று முஸ்லீம்கள் நம்புகின்றனர். (இஸ்கந்தர் ஜதீதின் பாவநிவாரணம் இஸ்லாமிலும் கிறிஸ்தவத்திலும் என்ற நூலில் 33–41 பக்கங்களைப் பார்க்க)

இந்த ஆய்வினை முடிப்பதற்கு முன்பாக, 'பணயம்' அல்லது மீட்பின் கிரயம் என்ற கருத்தைப் பற்றி இஸ்லாமும் குறிப்பிடுவதால், அதனையும் பார்ப்பது நல்லது. ஆபிரகாமும் அவனது குமாரனைப் பலியிடப் பூரணமாகச் சம்மதித்ததுமான சந்தர்ப்பத்தைக் கூறும்பொழுது சூரா

அல்-ஸஃபத் 37:107 இல் இறைவாக்கு இவ்வாறு குறிப்பிடுகிறது.

ஆயினும், நாம் ஒரு மகத்தான பலியைக் கொண்டு அவருக்குப் பகரமாக்கினோம். நாஸிர் அல்-தீன் அல்-பைதவி தமது நூலில், இவ்வாறு விளக்குகிறார். அவனுக்குப் பதிலாகப் பலியிடப்பட்டது எதுவோ, அந்தக்கிரியையினால் அது நிறைவடைந்தது.

அல்ராசியும் ஒரு பாரம்பரியத்தின் மூலமாக இவ்வாறு விளக்குகிறார்; ஸுத்தி உரைப்பதாவது. ஆபிரகாம் வெளியே அழைக்கப்பட்டார் ஆபிரகாம் சுற்றும் முற்றும் பார்த்த பொழுது கருப்பும் வெள்ளையும் கலந்த ஒரு செம்மறிக்கடா மலையிலிருந்து இறங்கி வருகிறதைப் பார்த்தார். அதனைப் பிடித்து தமது மகனருகில் கொண்டு சென்று, மகனை விடுவித்து விட்டு செம்மறிக்கடாவைப் பலியிட்டார். என் மகனே, இன்றைக்கு நீ ஒரு பெரிய ஈவாக எனக்கு அருளப் பட்டிருக்கிறாய். அந்த ஆடு எதிர்பாராத வரப்பிரசாதமாகவும், தனது மகனுக்கு ஈடாக இறைவனால் அங்கீகரிக்கப்பட்டதென்றும் பாராட்டினார்.

எவ்வாறு அவருடைய குமாரன் ஆபிரகாமுக்கு ஒரு ஈவாகக் கொடுக்கப்பட்டான்? ஆபிரகாமின் குமாரனுக்குப் பதிலாக அல்லது ஈடாக வெள்ளையும் கருப்புமான செம்மறி கொல்லப்பட்டதினாலேயே, ஆடு மகனுக்குப் பலியாக அமைந்தது. இவ்வாறு அவன் மறுஜீவன் அல்லது வாழ்வு பெற்றான். அந்தச் செம்மறிக்கடாவும் மதிப்பும், முக்கியத் துவமும் வாய்ந்தது ஏனென்றால் முதலாவதாக, தேவனே





இதனை ஆயத்தம் செய்தார்: இரண்டாவதாக.அது சர்வ லோகத்தின் மீட்பராக வெளிப்பட்டு அனைத்து மனித வர்க்கத்தின் பாவ மன்னிப்புக்காக இரட்சிப்புக்காக, கடைசியும் முடிவானதுமான பெரிய பலியாகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுக்கப் போகிற கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருந்தது. அவரைச் சுட்டிக் காண்பித்துத்தான். "இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" (யோவான் 1:29) என்று யோவான் ஸ்நானகன் கூறினான்.

"இஹியா உலுமுத்தீன் அல்-தின்" என்ற தமது நூலில் முதல் புத்தகம் 243ம் பக்கத்தில் அபூஹமத் அல் கசாலி என்ற மிகப் பெரிய இறையியல் வல்லுநர் இவ்வாறு கூறுகிறார்.

> "ஒரு பலியிடுவது இறைவனுக்கு நெருக்கமாக வருவதற்குரிய ஒரு மார்க்கமாகும். அதாவது கீழ்ப்படிதலின் வழியாகும் ஏனெனில், பலி எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாக இருக்கிறதோ, அதன் உடற்பகுதிகள் எவ்வளவு அதிகமாயிருக்கிறதோ.அந்த அளவிற்கு நீ நிச்சயமாக நரகத்தில் இருந்து மீட்கப்படுவாய் என்ற வாக்குத்தத்தம் உண்டா யிருக்கிறதென்று நீ அறிய வேண்டும்.

அதே நூலில் மேலும் அல்-கசால் முஸ்லீம்கள் ஒரு மிருகத்தைப் பலியிடுவதினாலே கடவுள் தமக்கருகிலிருப்பதை உணரலாம் என்று கூறுகின்றார்.

“ஒரு மிருகத்தைப் பலியிடுவதினாலே அல்லாஹ் மிகவும் அருகிலிருப்பதை உணருங்கள். உருவத் தில் பெரியதும். பலத்ததுமான மிருகத்தையே பலிக்கெனத் தெரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள் என்று நபிகள் வலியுறுத்திக் கூறியுள்ளார். பலி செலுத்தும் நாளிலே மனிதருடைய நடவடிக்கைகள் யாவற்றிலும் இறைவன் உள்ளத்துக்கு அதிக அருமையானது. உவப்பையளிப்பது மிருகபலியே. உயிர்த்தெழுதலின் நாளிலே அந்த மிருகமும் தனது குளம்புகளோடும், கொம்புகளோடும் தோன்றி தனது இரத்தத்தைச் சிந்த விடும்பொழுது, அது தரையில் விழுவதற்கு முன்பாக இறைவ னருகில் விழும். ஆதலால் பலியினால் உங்கள் ஆத்துமாக்களைச் சுத்திகரியுங்கள். ஹதீத் எனும் நபிகளின் பாரம்பரியத் தொகுப்பில் பலி மிருகத்தின் ஒவ்வொரு ரோமத்துக்கும் ஒவ்வொரு சொட்டு இரத்தத்துக்கும் மதிப்பு இருப்பதால், வெகுமதி உண்டு. அது இறைவன் முன்னிலையில் நிறுத்துப் பார்க்கப்படும். என்ற குறிப்பு காணப்படுகிறது. சிறந்ததொரு



கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் அறையப்பட்டாரா?

மிருகத்தைப் பலியிடுங்கள் ஏனெனில்
அதுவே உங்களை உயிர்த்தெழுதலின்
நாளுக்குச் சுமந்து வரும்

(ஆதாரம் கசீலின் நூல் பக்கங்கள் 250-251) என்று நபிகளே கூறியுள்ளார்.

### தீர்க்கதரிசனங்கள்

இரண்டாவதாக இயேசு கிறிஸ்துவின் மரணம் உயிர்த்தெழுதலைப் பற்றி ஏராளமான முன்னறிவிப்புகள் பழைய ஏற்பாட்டில் அடங்கியுள்ளன. வேத வாக்கியங்களின்படியே அவர் மரித்தார் - உயிர்த்தார் என்று தான் புதிய ஏற்பாடு நினைவு படுத்துகிறது. பழைய ஏற்பாட்டிலுள்ள முப்பத்தொன்பது நூல்களில் ஏசாயா என்ற ஒரே ஒரு புத்தகத்தைப் பொதுவாக நோக்கினாலே, இந்த சம்பவத்திற்காக தீர்க்க தரிசிகளாகிய இறைவாக்காளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர் என்பது நன்கு புலப்படும். இவற்றை எல்லாம் மேற்கோள் காட்டுவதென்றால் இப்பொழுது சமயமும் சந்தர்ப்பமும் போதாது. எனவே மிகாயில் லபீபின் “சிலுவையின் தால்பரியம்” என்ற விசேஷித்த நூலைப் படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

### இயேசுவின் சாட்சி

மூன்றாவதாக, கிறிஸ்துவும் தம்முடைய சீஷர்களுடன் உரையாடுகையில் அடிக்கடி தமது மரணம் - உயிர்த்தெழுதலைக் குறிப்பிட்டார். நான்கு சுவிசேஷங்களிலும் இதற்கு எண்ணிறந்த ஆதாரங்கள் உள்ளன. இவ்வாறு ஒரு தலைவர் தமது மரணத்தைப் பற்றியே அடிக்கடி பேசி வந்தார்

என்றால் ஒன்று அவர் உண்மையுள்ள யதார்த்தவாதியாக இருக்க வேண்டும். அல்லது பைத்தியக்காரனாகவோ, மனக்குழப்பமுள்ளவனாகவோ அல்லது பொய்யனாகவோ இருந்திருக்க வேண்டும். நிச்சயமாக ஐயகோ! இயேசு கிறிஸ்துவின் ஜென்ம விரோதிகளும், அல்லது எந்த முஸ்லீமும் அவரைப்பைத்தியம் பிடித்தவரென்றோ, பொய்யரென்றோ குற்றஞ்சாட்டமாட்டார்களே! அப்படிச் சொல்வதற்கு எவருக்கும் வாய் கூசுமே ஆனால் அவர் போதித்தது, பிரசங்கித்தது, அல்லது தம்மைப் பற்றி கூறினது முற்றிலும் உண்மை. முக்காலமும் உண்மை என்று நாம் உறுதிப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். அவருடைய பாடு – மரணம் அடக்கம் – உயிர்த்தெழுதலைப் பற்றி சுவிசேஷ நூல்களில் கூறப்பட்டவை சீஷரின் விஷமத் தனமென்றோ, பிற்சேர்க்கை அல்லது இடைச்சொருகல் என்றோ வாதிடுவது வீணும் வியர்த்தமுமாகும் என்று ஏற்கனவே கண்டோம் சீஷர்களின் நாணயத்தை, நேர்மையை யாரும் கேள்வி கேட்டதுமில்லை, சந்தேகித்ததுமில்லை. அப்போஸ்தலனும் சுவிசேஷகனுமாகிய யோவான் தனது முதலாம் நிருபம் 1:1-2 இல்

> "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம்.
>
> அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்தும்,





எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்து சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம் என்று கூறுகிறான்.

ஏனைய அப்போஸ்தலர்களும், குறிப்பாக பேதுரு அப்போஸ்தலனும். இதனையே வலியுறுத்தி, உறுதிப்படுத்துகின்றனர். அவர்களெல்லாரும் நாணயமுள்ள, நம்பத் தகுந்த நேரடி சாட்சிகள். ஆனால் அவர்களுடைய சாட்சியிலும் மேன்மையுள்ளதாக கிறிஸ்துவே தம்மைப் பற்றி கொடுத் சாட்சியாகும். அடிக்கடி 'வேதவாக்கியம் நிறைவேறும்படி' இந்தக் காரியங்கள் எல்லாம் சம்பவித்தன என்று கூறினதோடு. பழைய ஏற்பாட்டு வேதவாக்கியங்களெல்லாம் அவர்களுக்கு நினைவுபடுத்தி தமது வருகையின் நோக்கமே சிலுவை மரணம் என்பதை வலியுறுத்திக் கூறியும். போதித்தும். அவர்களும் போதிக்க வேண்டிய உண்மையான நற்செய்தி அதுவே என்றும் கற்பித்துக் கொண்டிருந்தார் . அவர்களை நோக்கி.

> "மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிற வைகளெல்லாம் நிறைவேற வேண்டியதென்று நான் உங்களோடிருந்தபோது, நான் உங்களுக்குச் சொல்லிக் கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே என்றார் ...... அவர் களுடைய மனதை அவர் திறந்து .... எழுதியிருக்கிறபடி "கிறிஸ்து

பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது" (லூக்கா 24:44-46) என்றுரைத்தார்.

மேற்கூறிய வேத வசனங்களில்இரண்டு முக்கியமான உண்மைகள் அடங்கியுள்ளன. முதலாவதாக. பழைய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசன வாக்கியங்கள் அனைத்தும் வேறெந்த தீர்க்கதரிசிக்கும், நபிக்கும் பொருந்தாமல். இயேசு கிறிஸ்து ஒருவருக்கே மாத்திரம் பொருந்தும். மோசேயின் நியாயப்பிரமாணம் தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள். மற்றும் சங்கீதங்கள் என்று இயேசு குறிப்பிடுதல். சரித்திர புத்தகங்கள் நீங்கலாக முழுவதுமான பழைய ஏற்பாடும் அடக்கமாயிருக்கிறது. தம்மைப் பற்றியுள்ள இந்த எல்லா முன்னறிவிப்புகளையும் உரிமையுடன் மேற்கோள்காட்டின மாத்திரத்தில் அவர்களுடைய அகக்கண்கள் பூரணமாகத் திறக்கப்பட்டன. மேலும் இந்தத் தீர்க்கதரிசன வாக்கியங்களை அவர்களும் அடிக்கடி வாசித்தும்அறிந்தும். இவை யாரைக் குறிக்கிறதோ என்றும் சிந்தித்துக் கொண்டிருந்தனர் காரியங்கள் இவ்வாறிருக்க. தம்மைச் சுட்டிக் காண்பிக்கும் தீர்க்கதரிசன வசனங்களைக் கொண்டு தாமே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட யூதர்கள் எதிர்பார்த்திருந்த மேசியா என்பதை இயேசு கிறிஸ்து யூதர்களுக்கு நிரூபித்துக் காண்பித்திருக்க.அதே வாக்கியங்களுள் சிலவற்றை முஸ்லீம்கள் தங்களுக்குச் சாதகமாகக் கையாண்டு. அவை முகம்மது நபியைக் குறிக்கிறது என்று விளக்க முயற்சிப்பது. வஞ்சகமானவை





என்பதை இயேசு கிறிஸ்துவின் விளக்கத்திலிருந்தும். அவருடைய சீடர்களின் வியாக்கியானங்களிலிருந்தும் இந்நூலின் ஆசிரியர் தைரியமாகக் கூறுகிறார்.

இரண்டாவதாக, இயேசு முழு உரிமையுடனும், தெளிவுடனும் கூறுவதாவது. அவர் சிலுவையிலறையப்பட்டு மரிப்பதோடல்லாமல், மூன்றாம் நாளில் மீண்டும் உயிரோடெழும்புவார் என்ற உண்மையாகும். தமது சிலுவை மரணத்தை எவரும் மறுக்கவோ, மாற்றிக் கூறவோ முடியாதபடி ஆணித்தரமாக நிரூபித்த பின்னர். மூன்றாம் நாளில் கல்லறையிலிருந்து உயிரோடெழும்புவேன் என்பதையும் நிறைவேற்றிக் காண்பித்து விட்டபடியால். எந்த நாத்திகனும். இயேசுவே நீர் ஒரு பொய்யர் என்று அவர் முகத்திற்கெதிரில் கூறத் துணிய மாட்டான்.

## அத்தியாயம் இரண்டு

# வரலாற்று ஏடுகள்



கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் அறையப்பட்டாரா?

கிறிஸ்துவின் மரணத்தை நிச்சயப்படுத்தும் ருசுக்கள் வரலாற்று நூல்களில் அநேகமிருக்கின்றன. புறஜாதிகள், புறமதத்தினர்கள், யூதர்கள், பகுத்தறிவுவாதிகள், மற்றும் கிறிஸ்தவர்கள் ஆகியோரின் இலக்கியங்களிலும், நூல்களிலும் கிறிஸ்துவின் மரணம் பல சந்தர்ப்பங்களில் காணப்படுகின்றன. கிறிஸ்துவின் வாழ்க்கையும், மரித்த விதமும் பற்றி ஏராளமான, ஆனால், ஒரே சீரான குறிப்புகள் உண்டு. இந்தச் சான்றுகளில் சற்று ஆராய்வோம்.

### அஞ்ஞானிகளின் பதிப்பேடுகள்

இந்த அஞ்ஞானிகளின் நூல் ஆதாரங்கள் இந்த ஆய்வில் முக்கியமான பங்கு வகிக்கின்றன; ஏனெனில், முதற்கண் அவர்கள் கிறிஸ்தவச் சமயத்தைச் சேர்ந்தவர்களுமல்ல, அநுதாபிகளுமல்ல, மேலும் இவை கிறிஸ்தவ சமயத்தைத் தூஷித்து,அவதூறு செய்யும் நோக்கத்தோடு கி.பி. முதல் நூற்றாண்டில் எழுதப்பட்டவையே அல்லாமல் பாராட்டுவதற்காக எழுதப்படவில்லை.

நமக்குக் கிடைக்கக் கூடிய அஞ்ஞானிகளின் எழுத்துக்கள் எல்லாம் முதலிரண்டு நூற்றாண்டுகளில் தோன்றியவை. எனினும் கிறிஸ்துவின் மரணத்தையும். அவரது காலத்தின் முக்கிய நிகழ்ச்சிகளையும் சாட்சிப்படுத்துகின்றன.

அக்காலத்திலுள்ள அரசியல் சமய நிகழ்ச்சிகளின் பின்புலத்தை ஆதாரமாகக் கொண்டு இந்த ஆசிரியர்கள் எழுதியிருப்பதால் அவர்களின் சாட்சிகளைக் கவனிப்பது மிகவும் பயனளிக்கும் அவர்களுள் தலை சிறந்தவர்.

கொர்நேலியு டாஸிட்டஸ் (கி.பி.55-120) இவர் உண்மைக்கும். நாணயத்துக்கும் பிரசித்தி பெற்ற ரோம வரலாற்று ஆசிரியர். ஆறு பேரரசர்களின் வாழ்வையும் தாழ்வையும் கண்ட மிகப்பெரிய வரலாற்று மேதை என்று கருதப்பட்டார். அவருடைய புகழ்வாய்ந்த நூல்கள் காலக் குறிப்புகளும் சரித்திரங்களும் என்ற தலைப்பில் வெளியாகியிருந்தன. 'காலக்குறிப்புகளில்' 18 நூல்களும் 'சரித்திரங்களில் 12 நூல்களும் அடங்கும் ரோம சாம்ராஜ்யத்திலே கி.பி. 88 இல் ஒரு மாஜிஸ்ட்ரேட்டாகவும். 97 இல் ஒரு நீதிபதியாகவும். 122 இல் பிரதான நீதிபதியாகவும் டாஸிட்டஸ் பணியாற்றியுள்ளார் என்று தெரிய வருகிறது. இந்த உயர்ந்த பதவிகளை வகித்தபடியால் கிறிஸ்துவைப் பற்றியும் கிறிஸ்தவர்களைப் பற்றியும் உள்ள அதிகார பூர்வமான ரோம தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுதல் டாஸிட்டஸுக்கு நிறைய வாய்ப்புகளும் வசதிகளும் இருந்தன என்று புரூஸ் என்ற சரித்திர ஆசிரியர் கூறுகிறார். அவருடைய இரண்டு அல்லது மூன்று முக்கியமான நூல்களில் நமக்குத் தேவையான வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. அவருடைய 'காலக்குறிப்புகள்' ஒன்றில்.

> "பொதுமக்களால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்ட ஒரு வகுப்பார் பல விபரீதமான கொள்கைகளையும் பழக்கவழக்கங்களையும் கொண்டவர்கள் என்ற வதந்தி பரவியிருந்த தால், நீரோ மன்னன் தனது உக்கிர பகை யையும். வஞ்சகத்தையும் தீர்த்துக் கொள்ள கிறிஸ்தவர்களை மகா பயங்கரமான கொடுமை களுக்கும். உபத்திரவங்களுக்கும் உள்ளாக்கி





> தன் மீதிருந்த குற்றச்சாட்டை மறைக்கும் முகந்தான் கிறிஸ்தவர்களைத் தனது பலிக்கடா வாக்கினான். திபேரியு இராயன் காலத்தில் பொந்தியு பிலாத்து யூதேயாவிலே தேசாதிபதி யாயிருக்கும்பொழுது கிறிஸ்டஸ் என்றவன், இதிலிருந்து அவனைப் பின்பற்றுவோருக்கு கிறிஸ்தவர்கள் என்ற பெயருண்டாயிற்று எந்த அஞ்சாநெஞ்சனும் பயந்து நடுங்கும் கொடிய கொலைத் தண்டனைக்கு (சிலுவை மரணத் துக்கு) உட்படுத்தப்பட்டான்.அவன் உயிரோ டெழுந்தான் என்ற வஞ்சகமும், மூடநம்பிக்கை யும் முதலில் ஒடுக்கப்பட்டிருந்தாலும், பின்னர் எங்கும் பரவி, உலகிலுள்ள எல்லாத் துன்மார்க் கங்களும் வெட்கக்கேடான காரியங்களும் இருப் பிடம் காணும் ரோமாபுரிக்கும் வந்து, ஸ்திரப்பட்டு பிரபலமாகி வருகிறது. என்று எழுதி வைத்தான்.

இந்த உலக எழுத்தாளரின் நாட்குறிப்பிலிருந்து, கிறிஸ்தவத்தின் ஆணி வேர் கிறிஸ்து என்றும், அவரது தொண்டர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்ற நாமம் தலைவர் பெயரால் உண்டாயிற்று என்றும், யூதேயாவின் கவர்னர் பொந்தியு பிலாத்து தான் கிறிஸ்துவுக்கு மரணத்தீர்ப்பு வழங்கினான் என்றும் எவ்வளவு திருமறைக்கு இசைவாய் பதிவாகியிருக்கிறது. டேஸிடஸ் குறிப்பிடும் மூடநம்பிக்கை வஞ்சகம் என்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையே குறிக்கிறது என்பதில் சந்தேகமுண்டோ?

**தல்லூஸ்** (சுமார் கி.பி. 52) என்பாரும் கிறிஸ்துவின் மரணத்தைத் தெரிவித்த ஒரு பெரிய ரோம வரலாற்று ஆசிரியர் ஆவர். இவர் கிழக்கு மத்திய தரைக்கடல் நாகரீகத்தைப் பற்றி ட்ரோஜன்யுத்தம் முதல் தமது காலம் வரைக்குமுள்ள சரித்திரத்தைத் தொகுத்து எழுதியவர். அவருடைய வரலாற்று நூல்களில் ஜீலியஸ் ஆஃப்ரிக்கானஸ் என்பவர் பேணிப்பாதுகாத்து அவற்றிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். அவற்றுள் நமது தேவைக்குரியது கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றியும். அவர் சிலுவையில் வியாகுலப்பட்டுத் தமது ஆவியைத் தமது பிதாவின் கரங்களில் ஒப்படைக்கின்ற வேளையில் உலகம் முழுவதையும் காரிருள் கவ்விக் கொண்டது. என்ற சம்பவத்தையும் தல்லூஸ் குறிப்பிடுவதை ஜீலியஸ் சுட்டிக் காட்டுகிறார்;

> "சரித்திரங்கள் எனப்படும் தமது மூன்றாவது நூலிலே அந்தக் காரிருள் சூரிய கிரஹணத்தால் ஏற்பட்டது என்று அர்த்தமில்லாமல் மழுப்புகிறார்"

கி.பி. 221இல் இந்த விளக்கம் நியாயமற்றது என்று ஜீலியஸ் விளக்கும்பொழுது. கிறிஸ்து சிலவையிலறையப்பட்ட தினம் பௌர்ணமி ஆகையால் அன்று சூரியகிரஹணம் ஏற்பட வாய்ப்பு கிடையாது. ஒருவேளை சந்திர கிரஹணம் வேண்டுமானால் தோன்றலாம். அமாவாசை நாளன்று தான் சூர்ய கிரஹணம் ஏற்படும் என்பது யாவருமறிந்த அறிவியல் உண்மை. யூதப்பண்டிகையின் பஸ்கா(ஈஸ்டர்) சமயத்தில்தான் முழுநிலவன்று. இயேசு சிலுவையிலறையப்பட்டார். எனவே பூமியைப் போர்வை போல் மூடின இருள் தேவன் அனுப்பிய





அற்புதமே அல்லாமல் அதற்கு அறிவியலால், பகுத்தறிவால் விளக்கம் கூறமுடியாது.

தல்லூஸ் என்பவரைத் தவிர வேறு பல சரித்திர ஆசிரியர்களும் நடுப்பகலில் நள்ளிரவு ஏற்பட்டதைக் குறிப்பிட்டிருக்கின்றனர். அரியோபேகஸ் பட்டணத்தைச் சேர்ந்த டயோனீஸியஸ் இந்தக் காரிருளைக் கண்டவுடன் "இயற்கை தேவதை இப்பொழுது தியானம் செய்கிறாள் அல்லது பெரியார் ஒருவரது மரணத்துக்காக அழுது கொண்டிருக்கிறாள்" என்று கூறினாராம். இரண்டாம் நூற்றாண்டில் பிலிப்போன் என்ற ஜோதிடர், கிறிஸ்து மரித்த நாளில் ஏற்பட்ட அந்தகாரத்தைப் பற்றி கூறுகையில், "இதற்கு முன்பு சரித்திரத்தில் ஒரு போதும் இப்படி ஏற்பட்டதில்லை" என்றாராம் அல்-ஹாபீஸ் இபின் கஃதிர் என்ற முஸ்லீம் சரித்திர நிபுணரும் அல்-பிடயா வால் ஹா அல் நிஹயா (நூல் 1 பக்கம் 182 இல்) இச்சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

**கிரேக்கனாகிய லூசியன்** என்ற நகைச்சுவை எழுத்தாளன் இரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்துவையும், கிறிஸ்தவர்களையும் பற்றி ஏளனமாக எழுதியுள்ளான். தழுவிய நாத்திகனானதால் கிறிஸ்தவ விசுவாசத்தின் யதார்த்தமான, ஆவிக்குரிய ஆழத்தை உணராதவனாயிருந்தான். தங்களுடைய நம்பிக்கைகளுக்காக துன்பப்படவும். ஜீவனைக் கொடுக்கவும் தயாராயிருந்த கிறிஸ்தவர்களை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்றைக்குரிய இவ்வுலக சுகபோகத்தை அநுபவிக்கத் தெரியாத அப்பாவிகள். அடுத்த உலகத்தைப் பற்றி கனவு கண்டு கொண்டிருக்கும் பித்தர்கள் என்று கிறிஸ்தவர்களைப் பரியாசம் செய்தான். அவன் எழுதியிருப்பதாவது.

"கிறிஸ்தவர்கள் இன்றுவரை ஒரு மனிதனை அதாவது. அவர்களுடைய வாழ்க்கை முறைகளையும் சட்டதிட்டங்களையும் வகுத்துக் கொடுத்த சிறப்புப் புருஷரும், அதின் நிமித்தமாக சிலுவையிலறையப்பட்டவருமான இயேசுவைத் தொழுது கொள்ளுகிறார்கள் என்பது உமக்குத் தெரியுமா? மேலும் அவர் விதித்த சட்டதிட்டங்களும், ஒழுங்குமுறைகளும் இவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்திருப்பதுடன், அந்த சட்டமளிப்பவரை உவகையுடன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டவுடன் அவர்களெல்லாரும் சகோதரர்களாகவும். ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் மாறி விடுகிறார்கள் என்றும், ஆதலால் அந்த முனிவரைத் தவிர வேறே கிரேக்க தேவர்களை பூஜிப்பதில்லை என்பதும் தெரியுமா?"

இந்த மேற்கோள்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் பேருண்மையானது. கிறிஸ்தவத்தைப் பகைப்போரும், பரியாசம் பண்ணுவோரும் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தையோ அல்லது கிறிஸ்தவர்கள் எதனை விசுவாசிக்கிறார்கள் என்பதையோ மறுக்கவில்லை. அந்தப் புறஜாதியாருக்கும், அதாவது வேதாகமத்திற்கு அந்நியர்களாயிருப்போருக்கும் கிறிஸ்துவும் அவரது சிலுவையும் சரித்திர உண்மையே அல்லாமல் கட்டுக்கதை அல்ல. மேலும் சிலுவையிலறையப்பட்டவர் உண்மையில் யார்தான் என்பதிலும் அவர்களுக்கு எள்ளளவேனும் சந்தேகமில்லை.





## பொந்தியு பிலாத்துவின் நடபடிகள்

**ஜஸ்டின் மார்டையர்** (சுமார் கி.பி. 150) தமது முதலாவது விசுவாச விளக்கத்தில், பொந்தியு பிலாத்துவின் நாட்குறிப்புகளிலிருந்தும் கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை அறுதியாக நிச்சயப்படுத்திக் கொள்ளலாம் என்று கூறுகிறார். மேலும் பிலாத்து இயேசு செய்த அற்புதங்கள், சுகமளித்தல் ஆகியவற்றையும் குறிப்பிட்டிருக்கிறான். பொந்தியு பிலாத்துவின் நாளாகம புத்தகத்திலிருந்து இந்த விவரங்களை அறிந்து கொள்ளலாம்" என்று ஜஸ்டின் கூறுகிறார். டெர்டுல்லியன் (கி.பி.200) என்பாரும் இதற்கு ஒப்புதல் தருகிறார்.

**சோடேனியஸ்** என்ற ஏட்ரியன் சக்கர வர்த்தியின் பிரதான செயலாளர் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைக் குறித்துத் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். (கி.பி. 117-138) அரசாங்கத்தின் ரிக்கார்டுகளை எல்லாம் பார்வையிடுவதற்கோ, சோதித்துப் பார்ப்பதற்கோ அவருடைய அந்தஸ்தும் அதிகாரமும் இடம் கொடுத்தமையால், கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டதின் முக்கியகாரணம் அவர்கள் கிறிஸ்துவின் சிலுவையையும். உயிர்த்தெழுதலையும் விசுவாசிப்பதுடன் மற்றவர்களுக்கும் பறைசாற்றுவதால்தான் என்று கண்டு பிடித்தார். மற்றும் குறிப்பிடத்தக்க அரசாங்க அலுவலர்கள் இளைய ப்னினி பித்தினியாவின் கவர்னர் (கி.பி.112) கிறிஸ்தவத்தின் ஜென்ம பகைஞனான செல்ஸியஸ் என்ற எப்பிக்கூரியன் ஆகியோரைக் குறிப்பிடலாம். செல்ஸியஸ் தனது "மெய் உபன்யாசம்" என்ற நூலில் "கிறிஸ்து மனுக்குலத்தின் நலனுக்காக சிலுவையின் வேதனையைச் சகித்தார்" என்று வேண்டா வெறுப்பாகக் கூறுகிறான்.

சிறையிலிருந்துகொண்டே மாரா பார் செராப்பியான் என்பவர் தமது மகனுக்கு எழுதின ஒரு கடிதத்தில்.

> "தங்களுடைய ஞானமுள்ள ராஜாவைக் கொலை செய்ததினாலே யூதர்கள் அடைந்த லாபம்தான் என்ன? ............. அந்த ராஜாவும் நல்லோருக்கு மட்டுமல்ல, எல்லோர் நலனுக்காகவும் தமது போதனையைச் சாதனையில் நிலை நாட்டுவதற்கும் சிலுவை ஏகினார்" என்று எழுதினார். அவனுடைய கடிதத்தைத் தொடர்ந்து பார்க்கையில்.அவன் இயேசு கிறிஸ்துவையும் சாக்ரடீஸ், பிளேட்டோ அரிஸ்டாட்டல் போன்ற தத்துவ சாஸ்திரிகளில் ஒருவராகக் கருதினான் என்று அறிகிறோம்.

இந்த நூலாசிரியர்கள் ஆராய்ந்துள்ளபடியும். எழுதி வைத்தவைகளின்படியும் முஸ்லீம்களின் ஷபீஹ் கொள்கையே குறிப்பிடப்படவில்லை. இந்த அஞ்ஞான அறிஞர்கள் அனைவரும் சிலுவையிலறையப்பட்டவர் நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவே அல்லாமல், வேறு மாய்மாலம் எதுவும் நடக்கவில்லை என்பதையும் உறுதியாய் நம்பினவர்கள்.

## யூதர்களின் பதிப்பேடுகள்

யூதர்களின் ஆவணங்கள் அனைத்தும் கிறிஸ்துவுக்கு விரோதமாகவே. எதிர்மறையாகவே எழுதப்பட்டிருந்தன. தங்களின் சமுதாய – அரசியல்– சமயக்கோட்பாடுகளுக்கெல்லாம் குந்தகம் விளைவிப்பவராக இயேசுவே யூதர்கள்





கருதினதினாலே அவரைக் காய்மகாரமாக நடத்தினதில் வியப்பு ஏதுமில்லை. அவர்கள் தான் மக்களைத் தூண்டியது மல்லாமல். பலவந்தம் செய்து ரோம தேசாதிபதி இயேசுவை சிலுவையிலறையும்படி ஆணை பிறப்பிக்கச் செய்தனர். ஏனென்றால் அவருடைய புரட்சிகரமான போதனைகள் அவர்களுடைய அரசியல் – சமய அந்தஸ்துக்களை ஆட்டம்காணச் செய்தன. இவ்வாறெல்லாம் இயேசுவை யூதர்கள் முழுப்பகையாகப் பகைத்தாலும், அவர்களுடைய எழுத்துக்கள் சுவிசேஷ நூல்களின் விபரங்களுக்கு முழுவதும் ஒத்திருக்கின்றன. சுவிசேஷங்களில் கிறிஸ்துவின் சிலுவை மரணம் கூறப்பட்டுள்ளது போலவே, யூதர்களும் வர்ணிப்பதிலிருந்து வேதாகமத்தின் மாசற்ற உண்மையை உணர்ந்து கொள்ளலாம். இங்ஙனம் யூத வரலாறும் மனித சரித்திரத்தின் மிகப்பெரிய மிகமுக்கியமான சம்பவத்திற்கு ஆதாரமாக அமைவதைக் காண்கிறோம். கண்டு அதிசயிக்கிறோம்.

**ஜோசிப்பஸ்** (கி.பி 37–97) கீர்த்திமிக்க யூதமத வரலாற்று ஆசிரியர்களில் ஒருவரான ஜோசிப்பஸின் "பழைமைகள்" (கி.பி. 90–95இல் எழுதப்பட்டது) என்ற நூலில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை, போதனை, சாதனை, அற்புதங்கள், கொடிய மரணம் ஆகியவற்றைத் தீர்க்கமாக ஆராய்ந்து வரையும் இந்த ஆசிரியர் சிலுவையைப் பற்றி எழுதினது தொண்மை எழுத்து ஆராய்ச்சியாளர்களிடையே காரசாரமான வாக்குவாதங்களை உண்டாக்கிற்று. ஏனென்றால் ஜோசிஃபஸ் கிறிஸ்துவைப் பற்றி கூறின சில வாக்கியங்கள் ஒரு யூதனால் எழுதப்பட்டிருக்க முடியாது.

கிறிஸ்தவ விஷமிகள் தான் இடைச்சொருகலாக அவற்றை உட்புகுத்தியிருக்க வேண்டும் என்று யூகிக்கவும், வாதிடவும் தொடங்கினர். ஆனால் நல்ல பிள்ளையாக 1972இல் அகப்பட்ட அரபியமொழி பெயர்ப்பின் கையெழுத்துப் பிரதி உண்மையை வெளிப்படுத்திற்று.

> "இந்தக் காலத்தில் இயேசு என்று அழைக்கப் படும் ஒரு ஞானி இருந்தார்.அவருடைய ஜீவியம் சுத்தமும். தூய்மையுமாக இருந்ததுடன் நன்மைகளாலும் நிறைந்திருந்தது. யூதர்களி லிருந்தும் மற்ற ஜாதிகள்-இனங்களிலிருந்தும் அநேகர் அவருடைய சீஷர்களானார்கள். பிலாத்துவோ அவரை சிலுவையிலறையப் பட்டு மரிப்பதற்கு ஒப்புக் கொடுத்தான் ஆனால் அவருடைய சீடர்களோ அவரைக் கைவிட்டு விடவில்லை; வேறொரு குருவைத் தேடி ஓடவுமில்லை. அதற்குப் பதிலாக, மூன்று நாட்களுக்குப் பிறகு கிறிஸ்து உயிரோடெ ழுந்தார் என்றும். தங்களுக்குக் காணப்பட்டார் என்றும் அறிவித்தார்கள். இப்பொழுதும் அவர் ஜீவிக்கிறார் என்று முழு நிச்சயமாகக் கூறு கின்றனர். எனவே அவர்தான் தீர்க்கதரிசி களால் முன்னுரைக்கப்பட்ட அற்புதநாதராகிய மேசியாவாக இருக்கக்கூடுமோ? என்று ஜோசிஃபஸின், அரபிய கையெழுத்துப் பிரதியிலுள்ள வாசகம் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.





**ஜோசிஃபஸின்** சாட்சி அஞ்ஞான ஆசிரியர்களின் நூல்களின் முந்தினது யூதர்களின் கண்ணோட்டத்திலிருந்து எழுதப்பட்டிருந்தபோதிலும். அது யதார்த்தமாகவும். பாரபட்சமற்றதாகவும். நடுநிலைக் கண்ணோட்டமுள்ள தாகவுமிருக்கிறது. இதுவும் மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான இயேசுவைப் பற்றின கிறிஸ்தவம் கலவாத யூதமத சாட்சியாகும்.

## தல்முத்

மிஷ்னா. கெமாரா என்று இரு பெருந்தொகுதிகளாக தல்முத் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் முறையாக கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் புத்தக வடிவம் பெறும்வரை தலைமுறை தலைமுறையாக வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டு வந்த ஐதீகங்களும் யூத பாரம்பரியங்களும் மிஷ்னா என்று அழைக்கப்படுகின்றன. மிஷ்னாவின் பகுதிகள் மீது கூறப்பட்ட வியாக்கியான விவரங்கள் தொகுக்கப்பட்டு கெமாரா என்று அழைக்கப்பட்டன. சில சர்ச்சைக்குரிய நியாயப்பிரமாண கேள்விகள். நுணுக்கங்கள் தல்முதின் ஒரு பிரிவாக அமைந்து ஹலகா என்று அழைக்கப்படுகின்றன. மற்றும் நீதிப்பிரமாணத்தை விளக்கும் புராணங்கள். வாழ்க்கைச் சம்பவங்கள், பழமொழிகள் ஆகியவை ஒன்றாகத் திரட்டப்பட்டு ஹக்காதா என்று அழைக்கப்படுகிறது.

**டிராக்டேட் சனகரீமில் கூறப்பட்டுள்ளதாவது;**

> "பஸ்காவிற்கு ஒரு நாளைக்கு முன்பே இயேசு சிலுவையிலறையப்பட்டார். தமது தந்திர மந்திர ஜாலங்களால் ஜனங்களை வஞ்சித்து

வசீகரித்துக் கொண்டிருந்தமையால், அவர் கொல்லப்படுவார் என்று 40 தினங்களாக எச்சரிப்புக் கொடுத்து வந்தோம். அவருக்காக வழக்காடவோ, வக்காலத்து வாங்கவோ விரும்பின அனைவருக்கும் அழைப்புக் கொடுத்தோம்; ஆனால் ஒருவரும் அவரை ஆதரிக்க முன் வராததால் பஸ்காவிற்கு முந்தின நாளில் அவர் சிலுவையிலறையப்பட்டார். அவரைத் தாங்குவதற்கு இப்பொழுதும் எவருக்காகிலும் துணிச்சல் உண்டா? அவர் கலகத்தை எழுப்பிக் கொண்டிருக்கவில்லையா? உபாகம புத்தகம் 13:8 இல் "நீ அவனுக்குச் சம்மதியாமலும், அவனுக்குச் செவி கொடாமலும். உன் கண் அவன்மேல் இரக்கங் கொள்ளாமலும் அவனைத் தப்ப விடாமலும், அவனை ஒளித்து வைக்காமலும் அவனைக் கொலை செய்து போட வேண்டும்" என்பதாக இப்பேர்ப்பட்டவர்களைப் பற்றி கூறவில்லையா?

இவ்வாறு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு மரித்தார் என்றும். அவர் கிறிஸ்து தான். வேறே ஆள் இல்லை என்றும் தல்முத் சந்தேகத்திற்கிடமின்றி சாட்சிப் படுத்துகிறது.

**டோலிடாத் ஜேஜ்** என்ற இன்னொரு கிறிஸ்தவ எதிர்ப்பு யூதக் கைப்பிரதியும் உள்ளது. இந்தக் கையேடுகள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி குறிப்பிடுவதோடு நிற்காமல், அவருடைய மரணத்துக்குப் பிறகு இயேசுவின் சரீரத்துக்குச்





சம்பவித்ததைப் பற்றி ஒரு கட்டுக்கதையும் புனைந்துள்ளது. கிறிஸ்துவின் சரீரத்தை யோசேப்பின் கல்லறையிலிருந்து களவாய் எடுக்க சீஷர்கள் சதித்திட்டம் தீட்டியிருந்தனர் என்றும் இதையறிந்த யூதாஸ் என்ற பெயருடைய தோட்டக்காரன் இயேசுவின் உடலை இரகசியமாய் எடுத்துக் கொண்டுபோய்,புதிதாகத் தோண்டப் பட்டு, காலியாக இருந்த வேறொரு கல்லறையில் வைத்து விட்டான் என்றும் இந்தப் புரளி வர்ணிக்கிறது. இயேசுவின் சீஷர்கள் வந்து பார்த்துவிட்டு. கல்லறை காலியாக இருந்தபடியால் இயேசு உயிரோடெழுந்து விட்டார் என்ற பறைசாற்ற ஆரம்பித்து விட்டனர். இதனைக் கேள்விப்பட்ட யூதத்தலைவர்களும் யோசேப்பின் கல்லறைக்கு வந்து அது வெறுமனே இருப்பதைக் கண்டு அதிசயித்தார்கள். ஆனால் தோட்டக்காரன் அவர்களை அழைத்துக் கொண்டு போய் தான் இயேசுவின் உடலைத் திருடி. புதிதாக ஒளித்து வைத்திருந்த கல்லறையைக் காண்பித்தான் என்று இந்தக்கதை கயிறு திரிக்கிறது. இது உண்மையென்றால், யூதத்தலைவர்கள் உடனே இயேசுவின் பிரேதத்தைக் கைப்பற்றி, இயேசுவின் சீடர்களின் வாயை அடைப்பதுடன் அவர்களைச் சிறையிலடைத்தோ அல்லது சிலுவையிலறைந்தோ பழிவாங்கியிருக்க மாட்டார்களா? இதெல்லாம் என்ன முரணான மூடநம்பிக்கை?

இந்த ஐதீகம் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் தான் பரப்பப்பட்ட போதிலும், இயேசுவின் உயிர்த்மெழுதலைக் குறித்து ஏற்கனவே யூதர்கள் மத்தியில் நிலவிய வதந்திக்கு இசைந்திருக்கிறது (மத்தேயு 28:11-15) இந்தக் கையேடு இவ்வாறு கிறிஸ்தவத்தைக் கடுமையாகத் தாக்கி, விமர்சித்த போதிலும் இதனால் இயேசுவின் சிலுவை மரணம். அடக்கம்.

உயிர்த்தெழுதலைப் பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

பிரபல ரபி ஹில்லால் என்பாரின் மாணவனான மோகனான்பின் ஜக்காய் எழுதினதாவது:

> "தாம் தேவனுடைய குமாரன் ...... தேவன்என்றும் இயேசு கிறிஸ்து உரிமை பாராட்டினதால் அந்தத்தெய்வ நிந்தனைக்காக யூத ரபிமார் களும், ராஜாவும் அவரை மரண ஆக்கினைக் குள்ளாக்கினார்கள்."

> "கிறிஸ்து மரிப்பதற்காகச் செல்லும் வழியில் யூதர்கள் அவர் முன்பாக. ஓ கர்த்தாவே உம்முடைய சத்துருக்களை அழித்துப்போடும்! என்று பகடி செய்து கொண்டே போனார்கள்."

என்று மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### நாஸ்டிக்குகளின் ஆதாரங்கள்

'நோசிஸ்' **(Gnosis)** என்ற கிரேக்க பதத்தின் அர்த்தம் "அறிவு" என்பதாகும். நாஸ்டிசிசம் என்பது கிரேக்க நாட்டில் சமய அரசியல் கருத்துக்களைப் பகுத்தாய்வு செய்யும் பல தரப்பட்ட அறிஞர்களையும் குறிக்கும் ஒரு பொதுவான பெயர். அறிவு – புத்தி நுட்பத்தைக் கொண்டு எதனையும் பரிசீலிக்கும் தன்மை கொண்ட சமய இயக்கமாக இது இருந்தது.

நாஸ்டிக்ஸ் எபியோனைட்ஸ், மற்றும் டோஸிஸ்ட்டஸ் முதலான சிலர் "ஷபீஹ்" அநுமானத்தைப் பிரசித்திப்படுத்தி வந்தனர் என்று ஏற்கனவே சிந்தித்தோம். இவர்களுடைய





போதனைகளே இஸ்லாமியரை வெகுவாகப் பாதித்து, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப் பற்றி தப்பெண்ணம் கொள்ள வைத்தன. கிறிஸ்துவின் இரண்டு தன்மைகளைப் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட சிக்கல் சிரமத்தின் காரணமாகத் தோன்றிய நாஸ்டிக்குகளின் யூகம்தான் ஷபீஹ் கொள்கைக்கு அடிகோலியது. இயேசு கிறிஸ்து தெய்வத்தின் அவதாரம் என்பதை நாஸ்டிக்குகள் முழுமையாக நம்பினார்கள். ஒரே சமயத்தில் அவர் தேவனாகவும் மனிதனாகவும் இருந்தார். என்பதை ஏற்றுக் கொண்டார்கள். ஆதலால் அவரைச் சிலுவைப்பாடுகளுக்கு உட்படுத்த முடியாது இயேசுவின் சரீரம் நம்முடைய சரீரம் போன்றதல்ல. ஆனால் அவர் தேவ மனிதன். அவருடைய சரீரமும் தெய்வீகத் தன்மை கொண்டது. இங்ஙனமிருப்பதால். சிலுவையிலறையப்பட்டவர் இயேசு கிறிஸ்துவாக இருக்க முடியாது. வேறு ஒருவராகத்தான் இருக்க வேண்டும் என்று சாதித்தனர்.

இந்த வியாக்கியானத்தின் அடிப்படையில்தான். இஸ்லாம் சிலுவையை மறுதலிக்காமல். சிலுவையிலறையப்பட்டவர் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறார்கள். ஆகிலும் நாஸ்டிக்குகளின் கருத்திலிருந்து ஒரே ஒரு வித்தியாசம்! ஒரே சமயத்தில் இயேசுவைத் தேவன் என்றும் மனிதன் என்றும் கருதுவதில்லை. ஏனென்றால், மீட்பு இரட்சிப்பு என்பதற்குரிய தேவையே இஸ்லாமிய சாஸ்திரத்தில் இல்லை மனிதன் பிறக்கும் பொழுது களங்கமற்றவனாக, நன்மை–தீமை அறியாதவனாகப் பிறக்கிறான். எனவே பாவ நிவாரணம். சிலுவை ஆகியவற்றிற்குத் தேவையில்லை என்று முஸ்லீம்கள் நம்புகிறார்கள். இஸ்லாமின் கூற்றுப்படி. இயேசுவை யூதர்கள் கைது செய்வதற்கு முன்பாகவே கடவுள் அவரைப்

பரலோகத்திற்கு எடுத்துக் கொண்டதால், உயர்த்தி விட்டதால். அவருடைய சாயலை வேறொரு மனிதனுக்குச் சாட்டவே, அந்த மனிதன் தான் (ஷபீஹ்) சிலுவையிலறையப்பட்டான்.

ஆகிலும் நாஸ்டிக்குகள் அனைவரும் '**ஷபீஹ்**' கொள்கையை அங்கீகரித்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஆரம்பத்தில் அநேக நாஸ்டிக்குகள் நற்செய்தி நூல்களிலுள்ள விளக்கத்தையே உண்மையென ஏற்றுக் கொண்டார்கள். வேதாகமத்திலுள்ள நான்கு நற்செய்தி நூல்களைத் தவிர, வேறு சில நற்செய்தி நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு-அதாவது சத்திய சுவிசேஷம். (கி.பி.135-160) யோவானின் தள்ளுபடியாகமம் (கி.பி.120-130) தோமாவின் சுவிசேஷம் (கி.பி. 140-200) கிறிஸ்துவின் சிலுவை மரணம் உயிர்த்தெழுதல் எனும் சத்தியங்களைப் பூரணமாய் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால் கிறிஸ்தவர்கள் பிந்திக் கூறப்பட்ட நூல்கள் பரிசுத்த ஆவியானவரால் ஏவி எழுதப்பட்டவை அல்ல என்று திருமறையில் இணைக்கவில்லை. அவற்றை கலப்பட கிறிஸ்தவ இலக்கியமாக அல்லது தள்ளப்பட்ட நூல்கள் என்று கருதி, அங்கீகாரம் அளிக்கவில்லை என்ற போதிலும் இந்த நூல்களும் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய வார்த்தை. தேவன் தேவகுமாரன் மனுஷகுமாரன் என்ற அடைமொழிகளை கிறிஸ்துவுக்குக் கொடுக்கத் தயங்கவில்லை. எடுத்துக்காட்டாக சத்திய சுவிசேஷத்தில் இவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளது:





"இயேசு பொறுமையோடே உபத்திரங்களைச் சகித்தார்....... ஏனெனில் அவருடைய மரணம் அநேகருக்கு ஜீவன் என்று அறிந்திருந்தார்..... அவர் ஒரு மரத்தில் அறையப்பட்டார், பிதாவின் உத்தரவை சிலுவையில் பிரசித்தம் செய்தார். தமது ஜீவனால் மரணத்தைச் சுவீகரித்தார். தமது மரணத்தால் ஜீவனை வெளிப்படுத்தினார். அழிவுக்குரிய கந்தைகளைத் துறந்து அவரிடமிருந்து எவரும் பறிக்க முடியாத அழியாமையை அணிந்து கொண்டார்.

யாக்கோபின் 'இரகசிய புத்தகம்' என்ற நூலில் இவ்விதம் வாசிக்கிறோம்.

"கர்த்தர் மறு உத்தரவு அருளிச் சொன்னதாவது நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். எனது சிலுவையை விசுவாசிக்காத ஒருவனும் இரட்சிக்கப்பட மாட்டான். ஏனென்றால் எனது சிலுவையைச் சார்ந்திருப்போருக்கே தேவனுடைய ராஜ்யம் சொந்தம்.

(ஆதாரம்; மேயர் மர்வின் மொழி பெயர்த்துள்ள "இயேசுவின் அந்தரங்கப் போதனைகள்" ப.6 ரேண்டம் ஹவுஸ் 1984)

கிறிஸ்துவின் விரோதிகளாக விளங்கிய அஞ்ஞானிகளும் யூதர்களும் அல்லாமல், பிரிந்துபோன விபரீதமான கொள்கைகளையுடைய கிறிஸ்தவப் பிரிவுகளும் கிறிஸ்துவின் சிலுவை, அவரது மரணமும் உயிர்த்தெழுதலும்

கிறிஸ்தவத்தின் மையப்போதனை என்பதை உணர்ந்திருந்தனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியென புலப்படுகிறது.

### கிறிஸ்தவ ஆதாரங்கள்

ஆதிச்சபையின் முற்பிதாக்கள் கிறிஸ்துவின் மீது கொண்டிருந்த ஆழமான அசைக்க முடியாத விசுவாசமாவது. திருமறையும் பிற கிறிஸ்தவ இலக்கியங்களும் சரித்திரங்களும் கூறுவதெல்லாம் நூற்றுக்கு நூறு உண்மை என்பதாகும். கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள், சீஷர்களிடமிருந்து பெற்ற போதனைகளைச் சற்றேனும் கேள்வி கேட்காமல் சத்தியம் என்றே நம்பி வந்தார்கள். அது வாய்ப்பிறப்பாக இருந்தாலும் பாரம்பரியமாக இருந்தாலும். எழுதி வைக்கப்பட்ட நூல்கள் வடிவத்திலிருந்தாலும் எல்லாவற்றையும் நிலைமாறாத உண்மையென்று விசுவாசித்தனர். அவர்களில் சிலர் முக்கியமாக, ரோமாபுரியைச் சேர்ந்த கிளமெண்ட் (கி.பி 30-100) இக்னேஷியஸ் (35-107) , பாப்பியாஸ் (60-130) போலிகார்ப் (65-115) முதலானவர்கள் கிறிஸ்துவின் சீஷர்களின் சீஷர்கள். எனவே இவர்களின் நூல்கள் சுவிசேஷ சம்பவங்களுக்கும் உபதேசங்களுக்கும்,முக்கியமாக கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் முடிவான ஆதாரமாக அமைந்துள்ளன. இவர்களனைவரின் நூல்களின் கருப்பொருள் புதிய ஏற்பாடு முழுவதிலும் மையக் கருத்தாக இருக்கின்ற இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமும், உயிர்த் தெழுதலுமே ஆகும்.

மேலும், முழு பைபிளும் போதிப்பது போலவே,





திருச்சபையின் ஆதி பிதாக்களின் நூல்களும், கையெழுத்துப் பிரதிகளும் பழைய ஏற்பாட்டிலுள்ள தீர்க்கதரிசனங்களை எல்லாம் சுட்டிக் காண்பித்து, அவற்றின் நிறைவேறுதலே புதிய ஏற்பாடு என்று மெய்ப்பிக்கின்றனர். இவர்களுடைய நூல்களையெல்லாம் கூட்டிக்கழித்துப் பார்க்கும்பொழுது. பதினேழு வசனங்களைத் தவிர புதிய ஏற்பாடு முழுவதுமே காணப்படுகிறது. அத்துடன் இவ்வாசகங்கள் புதிய ஏற்பாட்டு வசனங்களிலிருந்து நிலைபிறளாமல் மாறுபடாமல் இருக்கின்றன. விசேஷமாக,கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை, பிறப்பு, மரணம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை நிச்சயப்படுத்துகின்றன. இவ்வாறு உலகத்தில் வேறெந்த நூலின் (குர்-ஆனையும் சேர்த்து) உண்மை தத்துவத்தையும் உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் கிடையவே கிடையாது. இவை எல்லாம் போதாதென்று சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சவக்கடல் சுருள்கள் பைபிள் பூரண உண்மை என்ற மெய்ப்பிக்கின்றன.

சபையின் ஆதிப்பிதாக்களின் எழுத்துக்களில் ரோமாபுரி பிஷப் கிளமன்ட் எழுதியுள்ள இரண்டு நிருபங்களும் இக்னேஷியஸின் இரண்டு சிறு கடிதங்களும் பிந்தினவர் இரத்தச் சாட்சியாக மரிக்குமுன் அந்தியோகியாவிலிருந்து ரோமுக்குச் சென்ற பயணத்தில் பல சபைகளுக்கும் பரிசுத்த வான்களுக்கும் வாசிக்கக் கொடுத்தார். "டிடாக்கி" அல்லது "அப்போஸ்தலருடைய உபதேசங்கள்" என்ற கைநூல் முழு உருப்பெற்று சபையின் கொள்கைகள். சபை ஒழுங்குகள், மற்றும் நடைமுறைக் காரியங்கள் ஆகியவற்றிற்கு இலக்கணம் வகுத்தாற்போல இருந்தன "யூதர்களின்

நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாகவே கிறிஸ்து இருக்கிறார்" என்ற அடிப்படை சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களையும் உறுதிப்படுத்தாதவர்களையும் கடிந்து கொண்டு கண்டனம் பண்ணி பர்னபாஸ் ஒரு கடிதம் எழுதியிருந்ததாகக் கூறப்படுகிறது. ஹெர்மாசின் மேய்ப்பன் என்ற நூல் மற்றும் ஏற்கனவே குறிப்பிட்டபடி ஜஸ்டின் மார்பையரின் விளக்க உரை, யூசிபையஸ் எடுத்தியம்பும் குவாட்ரேட்டஸ் என்பாரின் நியாயவாதம் ஆகியவை வேதாகமம் உண்மைக்கு சான்றுகளின் மேல் சான்றாகிறது. ஏட்ரியன் பேரரசனுக்கு குவாட்ரேட்டஸ் பின்வருமாறு எழுதினார்.

> "நமது இரட்சாபெருமானின் அற்புதச்செயல்கள் அனைத்தும் உமக்கு முன்பாகப் பிரத்தியட்ச மாயிருக்கின்றன. அவரால் அற்புதமாகச் சொஸ்தமாக்கப்பட்டவர்களும். மரித்தோரி லிருந்து எழுப்பப்பட்டவர்களும். அந்த அற்புதங் களைக் கண் கூடாகப் பார்த்தவர்களும் கடைசி மட்டும் இருந்தனர். அவர்களில் அநேகர் நமது கர்த்தருடைய உலக வாழ்க்கை முடிந்த பின்னரும் இருந்தனர் என்பதை நீர் அறிவீர். அவர்களில் ஒருசிலர் நமது காலம் மட்டும் (ஆதாரம் : யூசிபையசின் சரித்திரத்தின் தீர்ப்பு ப 66-67)

சபையின் முதல் நூற்றாண்டு ஆசிரியர்கள் சீஷர்களுடன் அவர்களின் மாணவராக இருந்து பயின்றவர்கள். எவ்வித விவாதத்துக்கும் சந்தேகத்துக்கும் இடமின்றி சீஷர்களிடமிருந்து கலப்படமில்லாத. பூர்ணமான





உபதேசங்களைக் கற்று வந்தவர்கள். மேலும் சீஷர்கள் மூலமாக நடைபெற்று அற்புதங்களுக்குக் கண்கண்டசாட்சிகளாவர். இங்ஙனம் தங்கள் உயிர்களையும் பணயம் வைத்து. இரத்தச்சாட்சிகளாவும் மரிக்க முற்பட்டவர்கள் ஒரு பொய்க்கதைக்காக இப்படிச் செய்யமாட்டார்கள் என்பது திண்ணம்.

### கூடுதலான சான்றுகள்

நாம் ஏற்கனவே ஆராய்தறிந்த ஆதாரங்களைத் தவிர சபைச் சரித்திரத்தையும். புதைபொருள் ஆய்வையும் அதிகப்படியான சான்றுகளாக சோதித்தறியலாம். கிறிஸ்துவின் சிலுவை மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகிய சத்தியங்களை மேலும் அதிகமாக உறுதிப்படுத்தும் சாதனங்களாயிருக்கின்றன. ரோமாபுரியிலுள்ள நிலவறைகள் **(Cataconbs)** சுரங்கங்கள் முதலிய இடங்களில் ஒளித்துக் கொண்டிருந்த ஆதிக்கிறிஸ்தவர்கள் பொறித்து வைத்துள்ள சித்திரங்களும், சிலுவைச் சின்னங்களும் இன்றைக்கும் காணக்கிடைக்கின்றன. இந்த சுரங்க அறைகளில் தான் அரசாங்கத்துக்கும் உளவாளிகள் மற்றும் காவலர்களின் கண்காணிப்பும் பயந்திருந்த ஏழைக் கிறிஸ்தவர்கள் கூடி தேவனை ஆராதித்த இடங்களாகும்.

அஞ்ஞானிகளின் சமாதிகளிலிருந்து தங்கள் இனத்தவரின் கல்லறைகள் வேறுபட்டவை என்பதைக் காண்பிப்பதற்காக, சிலுவைச் சின்னங்களை நட்டு வைத்தனர். கிறிஸ்துவின் சிலுவை உண்மையாக இல்லாவிட்டாலோ அல்லது அதனை நம்பாதிருந்தார்கள் என்றாலோ சிலுவைச் சின்னத்தின் மீது அவர்களுக்கு ஏன் இவ்வளவு மோகம்?

யூதர்களுக்கும் ரோமர்களுக்கும் (அதாவது உலகத்துக்கு) சிலுவை என்பது மிகுந்த அவமானச் சின்னமாக இருந்து வந்த போதிலும் பரிசுத்தரும், நீதிபரருமாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கி மரித்துவிட்டபடியால் கிறிஸ்தவர்களுக்கு அது **ஒரு புனிதச் சின்னம். பெருமையின் சின்னம், மகிமையின் சின்னம், வெற்றிச் சின்னம், நம்பிக்கையின் சின்னம்.** சிலுவை நிச்சயமாக அல்லது உண்மையாக இல்லாதிருக்குமானால், கிறிஸ்தவர்கள் தங்கள் ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவுக்காக இவ்வளவு பாடுகளையும். அவமானங்களையும் உபத்திரவங்களையும், சித்தரவதைகளையும் வேதனையான நிந்தையான மரணத்தையும் சந்தோஷமாக அநுபவித்திருப்பார்களா? அநுபவிக்க முன் வந்திருக்கமாட்டார்களே!

இவ்வாறு இரத்தச் சாட்சிகளாக மரித்தவர்களில் சிலர் இயேசு கிறிஸ்து சிலுவையிலறையப்பட்டு. ஜீவனைக் கொடுத்ததை நேரடியாகப் பார்த்திருந்தவர்கள். நேர்முகச் சாட்சிகள் மற்றவர்கள் சீஷர்களின் வாய்மொழியாகவும். பின்னர் பரிசுத்த ஆவியானவராகிய தேவனால் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டு நூல்கள் மூலமாகவும் இந்த சத்தியங்களை விசுவாசித்தவர்கள்.

திருமுழுக்கு அல்லது ஞானஸ்நானம் மற்றும் திருவிருந்து ஆகிய இருகிறிஸ்தவ நியமனங்களும் கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதலையே சுட்டிக் காண்பிக்கின்றன தாம் யூதாஸால் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இரவில் இராப் போஜனபந்தி அல்லது திருவிருந்தை





ஏற்படுத்தின ஆண்டவர், தமது மரணத்தைத் தெரிவிக்கும் பொருட்டு, என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று அவர்தாமே துவக்கிவைத்த இந்த ஞாபக ஆராதனை இன்று வரையும் கிறிஸ்தவர்களிடையே காணப்படுகிறது (மத்தேயு 28:19) திருவிருந்தின் தாற்பரியம் அல்லது பொருளடக்கம், கிறிஸ்து கூறினபடியே அவருடைய சிலுவை மரணத்தையே சுட்டிக் காண்பிக்கிறது. இதை ஆசரிக்கும் போதெல்லாம் கிறிஸ்தவர்கள் தங்கள் ஆண்டவரின் மரணத்தைத் தெரிவிக்கிறார்கள் (மத்தேயு 26:26-29; மாற்கு 14:22-25; லூக்கா 22:14-20: 1 கொரிந்தியர் 11:23-27)

ஞானஸ்நானம் என்ற கிறிஸ்துவின் ஏற்பாடும் இதே உண்மையைத்தான் பிரகடனம் செய்கிறது. ஒரு மெய்க்கிறிஸ்தவன் கிறிஸ்துவோடு கூடச் சிலுவையிலறையப்பட்டு மரித்துவிட்டான்; பழைய மனுஷன் அல்லது பழைய வாழ்க்கைக்குச் செத்துவிட்டான்; இப்பொழுது கிறிஸ்துவுடன் உயிர்த்தெழுந்து கிறிஸ்துவே அவனில் ஜீவிக்கிறார்.

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ் நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால் அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம் (ரோமர் 6:3-6)

இவ்வாறு இந்த இரண்டு நியமனங்களும் அல்லது கிறிஸ்துவின் அடிப்படைக் கட்டளைகளும் அல்லது ஏற்பாடுகளும் இயேசு கிறிஸ்துவின் விருப்பப்படியே நிறைவேறி வருகின்றன. ஆனால் இவற்றின் மெய்ப்பொருள் கிறிஸ்துவையும் அவரது சிலுவை மரணத்தையும் மாத்திரமல்ல உயிர்த்தெழுதலையும். அவரது இரண்டாம் வருகையையும் அப்பொழுது நாமும் மகிமையடைவோம் என்கிற நம்பிக்கையும் வெளிப்படுத்துகின்றன.





மூன்றாவது அத்தியாயம்

# இஸ்லாமில் கிறிஸ்துவின் சிலுவை

இதுகாறும் ஷபீஹ் மற்றும் இஸ்லாமில் பாவநிவாரணம் அல்லது பிராயச் சித்தம் என்ற கருத்துக்களைச் சிந்தித்து வந்தோம். இந்த ஆய்வுக்கு நீதி செய்யவும். நியாயமான முடிவுக்குக் கொண்டு வரவும். குர்–ஆனிலுள்ள ஒரு சில வாக்கியங்களை காலாகாலமாக முஸ்லீம்கள் தப்பர்த்தப்படுத்தி வந்ததினால், தவிர்க்க முடியாத மறைக்கமுடியாத சிலுவை மரணம் உயிர்த்தெழுதல் ஆகியவற்றை மழுப்பிவிடுகின்றனர் என்பதையும் இங்கு காண இருக்கிறோம்.

சில நபிகள் அல்லது இறைவாக்காளர்கள் அச்சுறுத்தப்பட்டனர், துன்புறுத்தப்பட்டனர் என்பதை குர்–ஆன் மறுக்கவில்லை. இதற்கு ஆதாரமாக அநேக சூராக்களைக் கூறலாம் எனினும் ஒரு சிலவற்றை பார்ப்போம்.

وَإِذْ أَخَذْنَا مِيثَاقَكُمْ لَا تَسْفِكُونَ دِمَاءَكُمْ وَلَا تُخْرِجُونَ
أَنفُسَكُم مِّن دِيَارِكُمْ ثُمَّ أَقْرَرْتُمْ وَأَنتُمْ تَشْهَدُونَ ۝

“இன்னும் (நினைவு கூறுங்கள்) உங்களிடையே இரத்தங்களைச் சிந்தாதீர்கள். உங்களில் ஒருவர் மற்றவரை தம் வீடுகளை விட்டும் வெளியேற்றாதீர்கள் என்னும் உறுதிமொழியை வாங்கினோம். பின்னர் (அதை) ஒப்புக் கொண்டீர்கள்; (அதற்கு) நீங்களே சாட்சியாகவும் இருந்தீர்கள்.





ثُمَّ أَنتُمْ هَٰؤُلَاءِ تَقْتُلُونَ أَنفُسَكُمْ وَتُخْرِجُونَ فَرِيقًا مِّنكُم مِّن دِيَارِهِمْ تَظَاهَرُونَ عَلَيْهِم
بِالْإِثْمِ وَالْعُدْوَانِ وَإِن يَأْتُوكُمْ أُسَارَىٰ تُفَادُوهُمْ وَهُوَ مُحَرَّمٌ عَلَيْكُمْ إِخْرَاجُهُمْ
أَفَتُؤْمِنُونَ بِبَعْضِ الْكِتَابِ وَتَكْفُرُونَ بِبَعْضٍ فَمَا جَزَاءُ مَن يَفْعَلُ ذَٰلِكَ مِنكُمْ
إِلَّا خِزْيٌ فِي الْحَيَاةِ الدُّنْيَا وَيَوْمَ الْقِيَامَةِ يُرَدُّونَ إِلَىٰ أَشَدِّ الْعَذَابِ
وَمَا اللَّهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُونَ ۝

“இவ்வாறு உறுதிப்படுத்திய) நீங்களே உங்களிடையே கொலை செய்கின்றீர்கள் உங்களிலேயே ஒரு சாராரை அவர்களுடைய வீடுகளிலிருந்து வெளியேற்றுகிறீர்கள் அவர்கள் மீது அக்கிரமம் புரியவும். பகைமை கொள்ளவும் (அவர்களின் விரோதிகளுக்கு) உதவி செய்கிறீர்கள்.... (அல்பகரா 2:84,85)

...... அநியாயமாக நபிமார்களை அவர்கள் கொலை செய்ததையும் நாம் பதிவு செய்து கொள்வோம். சுட்டுப் பொசுக்கும் நரக நெருப்பின் வேதனையைச் சுவையுங்கள் என்று (அவர்களிடம் மறுமையில்) நாம் கூறுவோம் (அல் இம்ரான் 3:181)

لَّقَدْ سَمِعَ اللَّهُ قَوْلَ الَّذِينَ قَالُوا إِنَّ اللَّهَ فَقِيرٌ وَنَحْنُ أَغْنِيَاءُ سَنَكْتُبُ
مَا قَالُوا وَقَتْلَهُمُ الْأَنبِيَاءَ بِغَيْرِ حَقٍّ وَنَقُولُ ذُوقُوا عَذَابَ الْحَرِيقِ ۝

“மேலும் அவர்கள் எந்த ரஸுலாக இருந்தாலும், அவர் கொடுக்கும் குர்பானியை (பலியை) நெருப்பு சாப்பிடுவதை நமக்குக் காண்பிக்கும் வரை அவர் மீது நாங்கள் விசுவாசம்

கொள்ள வேண்டாம் என்று அல்லாஹ் எங்களிடம் உறுதிமொழி வாங்கியுள்ளான் என்று கூறுகிறார்கள். நபியே! எனக்கு முன்னர் உங்களிடம் வந்த தூதர்களில் பலர், தெளிவான ஆதாரங்களையும். இன்னும் நீங்கள் கேட்டுக்கொண்டபடி பலியை நெருப்பு உண்பதையும் திடமாகக் காண்பித்தார்கள். அப்படியிருந்தும் ஏன் அவர்களை நீங்கள் கொன்றீர்கள். நீங்கள் உண்மையாளர்களாக இருந்தால் இதற்கு பதில் சொல்லுங்கள் என்று நீர் கூறும். (அல் இம்ரான் 3:183

فَبِمَا نَقْضِهِم مِّيثَاقَهُمْ وَكُفْرِهِم بِآيَاتِ اللَّهِ وَقَتْلِهِمُ الْأَنبِيَاءَ بِغَيْرِ حَقٍّ وَقَوْلِهِمْ قُلُوبُنَا غُلْفٌ
بَلْ طَبَعَ اللَّهُ عَلَيْهَا بِكُفْرِهِمْ فَلَا يُؤْمِنُونَ إِلَّا قَلِيلًا

அவர்களுடைய வாக்குறுதியை அவர்கள் மீறியதாலும் அல்லாஹ்வின் வசனங்களை அவர்கள் நிராகரித்துவிட்டதாலும். அநியாய மாக அவர்கள் நபிமார்களை கொலை செய்த தாலும். எங்கள் இதயங்கள் திரையிடப் பட்டுள்ளன. (எனவே எந்த உபதேசமும்அங்கே செல்லாது) என்று அவர்கள் கூறியதாலும். (அல்லாஹ் அவர்களைச் சபித்துவிட்டான்)

(அன்னிஸா 4:155)

இவ்வாறு கடவுளுடைய தூதுவர்கள் வன்கொலை செய்யப்பட்டனர் என்று இந்த குர்ஆனின் வாக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்விதம் சம்பவிப்பதற்கு அவரே





அனுமதி வழங்கியுள்ளார். இவ்வாறிருக்க, தம்முடைய பிதாவின் சித்தத்தின் படியும். தமது மனப்பூர்வமான விருப்பத்தின்படியும், தம்முடைய ஜீவனை மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக அர்ப்பணிக்க இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தார் என்று பரிசுத்த நற்செய்தி நூல்கள் கூறுவதை முஸ்லிம்கள் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது? இன்னும் பல குர்ஆனின் வசனங்கள் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்கு சாட்சி கொடுக்கும் பொழுது முஸ்லிம்கள் ஏன் அதை நிராகரிக்க வேண்டும்?

وَمَكَرُوا وَمَكَرَ اللَّهُ ۖ وَاللَّهُ خَيْرُ الْمَاكِرِينَ

إِذْ قَالَ اللَّهُ يَا عِيسَىٰ إِنِّي مُتَوَفِّيكَ وَرَافِعُكَ إِلَيَّ وَمُطَهِّرُكَ مِنَ الَّذِينَ كَفَرُوا
وَجَاعِلُ الَّذِينَ اتَّبَعُوكَ فَوْقَ الَّذِينَ كَفَرُوا إِلَىٰ يَوْمِ الْقِيَامَةِ ۖ ثُمَّ إِلَيَّ مَرْجِعُكُمْ
فَأَحْكُمُ بَيْنَكُمْ فِيمَا كُنتُمْ فِيهِ تَخْتَلِفُونَ

"ஈஸாவை நிராகரித்தோர் அவரைக் கொல்லத் திட்டமிட்டு சதி செய்தார்; அல்லாஹ்வும் சதி செய்தான்..... ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மைக் கைப்பற்றுவேன்; இன்னும் என்னளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன்..... (அல் இம்ரான்3:54,55)

مَا قُلْتُ لَهُمْ إِلَّا مَا أَمَرْتَنِي بِهِ أَنِ اعْبُدُوا اللَّهَ رَبِّي وَرَبَّكُمْ ۚ وَكُنتُ عَلَيْهِمْ شَهِيدًا مَّا دُمْتُ
فَلَمَّا تَوَفَّيْتَنِي كُنتَ أَنتَ الرَّقِيبَ عَلَيْهِمْ ۚ وَأَنتَ عَلَىٰ كُلِّ شَيْءٍ شَهِيدٌ

"........ நான் அவர்களுடன் இருந்த காலமெல்லாம் அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தேன்.

அப்பால் நீ என்னைக் கைப்பற்றிய பின்னர் நீயே அவர்கள் மீது கண்காணிப்பவனாக இருந்தாய்..... (அல்-மாயிதா 5:117)

مَّا الْمَسِيحُ ابْنُ مَرْيَمَ إِلَّا رَسُولٌ قَدْ خَلَتْ مِن قَبْلِهِ الرُّسُلُ وَأُمُّهُ صِدِّيقَةٌ كَانَا يَأْكُلَانِ
الطَّعَامَ انظُرْ كَيْفَ نُبَيِّنُ لَهُمُ الْآيَاتِ ثُمَّ انظُرْ أَنَّىٰ يُؤْفَكُونَ

மர்யமு டைய குமாரர் மஸீஹ் இறை தூதரேயன்றி வேறில்லை. இவருக்கு முன்னவரும் தூதர்கள் பலர் வந்து சென்று விட்டனர் (மரித்து விட்டனர்)..... (அல்மாயிதா 5:75)

وَالسَّلَامُ عَلَيَّ يَوْمَ وُلِدتُّ وَيَوْمَ أَمُوتُ وَيَوْمَ أُبْعَثُ حَيًّا

இன்னுமொரு குர்ஆனின் வாக்கியத்தில் இயேசு தம்மைப் பற்றி கூறும்பொழுது; இன்னும் நான் பிறந்த நாளிலும். நான் இறக்கும் நாளிலும். நான் உயிர்ப்பெற்று எழும் நாளிலும் என் மீது சாந்தி நிலைத்திருக்கும்! (மர்யம் 19:33) (யோவான் ஸ்நானகனாகிய) யஹ்யாவைப் பற்றி இயேசு குறிப்பிடும் பொழுதும் அவர் பிறந்த நாளிலும். அவர் இறக்கும் நாளிலும், அவர் உயிர்பெற்றழும் நாளிலும் அவர் மீது ஸலாம் ( சாந்தி ) நிலைத்திருக்கும்.

இந்த வாக்கியங்களை வியாக்கியாணம் செய்யும் போது தங்களுடைய தப்பெண்ணத்தின்படியே. முன்தீர்மானத்தின் படியே முஸ்லிம் அறிஞர்கள் அர்த்தப்படுத்தினார்கள். அதன்படி இயேசு சிலுவையிலறையப்படவுமில்லை. அவர் மரிக்கவுமில்லை. முத்தவாஃபிகா என்ற அரபிப்பதத்துக்கு. உமது காலத்தை





முடிக்கும்பொழுது என்று சொல்லர்த்தம் கொடுத்துள்ளனர். இந்த வாக்கியங்களின் பொதுவான சந்தர்ப்பத்திற்குப் பொருந்தாத பொருள் கொடுக்கின்றனர். குர்-ஆன் முழுவடிவம் பெற்ற காலத்திலுள்ள அறிஞர்கள். உம்மை மரிக்கச் செய்யும் பொழுது என்றுதான் முத்தவாபாவுக்கு அர்த்தம் கூறினர். வஃபாத் என்றால் மரணத்தைக் குறிக்கும் சொல்.

**இஸ்லாமிய வல்லுநர்களின் அபிப்ராயங்கள்**

முத்தவாஃபிகா என்ற சொல்லுக்கு அர்த்தம் கற்பிப்பதில் இஸ்லாமிய நிபுணர்கள் இருகுழுவினராகப் பிரிந்துள்ளனர். நிச்சயமாகவே நான் உம்மை மரிக்கச் செய்வேன் என்ற அல்இம்ரான் 3:55 மூலபாஷையிலிருந்து தமிழாக்கச் செய்யும் பொழுது. நான் உம்மைக் கைப்பற்றுவேன் என்று அர்த்தம் கொள்ளும் வாய்ப்பை உண்டாக்குகிறது. எனவே முஸ்லிம் அறிஞர்கள் இரு பிரிவினர் ஆகிவிட்டனர் பேரறிஞர் அல்-ராஸி இதற்கு விளக்கம் கொடுக்கும் பொழுது தமது சொந்த கருத்தையோ, யூகத்தையோ கூறி எந்தச் சிக்கலிலும் மாட்டிக் கொள்ளாமலிருக்க. நடுநிலை வகிப்போராக மற்ற அறிஞர்கள் என்ன விளக்கம் தருகிறார்கள் என்பதையே தொகுத்து எழுதியுள்ளார். அதனைப் படிப்போர் தங்களிஷ்டம் போல் அர்த்தப்படுத்திக்கொள்ள விட்டு விடுகிறார்.

**உமது காலத்தை முடிக்கும் போது:**

அல்லது உமது வேளை வரும்போது உமது சத்ருக்களாகிய என்பது முதலாவது அர்த்தம்.

“**உம்மை மரிக்கச் செய்வேன்**” அல்லது “மரணத்தின் வழியாக உம்மை எடுத்துக் கொள்வேன்” என்பது இரண்டாவது அர்த்தம்.

இபின் அப்பாஸும், முகம்மது பின் இஷ்ஹாக்கும் எழுதிய குர்-ஆன் உரையில், தமது சத்ருக்களாகிய யூதர்களின் கரங்களில் கிறிஸ்து ஈனமான மரணம் அடையாதபடி அல்லாஹ் அவரைக் கனப்படுத்தச் சித்தங்கொண்டார். எனவே அவரைப் பரலோகத்துக்கு கடவுள் தமது பக்கமாக இழத்துக் கொண்டா. இந்தக் குறிப்பிலிருந்து இஸ்லாமிய உரையாசிரியர்கள் மூன்று விதமாக இதனை அர்த்தப்படுத்த ஆரம்பித்தனர். (அ) அவர் மூன்று மணிநேரம் மரிந்திருந்தார். பின்னர் எடுத்துக்கொள்ளப்பட்டார் என்று வகாபும்; (ஆ) ஏழு மணி நேரமரணத்துக்குப் பிறகு கடவுள் அவரை உயிரோடெழுப்பித் தம்மிடமாகச் சேர்த்துக் கொண்டார் என்று முகம்மது இஷ்ஹாக்கும் (இ அவரை உயர எடுத்துக் கொள்வதற்காக இறைவன் மரிக்கச் செய்தார் என்ற அல்-ரபிஇபின் அனாஸும் வேறுபட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர் (அல்-ஸுமார் 39:44)

قُل لِّلَّهِ الشَّفَاعَةُ جَمِيعًا ۖ لَّهُ مُلْكُ السَّمَاوَاتِ وَالْأَرْضِ ۖ ثُمَّ إِلَيْهِ تُرْجَعُونَ ﴿٤٤﴾

**முத்த வாஃபிக்காவிலுள்ள வா, கூட** (And) **என்று அர்த்தப்படும்.** இப்பொழுதும் இயேசு உயிரோடிருக்கிற படியால். முதலாவதாக கடவுள் அவரை விண்ணுக்கு எடுத்துக் கொண்டார். பின்னர் அவர் அந்திக் கிறிஸ்துவை அழிக்கத் திரும்ப இறங்கிவருவார். அதன் பின்னர் கடவுள் அவரை மரிக்கச் செய்வார்.





**இதன் ஆவிக்குரிய அர்த்தம்:** இது அபு பக்கர் அல்-வசிட்டியின் அபிப்பிராயம். உம்முடைய இச்சைகளுக்கும் ஆத்மீக ஆவல்களுக்கும் (உம்மை மரிக்கச் செய்வேன்) அதன் பின்னர் எனது பட்சமாய் உயர்த்திக் கொள்வேன் இறைவனோடு தொடர்பில்லாததும், இறைவனிடமிருந்து தோன்றாததுமாகிய அதாவது தெய்வீகத்தன்மை இல்லாத எதுவும் கடவுளுடன் வாசம் பண்ணவோ, கடவுளை அணுகவோ முடியாது என்பது பொதுவான உண்மை. அப்படியே இயேசுவும் பரத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது. பாவ உணர்ச்சிகளாகிய மாம்ச இச்சை, கோபம், பொறாமை ஆகியவை நீங்கப்பெற்று தூய்மையடைந்து, தேவ தூதர்களைப் போலானார்.

இந்தப்பொருத்த மற்ற, அர்த்தமற்ற மர்ம வியாக்கியானம் இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடான. இறை தூதர்களின் புனித தன்மைக்கு மாசு கற்பிப்பதாகவும். உன்னதமான, களங்கமற்ற இயேசுவின் பெயருக்கு இழுக்கு உண்டாக்குவதாகவும் அமைந்துள்ளது.

إِذْ قَالَتِ الْمَلَائِكَةُ يَا مَرْيَمُ إِنَّ اللَّهَ يُبَشِّرُكِ بِكَلِمَةٍ مِّنْهُ اسْمُهُ الْمَسِيحُ عِيسَى ابْنُ مَرْيَمَ
وَجِيهًا فِي الدُّنْيَا وَالْآخِرَةِ وَمِنَ الْمُقَرَّبِينَ ﴿٤٥﴾

அவர் இவ்வுலகத்திலும், மறு உலகத்திலும் கண்ணியமிக்கோராகவும். இறைவனுக்கு நெருங்கி........ இருப்பார். (ஆல் இம்ரான் 3:45 ஐ) பொய்யாக்குவதாகவும் உள்ளது. இயேசு பரத்துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டபோது ஒரு பிரதான தூதராக மாறிவிட்டார் என்ற எபோனியரின் கருத்துக்கு உகந்திருந்தது.

**முழுமையான பரமேறுதல்:** இதன்படி மர்யமின் மகன்

இயேசு ஆவியில் மாத்திரமல்ல. ஆவியுடன் சரீரமும் சேர்ந்தே பரமேறிச் சென்றார். இதற்குத் காரணம் "அவர்கள் உமக்கு எவ்விதத் தீங்கும் செய்யமாட்டார்கள்" என்ற இறைவாக்குறுதியாகும்.

**நான் உம்மை மரித்தது போல் ஆக்குவேன்:** இயேசுவை மோட்சத்துக்கு எடுத்துக் கொள்ளும் போது. அவரது சரீரத்தில் ஒரு பகுதியும் எஞ்சியிராது. ஆனால் அவரைப் பற்றிய அறிக்கைகள் அழிக்கப்பட்டுப் போவதால். அவர் மெய்யாகவே மரித்துவிட்டதாகவே எண்ணப்படுவார் "தன்மைகளும் குணாதிசயங்களும் ஒன்றுபோலிருக்கும் இரண்டின் பெயர்களை ஒன்றுக்கொன்று பிரதியாகப் பயன்படுத்துவதில் தவறு இல்லை" என்ற ரீதியில் இது இருக்கிறது.

**பற்றிக் கொள்ளுதல்:** என்றால் திருப்பிக் கொடுத்தல் அல்லது சேரவேண்டிய முழுக்கடனையும் திரும்பப் பற்றிப் பிடித்தல் என்று அர்த்தமாகும். எப்படியிருப்பினும் கிறிஸ்துவை உலகத்திலிருந்து பறித்துக் கொண்டு. பரமேறச் செய்தது அவருக்குத் திரும்பச் செலுத்தல் போலாகிறது.

**ஊழியத்திற்கு ஈடுசெய்தல் :** இயேசு கிறிஸ்துவினுடைய பூரண கீழ்ப்படிதலையும் அயராத உழைப்பையும்அங்கீகரித்திருக்கும் நற்செய்தியை கடவுள் அவருக்குத் தெரியப்படுத்தினார். கடவுளுடைய மார்க்கத்தையும். பிரமாணங்களையும் உலகோருக்குப் போதித்ததினால். கடவுளுடைய கட்டளையை குறைவின்றி நிறைவேற்றினதால், அவருக்கு எதிரிகளால் நேர்ந்த துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும் போதுமான நஷ்டஈடும், சன்மானமும் வழங்கப்படும் என்பது ஒரு





விளக்கமாகும்.

வார்த்தையின் அர்த்தத்தின் பிரகாரம் வியாக்கியானங்களித்தவர்களின் மொத்த கண்ணோட்டங் களாகும் என்று அல்-ராசி கூட்டி எழுதுகிறார். "முத்தவாஃபிக்கா " என்பதற்கு இப்படி பற்பல வியாக்கியானங்கள் இருப்பதாக அல்-ராஸி வகைப்படுத்திக் கூறுகிறார்.

வேறுசில அறிஞர்கள், இதில், அர்த்தப்புரட்டல் தானே தவிர. வார்த்தைப்புரட்டல் இல்லை என்பதாக வாதிடுகின்றனர். அதாவது. நான் உம்மை என்னிடமாக உயர்த்திக் கொள்வேன் உம்மை நம்பாதோரிடமிருந்து உம்மைக் கண்காணிப்பேன் தூய்மைப்படுத்துவேன். பின்னர் உலகத்திற்கு இன்னொருமுறை அனுப்பி உம்மை மரிக்கச் செய்வேன் என்பதாகும். இவ்வாறு தலைகீழ் அர்த்தமாறுதல்கள் குர்-ஆனில் அடிக்கடி வருகின்றன.

> *இறுதியாக அல்ராஸி* : "நாமறிந்த இந்தப் பல்வேறு கண்ணோட்டங்களினால் எந்த ஒரு அர்த்தத்தையும் விட்டுவிடாமலும், எதையும் மறுக்காமலும், இருக்கிறோம்; ஆனால் அல்லாஹ் எல்லாமறிந்தவர்."

மர்யம் 19:15,33 ஆகிய இரு சந்தர்ப்பங்களிலும் யஹ்யாவும் (யோவானும்) இயேசுவும் முறையே

وَالسَّلَامُ عَلَيَّ يَوْمَ وُلِدْتُ وَيَوْمَ أَمُوتُ وَيَوْمَ أُبْعَثُ حَيًّا

"நான் பிறந்தநாளிலும் நான் இறக்கும் நாளிலும்" என்று திட்டவட்டமாக, சந்தேகம் எதற்கும் இடமின்றி கூறினதாக

குர்-ஆனில் எழுதிவைத்திருக்கும் பொழுது, முஸ்லிம் நண்பர்கள் இதை அனர்த்தப்படுத்தி. திரித்துக் கூறி. அது அப்படி அல்ல. அதற்கு நேர்மாறாகப் பொருள்படும் என்று குதர்க்கமாக வியாக்கியானிப்பது ஆச்சரியமே! "நான் மரிக்கும் நாளில்" என்று இயேசு கூறினது அவரது சிலுவை மரணத்தைக் குறிப்பிடாமல், அவருடைய இரண்டாம் வருகையில், அந்திக்கிறிஸ்துவாகிய சைத்தானை அழித்துவிட்டு,பின்பு சாவார் என்று குறிப்பிடுவதாக முஸ்லிம்கள் கூறுவது விந்தையிலும் விந்தையே!

அல்-தபரி, இபின் கபீர் காதிர் ஷமக்ஷரி பைடாவி போன்ற ஏனைய முஸ்லிம் விளக்கவுரை ஆசிரியர்களும் இக்குழப்பத்தைப் போக்குவதற்கு உதவவில்லை.

**முடிவுரை**

'முத்தவாஃபிக்கா' என்ற சர்ச்சைக்குரிய இந்தப் பதத்துக்கு அறிஞர்களின் கருத்துக்களை எல்லாம் தொகுத்தளிக்கும் அல்-ராஸியின் முயற்சியின் பலன் தான் என்ன? இவற்றின் கருத்துரை என்ன?

முதலாவதாக வெளித்தோற்றத்தின்படி நோக்கினால் இந்த இஸ்லாமிய மூதறிஞரான அல்-ராஸி அவர்கள் வேண்டுமென்றே விருப்பு-வெறுப்பு எதுவும் தெரிவிக்காமல். பாரபட்சமில்லாமல். நடுவராக நின்று மற்றவர்களின் கருத்துக்களையும். வியாக்கியானங்களையும் மட்டும் கிரமப்படுத்தி எழுதியிருப்பது புதிராக இருக்கிறது. வெறும் தொகுப்பாசிரியராகவும் பார்வையாளராகவும். மட்டும் இருந்து கொண்டு தம்முடைய சொந்த முடிவுகள். விமர்சனங்கள்





அல்லது அபிப்பிராயங்களை உள்ளடக்கிக் கொண்டிருப்பது விளங்காத இரகசியமாயிருக்கிறது.

இரண்டாவதாக, இஸ்லாமிய இறைவல்லுநர்களின் வியாக்கியானங்களும் சத்தியத்தை சத்தியமாக அறிந்து கொள்ள விழையும் ஆராய்ச்சியாளர்கள் மேலும் குழப்பமடைவதற்கு வழி வகுக்கின்றனவேயன்றி எவ்விதத்திலும் இவை உதவியாக இல்லை. இந்த வித்தியாபதிகள் சாதாரணமானவர்கள் அல்லர். இவர்கள் எல்லாரும் இஸ்லாமிய சரித்திராசிரியர்களும் உயர்ந்த பதவிகள் வகித்தவர்களும் மாணவர்கள் பலரும் இவர்களுடைய நூல்களையே மேற்கோள் காட்டி கல்வி தேர்ச்சி பெற்றுமிருக்கின்றனர். ஆகிலும் இவர்களுடைய முரண்பாடான உரைகள் உண்மை விரும்பிகளை விரக்தியடையச் செய்கின்றன. அப்படியானால், சரியான விளக்கம் என்ன? அப்படி பயன்படுத்தப்படும் மார்க்க பதம் மார்க்க ஒற்றுமையை அல்ல, மார்க்கப் பேதங்களை வளர்ப்பதாக இருக்கிறதே என்ற விளக்கத்தை அவர் ஏற்றுக் கொள்ளவோ அல்லது தள்ளவோ வேண்டும்?

'அல்லாஹ் எல்லாமறிந்தவன்' கடவுளுக்கு எல்லாம் தெரியும் என்ற சொற்றொடருக்குப் பின்னால் பதுங்கிக்கொள்வது பிரச்சினைகளை வளர்க்குமே தவிர தீர்க்காது எல்லாவற்றையும் தீர்க்கமாக எழுதிவிட்டு இறுதியில் அல்-ராஸி இவ்வாறு முடிவு செய்வது ஒருவரை இருளிலிருந்து காரிருளுக்குள் தள்ளுவதாகும். அல்லது சிறு குழியிலிருந்து தூக்கி பாழ்கிணற்றில் போட்டது போலாகும். மேலும் ஆசிரியரின் நிச்சயமற்ற மனத்தெளிவற்ற நிலைமையை கோடிட்டுக் காண்பிக்கிறது.

மூன்றாவதாக 'முத்தவாஃபிக்கா' என்ற சொல்லை மூடுதிறை போட்டு மறைத்து, அது சம்பந்தப்பட்ட வசனங்களைத் தெளிவற்றதாக்குவதே இதன் உள் நோக்கம் இதன் நேரடி அர்த்தமான 'மரணம்' என்பதை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக, மறைத்து விடுவதினால் தங்களுக்கு ஆதாயம் என்பதற்காகவே இவ்வாறு நழுவி விடுகின்றனர். இந்த நேரடியான, எளிதான அர்த்தத்தை ஒத்துக் கொண்டார்கள் என்றால் முஸ்லீம்கள் அனைவரும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை பைபிளிலிருப்பது போல் ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் வேறு வழியில்லை எனவே தான் இவ்வளவு தயக்கம்.

## சரியான வியாக்கியானம்

இந்த எல்லாவிதமான தேவையற்ற தெளிவற்ற விளக்கங்கள் என்ற குழப்பங்கள் நிறைந்த குட்டையிலிருந்து வெளியேறுவதற்கு நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்று தான் 'முத்தவாஃபிக்கா' என்பதின் சொல்லர்த்தங்களையும். குர்ஆனில் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தையும் கவனிப்பதாகும். 'முத்தவாஃபிக்கா' என்ற பதமும் அதனுடன் தொடர்பு கொண்ட கிளைகளும் குர்ஆனில் சுமார் 25 தடவைகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. விதிவிலக்கான இரண்டே இரண்டு சந்தர்ப்பங்களைத்தவிர. மற்றெல்லா இடங்களிலும் இந்த வார்த்தை மரணத்தையே சுட்டிக் காண்பிக்கிறது.

وَهُوَ الَّذِي يَتَوَفَّاكُم بِاللَّيْلِ وَيَعْلَمُ مَا جَرَحْتُم بِالنَّهَارِ ثُمَّ يَبْعَثُكُمْ فِيهِ لِيُقْضَىٰ أَجَلٌ مُّسَمًّى ۖ
ثُمَّ إِلَيْهِ مَرْجِعُكُمْ ثُمَّ يُنَبِّئُكُم بِمَا كُنتُمْ تَعْمَلُونَ ۝



கிறிஸ்து மெய்யாகவே சிலுவையில் அறையப்பட்டாரா?

"அவன் தான் இரவில் உங்களை மரிக்கச் செய்கிறான் இன்னும் நீங்கள் பகலில் செய்த வற்றையெல்லாம் அறிகிறான். மீண்டும் உங் களைக் குறிப்பிட்ட தவணை முடிப்பதற்காக பகலில் எழுப்புகிறான் ..... (அல் அன் அம் 6:60)

அல்லாஹ் உயிர்களை அவை மரணிக்கும் போதும் மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையிலும் கைப்பற்றி......

اللَّهُ يَتَوَفَّى الْأَنفُسَ حِينَ مَوْتِهَا وَالَّتِي لَمْ تَمُتْ فِي مَنَامِهَا ۖ
فَيُمْسِكُ الَّتِي قَضَىٰ عَلَيْهَا الْمَوْتَ وَيُرْسِلُ الْأُخْرَىٰ إِلَىٰ أَجَلٍ مُّسَمًّى ۚ
إِنَّ فِي ذَٰلِكَ لَآيَاتٍ لِّقَوْمٍ يَتَفَكَّرُونَ ۝

(அல்ஜமர் 39:42) இவ்விருவாக்கியங்களில் மட்டும் 'முத்தவாஃபிக்கா' நித்திரையைக் குறிக்கிறது.

'முத்தவாஃபிக்கா' என்ற வார்த்தைக்கு 'மரணம்' – அது இயற்கையான மரணமோ அல்லது சிலுவை மரணமோ எதுவானாலும் சரி–என்ற ஒரே ஒரு அர்த்தம் மட்டுமே உண்டு உருவக அணியில் சூசகமான அர்த்தம் எதுவும் கிடையாது என்பதனை குர்ஆனின் பின் புலத்திலேயே புரிந்து கொள்ளலாம். அல்மாயிதா 5:117 ஆம் வசனத்திலிருந்து

مَا قُلْتُ لَهُمْ إِلَّا مَا أَمَرْتَنِي بِهِ أَنِ اعْبُدُوا اللَّهَ رَبِّي وَرَبَّكُمْ ۚ وَكُنتُ عَلَيْهِمْ شَهِيدًا مَّا دُمْتُ فِيهِمْ ۖ
فَلَمَّا تَوَفَّيْتَنِي كُنتَ أَنتَ الرَّقِيبَ عَلَيْهِمْ ۚ وَأَنتَ عَلَىٰ كُلِّ شَيْءٍ شَهِيدٌ ۝

"நான் அவர்களுடன் உலகில் இருந்தகாலமெல்லாம் அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தேன். அப்பால் நீ

என்னைக்கைப்பற்றிய பின்னர் நீயே அவர்கள் மீது கண் காணிப்பவனாக இருந்தாய்......" இயேசு கிறிஸ்துவுக்குப் பிறகு சீடர்களைப் பாதுகாப்பு பண்ணும் உத்தரவாதம் அல்லாஹ்வினுடையது என்பதை வெளிப்படுத்துகிறது. அவருடைய மரணத்துக்குப் பிறகு தமது சீஷர்கள் மீது அவருக்குக் கட்டுப்பாடு இல்லாமற் போகிறது என்று அர்த்தமாகிறது. இயேசு கிறிஸ்து மரிக்கவில்லை. ஆனால் ஆத்துமாவோடும் சரீரத்தோடும் விண்ணுலகுக்கு உயர்த்தப்பட்டார் என்ற இஸ்லாமிய கொள்கையை உண்மையென நம்புவோமானால். அவரே சீடர்களை கண்காணிக்கவும் சாதகமாகவோ, பாதகமாகவோ சாட்சி கொடுக்கவும் முடியுமே. பின்னர் ஏன் கடவுளின் பொறுப்பில் ஒப்படைக்கிறார். நான் அவர்களுடன் இருந்த காலமெல்லாம் என்று கூறும்பொழுதே, மறைமுகமாக தமது மரணத்தைக் குறிப்பிடுகிறார் அல்லவா? யதார்த்தமாக நோக்குமிடத்தில் இப்பொழுதும் நீர் என்னை மரிக்கச் செய்த பிறகு. நான் அவர்களைக் கவனிக்க முடியாதபடியால், எல்லாவற்றையும் மேற்பார்க்கிறவராகிய அல்லாஹ்வே. நீர் நித்தியமான கடவுளாகையால். நீரே அவர்களைக் கண்காணிப்பீராக என்று விண்ணப்பித்தார்.

وَالسَّلَامُ عَلَيَّ يَوْمَ وُلِدتُّ وَيَوْمَ أَمُوتُ وَيَوْمَ أُبْعَثُ حَيًّا

இன்னும் நான் எங்கிருந்தாலும் அவன் என்னை முபாரக்கானவனாக (நற்பாக்கியமுடையவனாக) ஆக்கியிருக்கிறான். மேலும் நான் உயிருடன் இருக்கும் காலமெல்லாம் தொழுகையையும் ஜகாத்தையும் நிறைவேற்ற எனக்குக் கட்டளையிட்டிருக்கிறான். (மர்யம் 19:31) என்ற





வசனத்திலிருந்து பெறப்படும் இரு உண்மைகளாவன. 1) நான் உயிருடன் இருக்கும் காலமெல்லாம் என்பதிலிருந்து தமது மரணத்தை எதிர்நோக்கினார் என்று அர்த்தமாகிறது. (2) இஸ்லாமின் கூற்றுப்படி கிறிஸ்து மாம்சத்தோடும் இரத்தத்தோடும் பரலோகம் சென்றிருக்கிறபடியால் ஜகாத்-தானதர்மங்கள் செய்து வருகிறாரா? அங்கேயும் பிச்சைக்காரர் உண்டோ?

ஹதீத் அநேக இடங்களில் இந்த சத்தியத்துக்கு அத்தாட்சியாயிருக்கிறது. புகாரியின் ஸஹீஹில் இவ்வாறு வாசிக்கிறோம்.

> "இபின் அப்பாஸ் கூறியிருப்பது போல அல்லாஹ்வின் ரஸுல் நியாயத்தீர்ப்பின் நாளிலே, நீர் நிர்வாணியாகவும், வெறுங்கால் களுடனும். சுன்னத்து இல்லாதவராகவும் சேர்த்துக் கொள்ளப்படுவீர் என்று உரைத்த பின்னர். எழுதப்பட்ட ஏடுகளைச் சுருட்டு வதைப்போல் வானத்தை நாம் சுருட்டிவிடும் அந்நாளை (நபியே! நினைப்பூட்டுவீராக! முதலில் படைப்புகளைப் படைத்தது போன்றே (அந்நாளில்) அதனை மீட்டுவோம். இது நம் மீது வாக்குறுதியாகும் நிச்சயமாக நாம் இதனைச் செய்வோம் (அல் அன்பியா 21:104) மேலும் தொடர்ந்து கூறுகிறார். ஆபிரகாம் (இப்ராஹீம்) தான் உயிர்த்தெழுதலின் நாளில் முதலாவது ஆடை அணிவிக்கப்படுவார் என் னுடைய கூட்டாளிகளில் சிலர் வலது இடது

பக்கத்திலே நிறுத்தப்பட்டு, அவர்களிடம் இவ்வாறு அறிவிக்கப்படும். நீங்கள் என்னை விட்டுக் கடந்து சென்ற பின்னர் இஸ்லாமில் மறுபடியும் பிறந்தீர்கள் அப்பொழுது மர்யமின் மகன் பயபக்தியுள்ள தேவதாசன் இயேசு மஸீஹ் கூறினபோது, "நான் அவர்களுடன் இருந்தகாலமெல்லாம் அவர்களைக் கண்காணிப்பவனாக இருந்தேன். அப்பால் நீ என்னை மரிக்கச் செய்த பின்னர் நீயே அவர்கள் மீது கண்காணிப்பவனாக இருந்தாய் நீயே எல்லாப் பொருட்கள் மீதும் சாட்சியாக இருக்கிறாய். இறைவா நீ அவர்களை வேதனை செய்தால் (தண்டிப்பதற்கு முற்றிலும் உரிமையுள்ள) உன்னுடைய அடியார்களாகவே நிச்சயமாக அவர்கள் இருக்கின்றனர். அன்றி, நீ அவர்களை மன்னித்து விடுவாயானால் நிச்சயமாக நீதான் (யாவரையும்) மிகைத்தோனாகவும் ஞானமிக்கோனாகவும் இருக்கின்றாய்."

மேற்கூறியவற்றை இயேசு கூறினதாக முகம்மது குர்ஆனில் மேற்கோள் காட்டுகிறார். முகம்மதுவும் மரித்தார். ஆனால் அவர் விண்ணுலகுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதாக எந்த முஸ்லீமும் உரிமை பாராட்டுவது கிடையாது மேலும் முகம்மது தமது முடிவைப் பற்றி கூறும்பொழுது. தவஃபயத்தானி (மரிக்கச் செய்தீர்) ஆனால், பரலோகத்துக்கு எடுத்துக் கொண்டீர் என்று சொல்லவில்லை. ஆனால் மரணத்தைப் பற்றிய பதம் இருவரையும் பொருத்தவரையில்





ஒன்றாகவே இருக்கிறது. எனவே இயேசுவும் மரித்தார் முகம்மதுவும் மரித்தார் இருவருமே மரித்தனர். ஆனால் இருவருக்கும் உள்ள பெரிய வேறுபாடு என்னவென்றால். மூன்றாம் நாளில்இயேசு கிறிஸ்து உயிரோடெழுந்தார். முகம்மதுவோ கல்லறையிலிருக்கிறார். உயிர்த்தெழுந்த கிறிஸ்து மறுபடியும் திரும்பி வருவார்-மரிப்பதற்காக அல்ல. ஏனெனில் அவர் ஏற்கனவே மரித்து விட்டார்–உயிரோடிருப்பவர்களையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க என்று பிழையில்லாத பைபிள் கூறுகிறது.

குர்–ஆனில் அன்றி ஆரோக்கியமான இஸ்லாமியப் பாரம்பரியத்திலும் வஃபாத் என்ற அரபிய சொல்லுக்கு மரணம் என்று தான் அர்த்தம் என்பதாக அனாஸ் கூளுரைக்கிறார் அல்லது மரணத்தைக் குறிப்பிடுவதற்கு இந்தச் சொல்லையே பிரயோகித்தனர்.

இறைத்தூதர் சொன்னதாவது...... ஒருவருக்கு ஏற்படுகிற துரதிர்ஷ்டம் துன்பத்தினிமித்தம் சாவை விரும்பக் கூடாது. அவ்விதமாகத் தீர்மமானிக்க நேரிட்டால். இவ்விதமாக வேண்டிக் கொள்ளவேண்டும். அல்லாஹ்வே, எனக்கு நல்லது என்று தெரியும் காலம் வரைக்கும் என்னை உயிருடன் காப்பாற்றும் மரணம் (தவஃபானி) எனக்கு நல்லது என்று நீர்கண்டால் என்னை மரிக்கச் செய்யும்.

வியாதிப்படுக்கையிலிருந்த இறைதூதரைப் பார்த்து விட்டு அலி இபின் அயிதாலிப் வெளியே வந்தவுடன் அவர் மரித்தார் என்றுஇபின் அப்பாஸ் கூறினார்.

குர் ஆனில், யூனுஸ் 10:46 அர் ரக்ஃது அல்முஃமின் 40:47 ஆகிய மூன்று வசனங்களிலும் நத்தஃபாயன்னகா

நிச்சயமாக நாம் உம்மை மரணம் அடையச் செய்தாலும் என்று இறைவன் முகம்மதுவைப் பார்த்துப் பேசினார். அவருடைய ஜீவிய காலத்திலேயே அவிசுவாசிகளைத் தண்டிப்பதாகவும் தவறினால், ரஸூலை அவர்களுக்கு முந்தி எடுத்துக் கொள்வதாகவும், சத்ருக்கள் பின்னர் தண்டிக்கப்படுவார்கள் என்றும் இறைவன் உறுதிமொழி தந்தார். மேற்கூறிய பதம் கிறிஸ்துவின் மரணத்தைக் குறிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டதுதான். இஸ்லாமிய வியாக்கியானிகள் என்ன காரணத்தினாலோ ஒரு பொருளைக் கொடுக்கும் நத்தஃபயானக்கா மற்றும் முத்தவாஃபிக்கா என்ற இரு பதங்களையும் நன்கு ஆராய்ந்து நல்லதொரு முடிவைச் சொல்லாமற் போனார்கள் நத்தஃபயானக்கா.

இங்ஙனம் குர் ஆனிலும் ஏனைய இஸ்லாமிய பழங்கால நூல்களிலும் வஃபாத் என்றால் மரணம் சாவு என்பதையே நிச்சயமாக அர்த்தப்படுத்தும்பொழுது. கிறிஸ்துவின் சிலுவை மரணத்துக்கு இது பொருந்தாது என்று கூறிவிட்டதால் கிறிஸ்துவின் சிலுவை மரணச் சரித்திரம் பொய்யாகவுமில்லை மங்கி மறைந்து போகவுமில்லை; அதற்குப் பதிலாக பெரும்பாலான முஸ்லீம்களை குழப்பத்தில் ஆழ்த்தி, சத்தியத்தினின்று தூரப்படுத்திவிட்டது.

ஆகிலும் ஒரு சிலருக்கு அன்னிஸாவு 4:157 ஆம் வசனத்துடன் மேற்கண்ட வியாக்கியானத்தை எப்படிப் பொருத்துவது என்ற ஐயப்பாடும், ஆச்சரியமும் ஏற்படலாம்.

நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வின் தூதராகிய மர்யமின் குமாரராகிய-ஈஸா மஸீஹை கொன்று விட்டோம்





என்று அவர்கள் கூறுவதாலும் அவர்கள் அவரை கொல்லவுமில்லை. அவரை அவர்கள் சிலுவையிலறையவுமில்லை, ஆனால், அவர்களுக்கு ஒருவன் ஒப்பாக்கப்பட்டான் மேலும் இதில் அபிப்பிராய பேதம் கொண்டவர்கள் அதில் சந்தேகத்திலேயே இருக்கின்றார்கள் வெறும் யூகத்தைப் பின்பற்றுவதேயன்றி அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது; நிச்சயமாக அவர்கள், அவரைக் கொல்லவே இல்லை (அன்னிஸாவு 4:157)

இந்த வசனத்தின் அர்த்தமும் மறைபொருளாக்கப்பட்டு விட்டது. நவீன முஸ்லீம் அறிஞர்களும் பாரம்பரிய விளக்கம் வியாக்கியானத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள முடியாமல் தவிக்கின்றனர். போதுமான ஆதாரங்களும், வரலாற்றும் சான்றுகளும் கொண்டு ஆராயமல் விட்டதால்தான், இந்தத் தவறான, பாரம்பரிய விளக்கம் அளிக்கப்படுகிறது.

அவர்கள் அவரைக் கொல்லவுமில்லை. அவரை அவர்கள் சிலுவையிலறையவுமில்லை என்ற சொற்றொடர் இயேசு ஒரு வேளை இயற்கையாக மரணம் அடைந்தார். என்பதை நிரூபிக்கவுமில்லை. இருக்கிறபடியே எடுத்துக் கொண்டால் அவர் கொல்லப்படவுமில்லை. சிலுவையிலறையப்படவுமில்லை இந்த பரிசீலனையானது ஏற்கனவே 'முத்தவாஃபிக்கா' என்பதற்குச் சொல்லர்த்தம் பார்த்தமாதிரியே உள்ளது. இயேசு கிறிஸ்துவின் சரித்திர பூர்வமான அங்கீகரிக்கப்பட்ட சிலுவை மரணக் கொள்கையைப் புதைப்பதாக அநேக உரையாளர்களுக்குப் பட்டது. ஏற்கனவே கிறிஸ்து மரித்து விட்டதால், திரும்பவும்

பூவுலகத்திற்கு வந்து மரிப்பார் என்பது நிராகரிக்கப்பட்டது. ஏற்கனவே கிறிஸ்து மரித்து விட்டதால் திரும்பவும் பூவுலகத்திற்கு வந்து மரிப்பார் என்பது நிராகரிக்கப்பட்டது. இதன்விளைவாக. குர்ஆனின் வசனங்கள். கிறிஸ்தவ விசுவாசமாகிய கிறிஸ்துவின் பிராயச்சித்த மரணத்தால் விசுவாசிக்கிற எல்லாருக்கும்இரட்சிப்பு உண்டு எனவும். மீண்டும் அவர் வந்து மரிப்பார் என்ற அநுமானத்தை உடைப்பதாகவும் உள்ளது. மனிதனை அவனது பயங்கரமான நிலைமையிலிருந்து மீட்பதற்காகவே கிறிஸ்து சிலுவையில் ஒருதரம் மரித்தது உண்மை என்றால். அவர் மறுபடியும் வந்து மரிக்கத் தேவையில்லை, மனுக்குல இரட்சிப்புக்குரிய முழுக்கிரயத்தையும் நிரந்தரமாகச் செலுத்தி விட்டார்.

> “நிச்சயமாக அவர்கள் அவரைக் கொல்லவே இல்லை! இதற்கும் நிச்சயமான ஆதாரம் என்ன இருக்கிறது? ஏனென்றால் பலபல சான்றுகளைக் கொண்டு கிறிஸ்து மெய்யாகவே சிலுவையிலறையப்பட்டார் என்பதை நிரூபித்து விட்டோம். கிறிஸ்துவின் சிலுவை மரணமே மனுக்குல இரட்சிப்பின் முதற் கட்டமாகும். அதன் இரண்டாவது கட்டம் அதற்குச் சிகரமாக உள்ள அதாவது உயிர்த்தெழுதலாகும். கிறிஸ்துவின் சத்துருக்களின் சதித்திட்டங்கள் எல்லாம் முறியடிக்கப்பட்டன. அவர் வெற்றி முழக்கத்துடன் உயிர்த்தெழுந்ததினாலே, சிலுவையிலறையப்படாதவர் போலத் தோன்றினார்.
>
> அடுத்தாக, அவர்தாமே மனப்பூர்வமாகத்





> தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்ததால், யாரும் அதை எடுத்துக் கொள்ளவில்லை, எவரும் பலவந்தமாக அவரை சிலுவையிலறை யவுமில்லை (யோவான் 10:17-18) ஆதலால் அவருடைய சத்துருக்கள் அவரைக் கொன்று விட்டோம் என்று மார்த்தட்டிக் கூற முடியாது. அதற்குப் பதிலாக அவரே தன்னார்வத்துடன் ஒப்புக் கொடுத்தார். அவர் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்திராவிட்டால், ஒருவரும் அவரைத் தொடவோ அருகில் நெருங்கவோ முடியாது. அவரது அக்கிரமக்காரராகிய விரோதிகள் தங்களுடைய சக்தியால், பலத்தால் அவரைக்கொன்று விட்டதாக நினைக்கலாம். பெருமைப்படலாம். ஆனால் அது அப்படி அல்ல. அவர் மனதார தம்முடைய ஜீவனைக் கொடுத்தார்.

கிறிஸ்துவினுடைய விரோதிகளின் நோக்கங்கள் நிறைவேறவில்லை என்பதைத்தான் மறுக்கிறோமேயன்றி அவர் கொலை செய்யப்பட்டார் அல்லது சிலுவையிலறையப்பட்டார் என்பதனை மறுக்கவில்லை. அவருடைய சத்துருக்கள் அவரை முற்றிலுமாக. நிரந்தரமாக நீக்கிவிட்டதாக எண்ணி அகமகிழ்ந்தனர் ஆனால் அதற்கு நேர்மாறாகச் சம்பவித்தது. இந்தச் சதித்திட்டம் தீட்டினவர்கள் கண்ணெதிரிலேயே கிறிஸ்தவம் செழித்து வளர்ந்து பெருகிற்று. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும். கிறிஸ்தவத்தின் வளர்ச்சியும் அவர்கள் உச்சந்தலையில் சம்மட்டி கொண்டு அடித்தது போலாயிற்று.

"அவர்களுக்கு அவரைப்போன்ற ஒருவன் ஒப்பாக்கப் பட்டான்" என்ற வாசகத்தையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இரு அடிப்படைகளில்-குர் ஆனில் மற்றும் வியாக்கியான கண்ணோட்டங்களில் ஆய்வு செய்தால் தான் நன்கு புலனாகும்.

யூதர்களின் சதிசர்ப்பனைகள், தந்திர மந்திரங்கள் யாவும் தேவசித்தம்-திட்டம் ஆகியவற்றின் முன்பு தவிடுபொடியாகி விட்டதைத்தான் இந்த வசனப்பகுதி நமக்குக் காட்டுகிறது. ஸூரா அல் இம்ரான் 3:54 இல் கண்டுள்ளபடி (ஈஸாவை நிராகரித்தோர் அவரைக் கொல்லத்) திட்டமிட்டுச் சதி செய்தார்கள். அல்லைாஹ்வும் சதி செய்தான். தவிர அல்லாஹ் சதி செய்பவர்களில் மிகச் சிறந்தவன் ஆவான், என்பதிலிருந்து யூதர்கள் எவ்வளவாக கிறிஸ்துவை ஒழித்துக்கட்ட ஆலோசனை செய்தார்கள் என்றும், எல்லாமறிந்த, எல்லாம் வல்ல கடவுளும் தமது அநாதி தீர்மானத்தை நிறைவேற்றினார் என்றும் அறிகிறோம்.

இந்த வசனத்தின் தெளிவும் அதன் பின்புலமும் அதிகார பூர்வமான கிறிஸ்தவ சாட்சியாக மாறிவிடுகிறது. கிறிஸ்துவைக் கொன்று. சிலுவையிலறைந்து தாங்கள் ஜெயித்து விட்டதாக யூதர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாக திட்டமிட்டனர்; ஆனால் அதனை விடச் சிறந்த தேவ திட்டம் அவர்கள் அவரைக் கொன்ற பின் கிறிஸ்துவை உயிரோடெழுப்பி தேவனே வெற்றி சிறந்தார் என்று மிக அழகாக பேராசிரியர் யூஸுப் ஹஃதாத் தமது நூலாகிய அல் குர் ஆன் வா அல் மஷிஃஸியா ப.45இல் கூறுகிறார்.

யூதர்கள் கிறிஸ்துவை அழித்து ஒழித்துக்கட்ட சதித்திட்டமிட்டனர், அவர்களுடைய சூது சிலகாலம் வெற்றி





பெற்றது போல இருந்தது. ஆனால் தேவனுடைய திட்டமோ பூமிக்கு வானம் எவ்வளவு உயரமோ,அவ்வளவு உயர்ந்ததாக இருந்தது. ஏனென்றால், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து மூன்றாம்நாள் உயிரோடெழுப்பப்பட்டார். அதன் பின்னர் 40 நாட்கள் தம்முடைய சீஷர்களுடன் சஞ்சரித்திருந்தார்; அதன் பின்னர் பரலோகத்துக்குச் சென்றார் என்பது வெள்ளிடைமலை. யூதர்களுடைய கைகளிலிருந்து இயேசுவைக் காப்பாற்றுவதும், தப்புவிப்பதும் தம்மிடம் எடுத்துக் கொள்வதும் கடவுளுடைய நோக்கமல்ல என்பது தெளிவாகிறது. இந்த விளக்கம் வரலாற்று உண்மைகளுக்கு முரணாகவும். நியாய வாதங்களுக்கும் எதிரிடையாகவும், குர்ஆனின் சாட்சிக்கு மாறாகவும் இருப்பதால், நாம் இதுகாறும் இவற்றிலிருந்து பெற்ற ருசுப்படுத்தின சத்தியங்களை வீதியில் வீசினது போலாகும், தேவனுடைய தீர்மானம் இயேசுவை உயிரோடெழுப்புவது. இவ்வாறு தேவன் யூதர்களுக்கு எதிராகச் செயல்பட்டு, அவர்கள் சதியை முறியடித்துவிட்டபடியால், அவர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்து, கொன்று தீர்த்துவிட்ட காரியம் அவர்களுக்கு உண்மைபோலக் காணப்பட்டது என்ற சொற்றொடரின் மெய்யான அர்த்தம். இயேசுவைக் கொன்று விட்டதுடன், நித்தியமாக அவருடைய பெயரும் இல்லாமல் ஆக்கிவிட்டதாக யூதர்கள் கர்வம் கொண்டனர். ஆனால் நடந்தது என்ன? அவர்கள் எதிர்பார்த்து நம்பியிருந்ததற்கு முற்றிலும் மாறாக அவர் உயிர்த்தெழுந்தார். அதனால் அவர்கள் சதி தோல்வியடைந்தது மாத்திரமல்ல மரணமே ஜெயமாக விழுங்கப்பட்டது.

"ஒரு உருவத்தில் அல்லது சாயலிலிருந்து

வேறொன்றுக்கு மாறும் ஆற்றலை இயேசு பெற்றிருந்தார். அவருடைய ஸ்தானத்தில் சிலுவை யிலறைப்பட்ட சீமோனுக்குத்தமது சாயலைக் கொடுத்தார். அவரோ உயிருடன் தம்மை அனுப்பினவரிடத்திற்கே பரமேறிச் சென்றார். தம்மைப் பிடிக்க வந்த எல்லாருடைய கண் களுக்கும் புலனாகாமல் மறைந்து விட்டதால் அங்கு குழுமியிருந்தோர் வஞ்சகத்துக்கு ஆளானார்கள் என்ற எபியோனயரின் விகற் பமான விளக்கம் அல்லது வேதப்புரட்டு அபு கிஸ்வா மூஸா அல் ஹரின் என்பாரின் நபி நூலான ஒரு ஆசாரியனும் தீர்க்கதரிசியும் பக்.129ல் காண்கிறோம்.

இங்ஙனம், வேதாகம வாக்கியங்களில் முன்னறிவிக்கப்பட்ட படியும், கிறிஸ்து தாமே தம்மைக் குறித்து. அடிக்கடி அறிவுப்புகள் கொடுத்து வந்தபடியும் கிறிஸ்து மரித்து மூன்றாம் நாள் உயிரோடெழுந்தது யூதர்களின் வஞ்சக ஆலோசனைகளுக்கும், சதித்திட்டங்களுக்கும் மரண அடியாயிருந்தது.

இந்தக் கருத்துப் பேதத்தை வியாக்கியானமட்டத்தில் பரிசீலிக்க அவர்களுக்கு அவ்விதமாகத் தோன்றினது அவருக்கு ஒப்பாக்கப்பட்டான் என்ற வாக்கியத் தொடரை எடுத்துக் கொள்வோம். அந்தக்காலம் முதல் இஸ்லாமிய சிந்தனையாளர்கள் ஷபீஹ் யார் என்று கண்டுபிடிப்பதிலேயே அதிக வீண் முயற்சி செய்திருக்கிறார்கள். இவர்களுக்கு இதை





நிரூபிக்க குர் ஆனின் வசனத்தைத்தவிர வேறு ஆதாரங்கள் எதுவுமில்லாததால். அந்நியர்களின் வேதப்புரட்டுகளையே நம்புகின்றனர். எனவே டயோஸிட்டஸ். எபியோனைட்ஸ் நாஸ்டிக்ஸ் முதலானோரின் கட்டுக்கதைகளையே தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டனர் தங்கள் தத்துவத்தை ருசுப்படுத்த முஸ்லீம்களுக்கு சரித்திரச் சான்றுகளோ, புதைபொருள், தொல்பொருள் ஆய்வுகளில் முடிவுகளோ எதுவும் கிடையாது. இதனை நாம் வீண் ஜம்பமாக கூறாமல், யதார்த்தமாகவே கூறுகிறோம்.

வஹாப் இபின் முனாபீ (கி.பி. 647-733) என்பவரை ஒரு முக்கிய எடுத்துக்காட்டாகக் கூறலாம். வேதத்தையுடையயோரைப் பற்றி நன்கு அறிந்தவர் என்று புகழ் பெற்றிருந்ததால் முகம்மதுவின் பின்னடியார்களும் இவர் வாக்கு மூலத்தையே அதிகம் சார்ந்திருந்தனர். ஆனால் இவருடைய வேதாகம அறிவு எல்லாம் கிறிஸ்தவ வேதப்புரட்டர்கள். தள்ளுபடி ஆகமங்கள் மற்றும் தல்மூத் கூறினவைகளைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இவர் பரப்பின வதந்திகள் எல்லாம்பற்பல கட்டுக்கதைகளையும் ஆதாரமில்லாத சம்பவங்களையும் யூகங்களையும் சார்ந்திருந்தன. இவரை மேற்கோள்காட்டி அல்- தலாபீ கிறிஸ்துவின் மரணநேரத்தில் திடீரென்று பூமி முழுவதையும் கவ்வின காரிருளைக் குறிப்பிடுகிறார்.

"அவர்கள் அடையாளம் பார்த்த பின்னர் அவரைக் கயிற்றால் கட்டி இழுத்துக் கொண்டு போயினர். அங்ஙனம் செல்கையில். நீ மரித்தோரை உயிருடன் எழுப்பி செவிடர் கேட்கவும் குருடர் பார்க்கவும், குஷ்டரோகிக

ளும் சுத்தமாகவும் செய்தாயே! இப்பொழுது உன்னையே கட்டவிழ்த்துக் கொள் என்று ஏளனம் செய்தனர். அவரை முகத்தில் துப்பி தலையில் முட்கிரீடம் சூட்டி சவுக்கால் அடித்து அவரைத் தொங்க விடுவதற்கு ஒரு மரத்தை நாட்டினார். அவரை அந்த மரத்துக்கருகில் இழுத்துக் கொண்டு வரும்போது பூமி அந்தகாரப்பட்டது. கடவுள் தம்முடைய தூதர் களை அனுப்பி அவரை அணுகாமல் அவர் களைத் தடுத்தார். அத்துடன் யூதர்களை அவர்களிடம் அழைத்துச் சென்று அடையாளம் காட்டிக் கொடுத்தவனாகிய காரியோத் ஊரைச் சேர்ந்த யூதாஸ் மீது இயேசுவின் சாயலை இறங்கப் பண்ணினார். அவன் இயேசுவின் ஸ்தானத்தில் சிலுவையிலறையப் பட்டான். அவனை இயேசு என்றே எண்ணி னார்கள். மூன்று மணி நேரம் இயேசுவை மரிக்கச் செய்து, அப்பால் அவரை மோட் சத்துக்கு உயர்த்திக் கொண்டார் கடவுள் ஈஸாவே! நிச்சயமாக நான் உம்மை மரிக்கச் செய்வேன் இன்னும் என்னளவில் உம்மை உயர்த்திக் கொள்வேன் நிராகரிப்போருடைய பொய்களில் நின்றும் உம்மைத் தூய்மைப் படுத்துவேன் என்று முன்னறிவித்தது. இப் பொழுது நிறைவேறிற்று. இயேசுவின் சாயலை அல்லது ரூபத்தைப் பெற்றுக் கொண்டவன் சிலுவையிலறையப்பட்டிருக்கையில்





இயேசுவின் தாய் மரியமும் இயேசு ஜெபித்து அவளுடைய புத்திசுவாதீனத்திலிருந்து குண மாக்கியிருந்த பெண்ணும் சிலுவையிலறையப் பட்டவர் அருகில் சென்று அழுது புலம்பி னார்கள். அப்பொழுது இயேசு தாமே அவர்களை அணுகி. யாருக்காக அழுது துக்கங் கொண்டாடுகிறீர்கள்? என்று கேட்கவே உமக்காக என்று பதிலிறுத்தார்கள். உன்னதத்தின் தேவனாகிய கர்த்தர் என்னை உயர்த்தியிருப்பதால். எனக்கு நன்மையும் பாக்கியமுமே கிடைத்துள்ளது. இந்த மனிதனோ என்னைப் போலவே காட்சியளிக்கிறான் என்றார்.

மேலும் வஹாப் இபின் முனாபீ இவ்விதமாகக் கூறுவதுண்டு பரலோகத்திலிருந்து 92 நூல்கள் வரக் கண்டேன். அவற்றில் 72 நூல்கள் கிறிஸ்தவ ஆலயங்களிலும் கிறிஸ்தவர்களின் கரங்களிலுமிருப்பதைக் கண்டிருக்கிறேன். ஒருசிலர் மட்டுமே மீதமுள்ள 20 நூல்களைப் பற்றி அறிவர். இவ்வாறு வகாப் கூறும்பொழுது. நிச்சயமாகவே 66 வேதாகமத்திலுள்ள நூல்களைக் குறிக்கும்.மீதமுள்ளவை தள்ளுபடி ஆகமங்களையும். நாஸ்டிக்குகளின் நூல்களுமாயிருக்க வேண்டும். மீதமுள்ள அந்த நூல்களிலிருந்துதான் குர்-ஆன் வசனங்களை வியாக்கியானம் செய்வதற்குரிய தகவல்களை வகாப் பெற்றுக் கொண்டார் என்றால் மிகையாகாது.

வகாப்பைப் பின்பற்றி அல் டபாரி, வாசகத்தைச்

சற்று மாற்றி இயேசு ஏழு மணி நேரம் காத்திருந்து.அதன் பின்னர் அந்தப் பெண்களைச் சந்தித்தார் என்பதாகும்.

கிறிஸ்தவத்துக்கும் இஸ்லாமுக்கும் உள்ள ஒரு பெரிய வேற்றுமை சிலுவையின் உபதேசம் தான் என்ற போதிலும், பயனுள்ள நம்பத்தகுந்த ஒரு குர் ஆனின் வசனமாவது, பகுதியாவது ஷபீஹ் ஐதீகத்தை விளக்கி சந்தேகத்தைத் தீர்க்க முடியவில்லை. புதுமைகளை வரவேற்பதில் ஆனந்தங் கொள்ளும் விளக்கவுரையாளர்கள் ஏனையோரின் கதைகளையும், புரளிகளையும் ஆதாரமாகக் கொண்டு இந்த நிகழ்ச்சியை விளக்க முற்படுகிறார்கள். இவற்றின் தோற்றமும் துவக்கமும் அந்நிய நாட்டு மதங்களிலும், புராணக் கதைகளிலும் உள்ளன. இஸ்லாமின் மூலாதாரங்கள் என்ற கிளேர் டிஸ்டால் என்பவரின் சிறந்த நூலில் ஆசிரியர் எல்லாவிதமான இஸ்லாமிய மூட நம்பிக்கைகள், புராணக்கதைகள் உபதேசங்கள் ஆகியவற்றை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஆரம்பத்திலிருந்தே ஆராய்ந்து பிரித்துப் பார்த்துள்ளனர். எனினும் தெளிவில்லாத குர்ஆன் பகுதிகளை தீர்க்கதரிசன பாரம்பரியம் எவ்விதத்திலும் விளக்குவதற்கு முயற்சிக்கவில்லை. சுருங்கக் கூறினால், இஸ்லாமிய இலக்கியத்தில் பல்வேறு முரணான கருத்துக்களையும், வியாக்கியானங்களையும் சந்திக்கிறோம்.

### இவற்றிலிருந்து நாம் பெறும் முடிவு என்ன?

இஸ்லாம் தோன்றின காலத்தில் இஸ்லாமிய ஆசிரியர்களை வழிநடத்தினதெல்லாம் கிறிஸ்தவத்திற்கு எதிரான வதந்திகளும், புரளிகளும். பொய்க்கதைகளுமாகும். யூத மற்றும் கிறிஸ்தவ இறையியலில் தேர்ச்சியில்லாதவர்கள்.




குற்றம் கண்டு பிடிக்கிறவர்கள் ஆகியோரின் செல்வாக்குத்தான் இஸ்லாமிய உரை ஆசிரியர்களுக்கு இருந்தது. பைபிள் மீது இருந்த பிடிமானத்தை விட டோசடிக் எபியோனைட்ஸ். நாஸ்டிக்ஸ் முதலானோரின் உபதேசங்களில்தான் அதிகப் பரிச்சயம் கொண்டிருந்தனர்.

இரண்டாவதாக வஹாப் இபின் முனாபிஹ் போன்ற விரிவுரைளாயர்களிடம் இஸ்லாமிய வித்துக்கள் வேகமாக முளைத்துக் கொண்டிருந்ததால். கிறிஸ்தவத்யையும் இஸ்லாமையும் இணைக்க முயற்சித்த போதிலும் அதிகப் பலனடையவில்லை. ஒருவேளை வகாப்பின் கதை வசனங்களில் சில கிறிஸ்துவ போதனைகளும் நெருங்கியிருக்கிறது.

மூன்றாவதாக நற்செய்தி நூல்கள் அறுதியிட்டுக் கூறும் அந்தகாரத்தை வகாப்பும் உறுதிப்படுத்துகிறார். இப்படி இதனை அவர் ஆமோதிப்பதால் குர்-ஆன் யூகிப்பது போல இயேசு சிலுவையிலறையப்படாமல் உயர்த்தப்பட்டார் என்பதை நிராகரிக்கிறார் என்று அர்த்தமாகும். மிகவும் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு தீர்க்கதரிசன விவரம் கூறுவதாவது.

> "இறைத்தூதுவர் ஒருவர் தமது சொந்த ஜனங்களாலேயே இரத்தம் பொங்கி வரப் பயங்கரமாக அடிக்கப்பட்டதை எனது மனக்கண்களாலே காண்கிறேன். தமது முகத்தில் வழிந்து கொண்டிருந்த இரத்தத்தைத் துடைத்துக் கொண்டே. இறைவா எனது ஜனத்தின் அக்கிரமத்தை மன்னியும் ஏனெனில் அவர்கள் செய்வது அவர்களுக்கே தெரிய வில்லை.

என்று பரிந்து பேசினதாக அப்துல்லா இபின் மஸ்ஊத் முஸ்லிம் மற்றும் புகாரியின் ஆதாரத்துடன் எழுதுகிறார். இந்த சமூகத்தில் வருகிற இறைதூதுவர் யார்? யார் இவ்விதமாகப் பரிவுடன், கருணையுடன் பேசியிருக்கக் கூடும்? இது எந்த சந்தர்ப்பத்தில் நடைபெற்றது? இந்தக் கேள்விக்கணைகளுக்கெல்லாம் எங்கே விடை காணலாம்? இன்ஜீலைத் தேடிப்பார்க்கும் எவரும் இது இயேசு கிறிஸ்துவை மாத்திரம் சுட்டிக் காண்பிக்கிறது எனக் கூறுவர். இயேசு ஒருவரே தமது இனத்தவரால் இவ்வளவு இன்னல்களுக்காளாக்கப்பட்டு. கேவலம்! ஒரு புழுவைப்போல் நடத்தப்பட்டு, சிலுவையிலறையப்பட்டார் என்பது துலாம்பரமாக விளங்கும். பழைய ஏற்பாடு முழுவதையும் தேடிப் பார்த்தாலும் இவ்வாறு துன்புறுத்தப்பட்ட ஒரு தீர்க்கதரிசியையும் காணவே முடியாது. இயேசுவோ தாம் சிலுவையில் மரண அவஸ்தைப்படுகின்ற வேளையிலும்.

> "பிதாவே இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக் கிறார்களே என்றார்." (லூக்கா 23:34)

அவருடைய வாழ்க்கையில் எல்லாராலும், தமது பரம பிதாவாலும் கைவிடப்பட்ட மிகவும் இருண்ட நேரத்தில் இந்த விண்ணப்பத்தைச் செய்தார். எனவே அப்துல்லா இபின் மஸ்ஊத் மூலமாக வரும் பாரம்பரியம் வேதாகமம், பரிசுத்தமும் உண்மையுமே என்பது மறைமுகமாகப் புலனாகிறது. மேலும்நேரடியாக மரணத்தை உத்தரிக்காமல் பரலோகம் சென்று விட்டார் என்ற பேச்சையும் பொய்யாக்குகிறது. குர் ஆனும் ஏனைய விரிவுரையாளர்களும் இயேசுவின்





இன்னல்களையும் பாடுகளையும் கூறாமலே விட்டு விடுகின்றனர்.

மேலும் மர்யம் 19:15 மற்றும் 33லும் யஹ்யாவையும் இயேசுவையும் பற்றி கூறும்பொழுது அவர்கள் பிறந்தநாளிலும், இறக்கும் நாளிலும் உயிர் பெற்றெழும் நாளிலும் அவர்கள் மீது ஸலாம் (சாந்தி) நிலைத்திருக்கும் என்று கூறுவதிலிருந்து இயேசு மரித்தார் மரணத்தை தழுவினார் என்பது எவ்வளவு உண்மையாகிறது.

முதலாவதாக, எல்லா முஸ்லிம் அறிஞர்களும் யஹ்யா நிச்சயமாக மரித்தார் என்பதற்கு (மர்யம் 19:15) சான்று பகர்கிறார்கள். எந்த வசனத்தின் ஆதாரத்தில், அதின் அமைப்பின் ஆதாரத்தில் இந்த முடிவுக்கு வந்தார்களோ, அதே வார்த்தைகளும் வசன அமைப்பும் தான் ஈஸாவுக்கும் (மர்யம் 19:33) கூறப்பட்டிருக்கிறது. மேலும் இவ்விரண்டு வசனங்களையும் கூறியவர் ஈஸா மஸிஹ்தான். இப்படியிருக்க யஹ்யாவுக்குப் பொருந்தும் உண்மையை ஈஸாவுக்கும் உகந்தது என்று எடுத்துக் கொள்ள உரையாசிரியர்கள் மறுப்பது. ஆச்சரியமாக இருக்கிறது! ஒரே அர்த்தம் கொள்ளும் இருவாக்கியங்களை இரண்டு வித பொருளில் வியாக்கியானிப்பது பாரபட்சமல்லவா? முறைகேடு அல்லவா? இன்னும் சொல்லப் போனால் நியாயக்கேடு அல்லவா? முந்திய வசனத்தில் 'நான் மரிக்கிறேன்' என்பது யஹ்யாவின் மரணத்தையும்; ஆனால் அதே வார்த்தைகள் 'நான் மரிக்கிறேன்' என்பதனை ஈஸாவின் பிறிதொரு கால மரணத்தைக் குறிக்கிறது. அதாவது அவருடைய இரண்டாம் வருகையில். அதாவது அவர் கூறினதிலிருந்து சுமார்

2000ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தில் திரும்பவும் உலகத்துக்கு வந்து மரிப்பார் என்று அர்த்தப்படுத்துவதற்கு என்ன நியாயம் உண்டு?

எந்தவிதமான ஆதாரத்தைக் கொண்டு வரலாறு குர்-ஆன் பகுத்தறிவு. தர்க்கம் முதலான எதைக் கொண்டும் அல்லாமல் இவை எல்லாவற்றைக் கொண்டும் ஆராய்ந்து பார்த்தாலும் அவரது உடனடி மரணத்தைக் குறிப்பிடுகிறதே அல்லாமல் வெகுதூரத்திலுள்ள நிச்சயமற்ற மரணத்தைக் குறிப்பிடவில்லை. மூன்று அல்லது ஏழு மணிநேரமோ அல்லது மூன்று நாட்கள் மரணமோ, எதுவாயினும் சரி, அது சமீப எதிர்காலத்திலுள்ள மரணத்தையே குறிக்கிறது.

அல்-அஸார் பல்கலைக் கழகத்தில் ரெக்டார் பதவி வகித்த அறிவர் மகம்முத் ஷல்டுட் என்பார் கொடுக்கும் விளக்கமாவது.

இந்த வசனத்தில் வருகின்ற 'தவஃபைதானி' என்ற பதத்திற்குச் சாதாரண மரணம் என்றுதான் பொருள்படும் இதனை நீண்டதொரு தொலைவிலுள்ள காலத்து மரணம் என்று அர்த்தப்படுத்துவது எவ்வளவேனும் பொருந்தாது. இயேசு கிறிஸ்து இப்பொழுது பரலோகத்திலிருக்கிறாரென்றும் இனி ஒரு காலத்தில் திரும்பி வருவார் என்றும். பின்னர் மரிப்பார் என்றும் அர்த்தப்படுத்துவதற்கு ஆதாரம் இங்கு ஒன்றுமில்லை.அவர் வாழ்ந்த காலத்து மக்களையும். அவர்கள் மூலமாய் அவருக்கு நேரிடப்போகும் மரணத்தையுமே சுட்டிக் காண்பிக்கிறது. இறைவன் இயேசுவைப் பார்த்துச் சொன்னதெல்லாம். 'உம்முடைய காலம் நிறைவேறி உம்முடைய மரண நேரம் வரும் பொழுது.





என்னண்டை உம்மை இழுத்துக் கொள்வேன்' என்பதுதான்.அவருடைய சரீர மரணத்தை மட்டுமே குறிக்கிறது. ஆயிர வருட அரசாட்சிக்குப் பின்னர் சாவார் என்று குறிப்பிடவில்லை என்று பர்ரின்டர் என்பாரும் சொல்லர்த்தம் தருகிறார்.

அல் இம்ரான் 3:55 இன் படி இறைவன் இயேசுவைப் பார்த்துக் கூறுவதை உள்ளபடியே மொழிபெயர்த்தால், 'மெய்யாகவே. நான் உம்மை மரிக்கச் செய்வேன்' என்று செய் வினையில் இருக்கிறது. எழுவாய் (Subject) இறைவனாகவும், செயப்படுபொருள் (Object) ஈஸாவாகவும், வினைச்சொல் பயனிலைச்சொல் (Prodicate) மரிக்கச் செய்தல் என்றும் இருப்பதை ஒரு தற்கால முஸ்லீம் அறிஞர் தெளிவுபடுத்திக் காண்பிக்கிறார்.

இஸ்லாமிலும், கிறிஸ்தவத்திலும் கிறிஸ்து என்ற தமது நூலில் நீர் இராபின் சன் கூறுவதாவது.

> "முகம்மதுவைப் பற்றி மூன்று ஆயத்துக்களிலும் (வசனங்களும்) ஈஸாவைப் பற்றி இரண்டு ஆயத்துக்களில் மட்டும் வினைச்சொல் செய்வினையில் இருக்குமாறு வசனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அல்லாஹ் எழுவா யாகவும், நபிகளுள் ஒருவர் செயப்படு பொருளாகவும், இருக்கின்றனர். இந்த ஆயத்துக்கள் எல்லாமே கட்டுக்கோப்பாகவும் ஒரே சீரான இலக்கண அமைப்பாகவும் உள்ளன. அல்லாஹ் மனிதரின் செயல்களின் கண்காணிப்பாளனாகவும் அவரிடம் திரும்பிச்

சேரும் வேளையில் நியாயாதிபதியாகவும் இருக்கிறார்.

'அவர்களுக்கு அப்படித் தோன்றினது' என்று குர்–ஆனிலிருந்து எடுக்கப்பட்ட வசனப் பிரிவை ஆராய்ந்து பார்ப்பது முக்கியமாக இருக்கிறது. 'யாருக்கு?' என்ற கேள்வி தோன்றுகிறது. அது இயேசுவின் மரணத்தீர்ப்பை நிறைவேற்றின யூதர்களையும். ரோமப் போர்ச்சேவகர்களையும் குறிக்கிறது என்று குர்–ஆனே விடையளிக்கிறது. ஆனால் இயேசுவின் சீஷர்கள். அவருடைய தாயாரும் மற்றத்தொண்டர்களையும் பற்றி என்ன அவர்களும் வஞ்சிக்கப்பட்டனரோ? அவர்களுக்கும் அப்படித்தான் காட்சி கிடைத்ததோ? குர்–ஆன் அவர்களைப் பற்றி ஒன்றும் கூறாமல் மவுனமாக இருக்கிறது. அவர்கள் ஏமாற்றப்படவில்லை என்பது தெளிவாகிறது. வேறு விதமாகக் கூறவேண்டுமானால், அவருடைய சீஷர்கள் வஞ்சிக்கப்படவில்லை. அவர்களுடைய கண்களுக்கு எவ்வித மாயத் தோற்றமும் தோன்றவில்லை சிலுவையிலறையப்பட்டவர் தங்களுடைய ஆண்டவராகிய கிறிஸ்து என்று முழுநிச்சயமாய் நம்பினது மட்டுமல்ல அறிந்திருந்தார்கள். அதற்குரிய நிச்சயமான சான்று அல்லது உத்தரவாதம். அவர்களுடைய பிரசங்கங்களும் நிருபங்களும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தையும் உயிர்த்தெழுதலையுமே சுற்றியிருந்தன. அவர்களிடம் கிறிஸ்துவைத் தவிர வேறு ஒரு செய்தியும் இல்லை. வாசிப்பவர்கள் சலித்துப்போகுமளவுக்கு இதையெல்லாம் ஏன் திருப்பித்திருப்பிச் சொல்லுகிறோமென்றால். குர் ஆனைத் தவிர வேறு சரித்திரச் சான்றுகளோ, ஆதாரங்களோ யூதர்களுக்கும்





ரோமையர்களுக்கும் தாங்கள் சிலுவையிலறைந்தது யார் என்பதில் சிறிதளவேனும்ஐயம் தோன்றினதாகக் கூறவில்லை யூதாஸ் காரியோத்து ஏற்கனவே நான்று கொண்டு செத்தான். அவனுடைய உடலை குயவனின் நிலத்தில் புதைத்து விட்டார்கள். ஆதலால் யூதாஸ் இயேசுவுக்குப் பதிலாக சிலுவையிலறையப்பட்டிருக்க முடியாது. மனுஷ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் அவஸ்தையைக் கண்டு ஆதங்கம் அடைந்த இயற்கையே தன்னை மூடிக்கொண்டவுடன் பூமி முழுவதும் அந்தகாரம் சூழ்ந்தது. அதன்பின்னர்தான் இயேசு தம்முடைய ஆவியைத் தம்முடைய பிதாவின் கையில்ஒப்புக் கொடுத்தார். அதாவது.சிலுவையிலறையப்படுவதற்கு முன்பு அல்ல. ஆறு மணிநேரம் சிலுவை மரத்தில் தொங்கின பிறகே ஜீவனை விட்டார்.இயேசுவின் தாயாகிய மரியாளும் ஏனைய சீஷர்களும் சிலுவையினருகே நின்று கொண்டு துக்கம் தாளாமல் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தனர். அவர் மரித்த பின்னரும் பொறுப்பான நபர்கள் அவரைச் சிலுவையை விட்டு இறக்கி, வாசனைத் திரவியங்களிட்டு. புதிய பிரேதச் சீலைகளினால் சுற்ற. ஒருவரும் வைக்கப்பட்டிராத கல்லறையில் பயபக்தியுடன் வைத்தனர். அவர்களுக்கும் அவர் இயேசு கிறிஸ்துதான் என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. அவருடைய உடைகளைத் தங்களுக்குள்ளே பங்கிட்டுக் கொண்டு. எல்லாவற்றையும் மேற்பார்த்துக் கொண்டிருந்த ரோம இராணுவ வீரர்கள் கிஞ்சித்தேனும் சந்தேகப் படவில்லை. நூற்றுக்கதிபதி தனது ஈட்டியால் அவரது விலாவைக் குத்திப்பார்த்து. அவர் மரித்து விட்டார் என்று சாட்சி பகர்ந்தான். அவ்வேளையில் ஏற்பட்ட பூமியதிர்ச்சி அல்லது நிலநடுக்கம் எல்லாரையும் உணர்வடையச் செய்தது.

"மெய்யாகவே, இவர் தேவனுடைய குமாரன்" என்று ரோம இராணுவத்தலைவன் சாட்சிப்படுத்தினான். எல்லாவற்றிற்கும் மேலாக மகுடம் போல் அமைவது கிறிஸ்துவின் காலியான கல்லறையே. சிலுவையிலறையப்பட்டவர் வேறு யாராக இருப்பினும். இப்படி உயிரோடெழும்ப முடியுமா? அது கிறிஸ்துவாக அல்லாமல் வேறு யாராகவாவது இருந்தால் அங்ஙனம் உயிரோடெழும்பத்தான் முடியுமா? அல்லது 40 நாட்கள் வரைத் தம்மடியார்களுடன் சஞ்சரிக்கவும் தரிசனம் அளிக்கவும் முடியுமா?

இவ்வாறு சிலுவையிலறையப்பட்ட நபர் ஒரு 'ஷபீஹ்' (பதிலாள்) என்பது எவ்வளவு அபத்தம். ஆதாரமற்றது என்பதைப் போதுமான. நம்பகமான வரலாற்று சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன என்பதை மீண்டும் வலியுறுத்தத் தேவையில்லை.

"இதில் அபிப்பிராய பேதம் கொண்டவர்கள். அதில் சந்தேகத்திலேயே இருக்கின்றார்கள்-வெறும் யூகத்தைப் பின் பற்றுவதேயன்றி அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது. நிச்சயமாக அவர்கள். அவரைக் கொல்லவே இல்லை' (அன்னிஸாவு 4:157) இன் பின்பகுதி மிகவும் தெளிவில்லாததும். இந்நிகழ்ச்சியைப் பற்றிய விளக்கத்துக்கும். பின்புலத்துக்கும் ஒவ்வாததுமாக இருக்கிறது. இயேசுவின் அடியார்கள் இந்தப் பொறியில் ஷபீஹ் என்ற மாயவலையில் சிக்கவில்லை என்பதைத் தீர்க்கமாக ஆராய்ந்து பார்த்தோம். மேலும்,ரோமர்களும், யூதர்களுக்கும் உண்மையாகச் சிலுவையில் அறையப்பட்டவரின்அடையாளத்தில் சிறிதேனும் சந்தேகம் இல்லை என்று பார்த்து விட்டோம். அப்படியானால்





அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது என்ற சொற்றொடர் எவர்களைக் குறிக்கிறது?

இக்கேள்விக்கு விடை காண்பது மிகவும் எளிதானது 'இதில் எத்தகைய அறிவும் இல்லாதவர்கள்' என்பது அரேபிய தீபகற்பம் முழுவதிலும் பரவியிருந்த பலதரப்பட்ட கிறிஸ்தவக் குழுக்களைக் குறிக்கும். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைக் குறித்து குர்-ஆன் விளக்கிக் கொண்டிருக்கும் பொழுதே அக்காலத்தில் பரவலாக நிலவிய கொள்கைப் பேதங்களையும் இறையியல் மற்றும் சமயச் சார்புகைளயும் பிரதிபலிக்கிறது.வேதாகமக் கிறிஸ்தவம். வேதாகம வெளிப்பாட்டையே மறுதலிக்கும் 'ஷபீஹ்' யூகத்தை முற்றிலும் எதிர்த்து. நிராகரித்து வருகின்ற வேளையில், டோஸிஸ்டஸ், எபியோனைட்ஸ் மற்றும் சமய பேதங்களைக் கொண்டிருப்போர் 'ஷபீஹ்'யூகம்தான் உண்மை போல நம்பி, பிரச்சாரம் செய்து வந்ததினால் இது அவர்களையே குறிக்கிறது.

இவ்வாறு வேதாகம விரோதிகளின் கூட்டத்துடன் அபிப்பிராயத்துடன் சேர்ந்து கொண்டு வேதப்புரட்டர்களின் 'ஷபீஹ்' கருத்தையே உயர்த்திப் பிடிக்க முயற்சிப்பதால். வேதாகமசரித்திர, பகுத்தறிவு, தர்க்கம் முதலான முறைகளுக்கு முரணாகச் செயல்பட்டு குர்-ஆன் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பாதகமாக மாறிவிட்டது. இதற்கெல்லாம் காரணம் குர் ஆனை எழுதின முகம்மது இவர்களிடமிருந்து கற்றவர். பெற்றவர், இவர்களுடைய தாக்கத்திலேயே வளர்ந்து செயல்பட்டு வந்தவர். ஆரோக்கியமான உபதேசங்களை அங்கீகரியாமல், சோதித்துப் பார்க்காமல், வதந்திகளை சத்தியமாகவும், ஊகங்களை உண்மையாகவும் கருதிவந்தார்.

மேலும் விதண்டாவாதம். சமய பேதம், வஞ்சகம், தந்திரம் ஆகியவற்றிற்கு இடம் கொடுத்திருந்த வேதப்புரட்டர்களில் பெரும்பாலோர் இஸ்லாமில் இணைந்து முஸ்லீம்களாக மாறிவிட்டார்கள். இப்பொழுது குர் ஆன் கிறிஸ்தவத்திற்கு எதிர்த்து நிற்கிறதற்கான சூழ்நிலை நமக்கு நன்கு விளங்கும். எனவே இயேசுவின் பதிலாள் கொள்கையை ஆதரிப்போர் வானளாவப் புகழப்பட்டனர். இன்ஜீலில் விசுவாசம் வைத்து இயேசுவின் சிலுவை மரணம் – உயிர்த்தெழுதலை ஏற்றுக் கொள்வோர் மிகவும் இகழப்பட்டனர். நஜ்ரான்னைச் சேர்ந்த மக்களுடன் உரையாடும்பொழுது இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையை முகம்மது நபி அங்கீகரிக்க மறுத்தது இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

மேலும் வேதத்தையுடையோர் எபிரேய மொழியிலிருந்த தோராவைப் படித்து அதற்கு அரபிய மொழியில் விளக்கம் கொடுத்ததைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களைப் பார்த்து முகம்மது எரிச்சல் அடைந்தவராக அவர்கள் கூறுவதை எல்லாம் ஏற்றுக் கொள்ள வேண்டாம். ஜாக்கிரதையாகக் கேளுங்கள் என்று எச்சரித்தது யாவரும் அறிந்த இரகசியமே. இருந்த போதிலும் முகம்மது பல சந்தர்ப்பங்களில் கிறிஸ்தவர்கள், யூதர்களுடன் கலந்துரையாடினார். மதினாவிலுள்ள யூதருடைய ஜெப ஆலயங்களுக்கும் சென்று வந்தார். முகம்மதுவின் முதல் மனைவியாகிய கதிஜாவின் ஒன்றுவிட்ட சகோதரரும் மெக்காவிலிருந்த ஒரு பிரபல கிறிஸ்தவ அறிஞருமாகிய வரக்கா இபின் நவ்ஃபால் என்பவருடன் முகம்மது நெருங்கிய ஐக்கியம் வைத்திருந்தாக முகம்மதுவின் வாழ்க்கைச் சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். தம்முடைய சிறு பிராயத்திலிருந்தே





முகம்மதுவுக்கு இந்தத் தொடர்பு இருந்ததாக ஷீரத் இபின் இஸ்ஸாட் ஹிஷாம் நிச்சயப் படுத்துகிறார். வராக்காவின் தலைமையில்தான் முகம்மதுவின் திருமணமும் நடந்தது. முகம்மது தமக்கு ஹிரா குகையில் கிடைத்த தரிசனத்தை கதிஜாவிடம் கூறினதும். கதிஜா அவரை வராக்காவிடம்அழைத்துச் சென்று ஆலோசனை கூறும்படி சொன்னாள். மெக்காவிலிருந்த விக்கிரகங்களை வணங்க மறுத்து அவற்றை அருவருப்புடன் பார்த்த முகம்மது வராக்காவிடம் தான் ஆவிக்குரிய ஆலோசனையும் ஆறுதலும் பெற்று திடப்பட்டு வந்தார். முகம்மது கதிஜாவை மணக்கும் பொழுது அவர் 25 வயதாக இருந்தார். நபித்துவம் பெறுவதற்கு முன்னர். 15 வருடங்களாக முகம்மது இடைவிடாமல் சத்திய சோதனை செய்து கொண்டே இருந்தார். ஏக தெய்வ வணக்கப்பற்றுடையாரும். எபிரேய அரபிய மொழிகளில் கற்றுத் தேர்ந்தவருமான வராக்கவை விடச் சிறந்த நண்பரோ, வழிகாட்டியோ யார் கிடைக்கக் கூடும்? மேலும் அரபிய மொழியில் மாற்றப்பட்டுக் கொண்டிருந்த எபிரேயருக்கு எழுதின நற்செய்தி நூலின் மேற்பார்வையும் பெற்றிருந்தார். மேலும் அவர் மெக்காவில் பேராயராகப் பணியாற்றினார் என்றும். எபியோனியரைச் சேர்ந்தவர் என்றும் கருதுகிறார்கள். இது உண்மையென்றால். கிறிஸ்துவின் தன்மை, மானிடப்பிறப்பு. சிலுவை மரணம் உயிர்த்தெழுதல் முதலானவைப் பற்றி வராக்காவின் இறையியல் அறிவுரைகள் முகம்மதுவை அதிகமாக வசப்படுத்தியிருக்க வேண்டும்.

முகம்மதுவின் கூட்டாளிகளில் அநேகர் முன்னாள் நஸராக்களும் யூதர்களும் பின்னாளில் பல்வேறு

காரணங்களை முன்னிட்டு இஸ்லாமைத் தழுவினர். இவர்களுள் அப்துல்லா இபின் ஸல்லாம். தமீம் அல்தாரி. அப்துல்லா இபின் சூர்யா மற்றும் பிலால் அல்ஃபாரிஸி முதலில் அஞ்ஞானி மார்க்கத்திலிருந்து. யூத மார்க்கத் துக்கும் பின்னர் கிறிஸ்தவத்திற்கும். பின்னர் இஸ்லாமுக்கும் கட்சித் தாவல் செய்தவர்களில் பிரபலமானவர்கள், இவர்களைத் தவிர முகம்மதுவின் மனைவிகளும் மறுமனைவிகளும் அநேகர் யூத மற்றும் கிறிஸ்தவப் பெண்களாயிருந்தபடியால். அவர்கள் வாய் மூலமாக நாட்டுப் பண்கள் புராணக்கதைகள் போல பழைய புதிய ஏற்பாட்டுக் கதாபாத்திரங்களைப் பற்றி குறைவான அபிப்பிராயங்களை முகம்மது சேகரித்துக் கொண்டு குர்–ஆன் எழுதலானார்.

முகம்மதுவின் கூட்டாளிகளும். பரவலாக மக்கள் மத்தியில் நிலவிய ஆனால் ஆதாரமற்ற. கட்டுக்கதைகளையும், மூடநம்பிக்கைகளையும் வேதவாக்குகள் போல எழுதி வைத்துள்ளனர். ஆனால் அதே சமயம் பைபிளைக் கருத்தூன்றி படிக்க அவர்களுக்கு மனமில்லை. அன்னாருள் தலைசிறந்தவர்கள் குர்ஆனின் விளக்கவுரை ஆசிரியரான அப்துல்லா இபின் அல் அப்பாஸ் அப்துல்லா இபின் அம்ரு இபின் அல்–அஸ், மற்றும் அபூ ஹுரைரா ஆவர்.

முகம்மது தமது தொண்டர்கள் தோரா மற்றும் இன்ஜிலை வாசிப்பதற்குத் தடை விதிக்கவில்லை என்றாலும். எப் பகுதிகளை வாசிக்கலாம் என்ன காரணங்களுக்காக அவற்றை வாசிக்கலாம் என்பதனை தெளிவாக்கவில்லை. ஆனால் வேறுசில அதிகாரபூர்வமான ஆசிரியர்களின் கருத்து முஸ்லீம்கள் குர்–ஆனைத் தவிர வேறு எந்த சமய நூல்களையும் படிக்கக் கூடாது என்று நபிகள்





ஆணையிட்டிருந்தார் என்பதாகும்.

“இஸ்ராயீல் மக்களிடம் நீங்கள் கேட்ட ஒரு ஆயத்து என்றாலும், மறுப்பின்றி. அதனை நமது மக்களுக்கு வழங்குங்கள்” என்று நபிகள் கூறினதாக இமாம்புகாரி ஸாஹிஹ் என்ற தமது நூலில் கூறியிருப்பதாக அம்ரு–இபின்– அல்–அஸ் கூறுகிறார்.

“நான் குர்–ஆனையும், தோராவையும் நேற்று இரவே படித்து விட்டேன்” என்று அப்துல்லா இபின் ஸலாம் நபிகளிடம் கூறினவேளையில். அவர் இதனை ஓரிரவிலும் மற்றதை இன்னொருஇரவிலும் படிக்க வேண்டும் என்று பதிலிறுத்ததாக அல்–ஹஃபீத் அல்–தாகபி குறிப்பிட்டுள்ளார்.

ஸஹீஹ் முஸ்லீம் என்ற நூலில் ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வெள்ளிக்கிழமை பொதுக் கூட்ட பிரார்த்தனைக்குப் பிறகு. நபிகள் மக்களை மேலும் சற்று நேரம் அமர்ந்திருந்து விட்டுப் போகுமாறு பணித்தார் என்று குவேஸ் என்பவரின் மகள் பாத்திமா அதிகாரபூர்வமாக தெரியப்படுத்துகிறார். “அல்லாஹ்வின் நாமத்தில் நான் உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்பும் ஒரு அவசர காரியம் உண்டு. அதனால் தான் நான் உங்களைத் தாமதப்படுத்தினேன் நான் உங்களுக்கு ஏற்கனவே எச்சரித்து வந்த ‘தஜ்ஜால்’ என்ற அந்திக் கிறிஸ்துவைப் பற்றி கூறி வந்ததற்கும் இப்பொழுது இஸ்லாமில் சேர்ந்து விட்ட கிறிஸ்தவரான தமீம் அல்தாரி கூறுவதற்கும் நிறைய ஒற்றுமை இருக்கிறது” என்றார்.

இது புதிய ஏற்பாட்டின் வெளிப்படுத்தல் ஆகமம்

13-ஆம் அதிகாரத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளன 'மிருகம்' என்பதைப் பற்றினதாகும். இந்த சம்பவத்தின் உள்நோக்கம் தாம் ஒரு தீர்க்கதரிசி அல்லது இறைத்தூதுவர் என்பதை கிறிஸ்தவர்களும், முஸ்லீம்களும் அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான்.

கிறிஸ்தவர்கள், யூதர்கள் நடுவில் பரவலாக நிலவி வந்த கிராமீய கதைகளும், ஆதாரமற்ற பாரம்பரியங்களும் ஹதிஸுக்குள்ளும். குர் ஆனின் அர்த்த உரைகளுக்குள்ளும் ஏன் குர்ஆனின் பல வசனங்களுக்குள்ளுமே நுழைந்து விட்டன. என்பது மிகவும் வெளிப்படையாகத் தெரிகிறது. பல்சமய ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துடன் கவனிக்கும்போது வேதாகமத்திலிருந்து தள்ளுபடியான ஆகமங்களிலிருந்தும் யூத-கிறிஸ்தவ புராணக்கதைகளிலிருந்தும் தான் குர்-ஆனின் மூலப்பொருட்கள் சேகரிக்கப்பட்டன என்று புலனாகிறது. ஆதலால் சரித்திர பூர்வமான கிறிஸ்துவின் சிலுவை மரணம் இந்தக் கிழவி கதைகளினாலே பாதிக்கப்பட்டு. திரித்துக் கூறப் பட்டு. இஸ்லாமின் விபரீதமான வியாக்கியானத்துக்கு இலக்காகி விட்டது என்பது திண்ணம். அதில் ஆச்சரியமுமில்லை.

'முத்தவாஃபிக்கா' என்ற பதத்தின் அர்த்த நுட்பத்தை மேலும் தெளிவாக அறிந்து கொள்வதற்கு இன்னும் இரண்டு குர்-ஆனின் வசனங்களைச் சிந்திக்கலாம்.

> "மர்யமுடைய குமாரர் மஸீஹ் இறை தூதரேயன்றி வேறில்லை. இவருக்கு முன்னரும் தூதர்கள் பலர் வந்து சென்று





> விட்டனர் (மரித்து விட்டனர்) - அல் மாயிதா 5:75

> "முஹம்மது (ஸல்) இறைவனின் தூதரே அன்றி வேறு அல்லர். அவருக்கு முன்னரும் அல்லாஹ் வின் தூதர்கள் பலர் (காலம்) சென்று விட்டார்கள். அவர் இறந்து விட்டதால் அல்லது கொல்லப்பட்டால்....." அல் இம்ரான் 3:144.

இவ்விரு வசனங்களிலிருந்தும் பெறப்படும் முக்கியமான உண்மை. இந்த இறைதூதர்களுக்கு எல்லாம் ஒன்று போல் சம்பவித்தது-அவர்களுக்குள் காணப்படும் ஒற்றுமை இதுதான் அவர்களெல்லாரும் மரித்தார்கள். குர்-ஆனின் படி இயேசுவும் முகம்மதுவும் மரித்தார்கள். இருவருக்கும் ஒரே முடிவுதான் இறப்புதான் என்று குர்-ஆன் கூறுகிறது. அவர்களுக்கு முன் பிறந்த தீர்க்கதரிசிகள் கடந்து போனது போலவே- மாம்சமான யாவருக்கும் உள்ள முடிவு போலவே- இவர்களிருவரும் கடந்து (மரித்துப்) போய்விட்டனர். இயேசுவோ, முகம்மதுவோ எவ்விதத்திலும் விதிவிலக்கு அல்லர். இவ்வாறு இறந்து போனவர்களுள் இயேசு கிறிஸ்துவும் ஒருவர் என்று பல வசனங்களின் மூலமாகத் தெளிவு படுத்தும் அதே குர்-ஆன். எவ்வாறு இயேசுவை மட்டும் மரணத்துக்கு விதிவிலக்காக்கும்? அவருக்கு வேறு ஒரு முடிவை அறிவிக்கும்? முகம்மது மரித்தது போலவே இயேசுவும் மரித்தார். அதாவது முகம்மது சிலுவையிலறையப்படவில்லை. இயேசுவோ சிலுவையில் அறையப்பட்டு ஜீவனைக் கொடுத்தார்.

இவ்விரு வசனங்களின் அமைப்பும் வார்த்தைகளில் மட்டுமல்ல. இலக்கண ரீதியிலும் ஒன்றாகவே இருக்கின்றன.

இரண்டும் ஒரே அர்த்தத்தையே கொடுக்கின்றன. முந்தின காலங்களிலுள்ள வியாக்கியானிகள். இயேசுவுடன் பிற இறைத் தூதர்களை ஒப்பிடும் பொழுது. மற்றவர்களின் மரணத்தைக் குறிப்பிடாமலிருக்க அதிகம் முயற்சித்திருக்கின்றனர். கிறிஸ்துவுக்கும் அவருடைய தாயாருக்கும் தெய்வீகத்துவத்தை உரிமை பாராட்டுவதை குர்–ஆன் வன்மையாகக் கண்டிக்கிறது. மற்ற தீர்க்கதரிசிகளோடு ஒப்பிடும்பொழுது இயேசுவும் அவருடைய தாயார் மர்யமும் வெறும் மனுஷர்கள்தான்.வேறு தெய்வீகத்தன்மை அவர்களுக்கு இல்லை என்று வலியுறுத்துகிறது. அதற்குப் பதிலாக அவர்களிருவரும் எல்லாவிதத்திலும் மனுஷர்கள்தான். மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்கள் தான் என்பதை நிச்சயப்படுத்துவதில் தீவிரமாக இருந்தனர். இந்த உண்மை முகம்மதுவின் காரியத்திலும் விளங்கிற்று. உஹ்த் (யுகுது) என்ற இடத்தில் நடைபெற்ற சண்டையில் முகம்மது அநேகமாகக் கொல்லப்பட்டார். அதனைப் பின்புலமாகக் கொண்டு தான் அல் இம்ரான் 3:144 ஆயத்து எழுதப்பட்டது. அந்த ஆயத்தின் ஒருபகுதி இயேசுவின் மனுஷீகத்தையும், அவரும் மரணத்திற்குரியவர் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

## முடிவுரை

முடிவாக மிகவும் சிக்கல் நிறைந்த ஒரு பொருளின் மீது இந்தச் சிறிய ஆய்வு முயற்சி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த ஆய்வுப் பொருளானது, கிறிஸ்தவ விசுவாசத்தின் தனிச்சிறப்பு வாய்ந்த ஆய்வுப் பொருளாக விசுவாசிக்கிறோம். அதே வேளையில், இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப் பட்டதையும், அவர் மரணத்தையும்





மறுதலிக்கும் நம்பத்தகுந்த வசனப் பகுதியோ, வரலாற்றுடன் தொடர்புள்ள சான்றுகளோ அல்ல தொல் பொருள் ஆராய்ச்சி ஆதாரமோ அல்லது மெய்யானது இல்லை என்று நிரூபிக்கக்கூடிய ஆவணங்களோ குர்–ஆனில் நாம் காண முடியவில்லை. ஆனால், எந்தக் கிறிஸ்தவர்க்கும், பாதுகாத்து. பதிவேற்றப் பட்ட பரிசுத்த வேதாகமம் மிகவும் உண்மையானது என்று உறுதிப்படுத்தக் கூடிய நலமான வேதபகுதிகளும் முதன்மை ஆவணங்களும் உள்ளன.

ஆகையால், கிறிஸ்தவர்களாகிய நாங்கள், பரிசுத்த வேதாகமத்தில் உள்ளவைகளுக்கு எதிராக மற்ற மதங்களின் புனித நூல்களில் காணப்படுகிற பகுதிகளை புறக்கணிக்கிறோம். மேலும், கிறிஸ்தவத்திற்கு எதிரான கொள்கையுடையவர்களின் தனிக் குழுவானவர்கள் எதை விசுவாசித்தாலும் , யோசித்தாலும் அதை நாம் அதில் உறுதியாக அக்கறை கொள்வதில்லை. நம்முடைய விசுவாசமோ, கடவுள் நமக்கு வெளிப்படுத்தியுள்ள பரிசுத்தமான தெய்வீகமான அகத்தூண்டுதலின் அடிப்படையில் உண்டானது. ஏனெனில், பரிசுத்த வேதாகமம் எல்லாம் கடவுளுடைய ஏவுதலால் ஆனது. கடவுள் புத்தகத்திற்கு எதிரான எந்த உபதேசமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.

## வினாடி வினா

## கிறிஸ்து மெய்யாகவே சிலுவையிலறையப்பட்டாரா?

அன்பார்ந்த நேயரே. நிவிர் இந்த நூலை ஒறுமுறை கவனமாக படித்துவிட்டிரென்றால். கீழ்க்காணும் வினாக்களுக்கோ அதற்கு அதிகமாகவோ சரியான விடை எழுதி அனுப்புவீர் என்றால் வேறொறு நல்ல நூலை இலவசமாக அனுப்பி வைப்போம்.

1. பரிசுத்த வேதாகமத்தின்படி மனிதனுடைய நித்தியமான விதி (நித்தியத்தை எங்கே கழிக்கப்போகிறான்) என்பது எப்படி நிர்ணயிக்கப்படுகிறது?
2. இஸ்லாமின்படி இரட்சிப்பு எதனைச் சார்ந்துள்ளது?
3. இயேசுதான் மனிதனுடைய பாவத்துக்காக சிலுவையிலறையப்பட்டார் என்பதைப் பற்றி இந்நூலாசிரியர் எந்த விதத்தில் நிரூபிக்கின்றார்?
4. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை முஸ்லிம்கள் மறுப்பதின், (நிராகரிப்பதின்) நோக்கம் என்ன?
5. எந்த ஆதாரத்தின் அடிப்படையில் கிறிஸ்து மரிக்கவில்லை என்று முஸ்லிம்கள் கூறுகின்றனர்?
6. யூதாஸ்காரியோத் இயேசுவுக்குப் பதிலாக சிலுவையில் மரித்தான் என்று கூறுவது எவ்வாறு பொருந்தாது?
7. யூதாஸ் மரணத்திற்கு முன்பாக நடந்து ரெகள்ளும் விதம் இயேசு தன் மரணத்திற்கு முன்பாக எவ்விதமாய் நடந்துக் கொள்ளும் விதத்திலிருந்து எவ்விதமாய் வித்தியாசப்படுகிறது?





8. சிலுவை மரணத்தைப்பற்றி அல்-ராஸி வரிசைப்படுத்தியுள்ள ஆறுமுரண்பாடுகளை எடுத்தெழுதுக.
9. ஆறுமுரண்பாடுகளுக்கும் அல்-ராஸி கூறும் பதில்கள் எவை?
10. அல்-ராஸியின் பதில்களுக்கு இந்நூலாசிரியர் எவ்விதத்தில் பதிலுறைக்கின்றார்?
11. முகம்மதுவைத்தவிர வேறெந்தக்குழுவினர்கள் எல்லாம் கிறிஸ்துவுக்குப் பதிலாக இன்னொருவர் அறையப்பட்டார் என்ற ‘ஷபீஹ்’ ஊகத்தைப் போதித்தனர் அவர்களுக்கு நேர்ந்தது என்ன? சரித்திரத்தில் முதலாவது பிராயச்சித்தக் கிரியை எது? அதன் நோக்கம் என்ன?
12. துணிகரமாய் ஒரு பொய்யை தன் மக்களை 600 வருடங்களுக்கு மேலாக நம்பும்படி அனுமதித்த ஒரு கடவுளையும், தன் வாக்குத்தத்தங்களின்படி நடந்து தன் வார்த்தையின் மேல் நிற்கும் ஒரு கடவுளையும் ஒப்பிடுக. நீங்கள் யாரைச் சேவிப்பீர்கள்?
13. சரித்திரத்தில் முதலாவது பிராயச்சித்தக் கிரியை எது? அதன் நோக்கமென்ன?
14. இஸ்லாமில் மீட்பின்கிரயம் என்பதற்கும் வேதாகமத்தில் பிராயச்சித்தபலி, கிருபாதரபலி என்பதற்கும் என்ன தொடர்பு உண்டு?

15. இயேசு கிறிஸ்து தம்மைப்பற்றி என்ன சாட்சி பகர்ந்தார்? அது எதனை நிரூபிக்கிறது?

16. அஞ்ஞானிகளின் ஏடுகளிலிருந்து கிறிஸ்துவின் மரணத்தைப்பற்றிய குறிப்புகளிலிருந்து நாம் என்ன அறியலாம்?

17. இயேசு கிறிஸ்துவைப்பற்றி யூத ஆவணங்கள் எவற்றில் ஒத்து இருக்கின்றன?

18. ஆதிச்சபையின் 'போதகப்பிதாக்களின்' சாட்சி எவ்வாறு முக்கியத்துவமுடையது?

19. ஆதிச்சபையின் முன்னோடிகளான 'போதகப்பிதாக்கள்' என்று அழைக்கப்படுவோரின் நூல்களில் அவர்கள் குறிப்பிட்டுள்ள திருவசனங்களிலிருந்து பெறப்படும் உண்மை யாது?

20. கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைப்பற்றி வேறு என்ன சரித்திர சான்றுகள் உண்டு?

21. இறைத்தூதர்களை 'நபிமார்களை' பற்றி குர்-ஆன் குறிப்புகள் கூறுவதென்ன? இயேசு ஒரு நபியா (இறை தூதவரா)?

22. ஏன் அல்-ராஸி என்ற விரிவுரையாளர் மாத்திரம் சொந்தக்கருத்து எதுவும் கூறாமல் சிலுவை மரணத்தைப்பற்றி மற்ற ஆசிரியர்களின் கருத்துக்களை வகைப்படுத்தியுள்ளார்?





23. 'முத்தவாஃபிக்கா' என்ற அரபியச்சொல்லின் அர்த்தங்களும் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் முரணாயிருப்பதற்கு ஒரு சில உதாரணங்கள் தருக?

24. "அல்லாஹ் எல்லாம் அறிந்தவன்" "கடவுளுக்குத் தான் எல்லாம் தெரியுமே" என்று அல்-ராஸி தமது தொகுப்பின் முடிவில் கூறுவது நமக்கு எதனை வெளிப்படுத்துகிறது?

25. குர்ஆனில் 'முத்தவாஃபிக்கா' என்ற வார்த்தை என்ன அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது?

26. சூரா 4:157 ஐப்பற்றி இந்நூலாசிரியரின் கருத்து என்ன?

27. அன்னிஸாவு சூரா 4:157 மூலகாரணம் நோக்கம் என்ன? அதற்கும் ஆலு இம்ரான் 3:55க்கும் உள்ள தொடர்பு என்ன?

28. அவர்களுக்கு 'அப்படித் தோன்றினது' என்ற சொற்றொடரின் அர்த்தம் என்ன? அது இப்பொழுதுள்ள அனர்த்தமாக மாறினது எவ்வாறு?

29. டோஸட்டிஸ்ட்ஸ், எபியோனைட்ஸ் மற்றும் சமயபேதக் கிறிஸ்தவ குழுக்களின் தாக்கம் இஸ்லாமின் துவக்கத்தில் எவ்வாறிருந்து?

30. அன்னிஸாவு 4:157ன்படி "அவர்களுக்கு இதில் எத்தகைய அறிவும் கிடையாது" என்பது யாரைக்குறிக்கிறது? அவர்கள் செய்தது என்ன?